வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபாற்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 ஆனி திங்கள் 22-ம் நாள் (5—7—1964) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 24 | இதழ் 6

## நியாயமான தமிழ்ச்சட்டம், மாவட்டசபை

# மசோதா எப்படி அமையும்?

## அரியணை உரை பற்றி தமிழரசு பா. குழு

அரியணை உரையினை நோக்கும்போது இரண்டுவிடயங்களே நமது கவனத்தை ஈர்க்கின்றன. ஒன்று மொழிப்பிரச்சினை; அடுத்தது மாவட்ட சபைகள். 1960-ம் ஆண்டு யூலை மாதத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் திறப்பு விழாவில் கூட இவை கூறப்பட்டன. ஆனல் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

இவ்வாறு தமிரழசுக்கட்சியின் பாராளுமன்றக் குழு, அரியணை உரை பற்றிக் குறிப்பிடும்போது கருத்து வெளியிட்டுள்ளது.

"அரியணை உரையையிட்டு விமர்சிக்குமுன்னர் என்ன வகை நடவடிக்கைகள் எடுபடப்போகின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம். குறிப்பாக தமிழ் மொழி உபயோக மசோதாவிற்கான சட்டங்களிலும், மாவட்டசபைகள் மசோதாவிலும் என்னென்ன விதிகளும் சரத்துக்களும் சேர்க்கப்படவிருக்கின்றன என்பதையும் பொறுத்திருந்து அவதானிக்கவேண்டியிருக்கிறது" என்று பாராளுமன்றக் குழுவினர் மேலும் கூறியுள்ளனர்.

# நாடற்றவர் வேலை இழப்பர்

## சீன-ரஷ்ய தூதர் உறவு துண்டிக்கப்படும்?

ரஷ்யாவுடன் உள்ள தூதர் உறவை முறித்துக்கொள்ள கொம்யூனிஸ்டுச் சீனு தயாராகி வருவதாக அரசியல் வட்டாரங்களில் பலமான அபிப்பிராயங்கள் உலவி வருகின்றன. மாஸ்கோவில் உள்ள சீனத் துதரக வாயலில், அங்கிருந்து கொண்டு செல்வதற்கான மிக அசாலாரணமான அளவுக்குப் பெரிதான மூட்டைமுடிச்சுக்கள் காணப்பட்டன என்பதும் மேற்படி செய்திக்கு ஆதாரமாகச்சுட்டிக்காட்டப்படுகிறது.

ரஷ்ய பத்திரிகைகள் இம்மாத ஆரம்பத்தில் சீன எதிர்ப்புத் தாக்குதலை மீண்டும் ஆரம்பித்ததால், சீனு ரஷ்யாவுடன் உள்ள தூதர் உறவைத் துண்டித்துக் கொள்ளக்கூடும் என்று

(9-ம் பக்கம் பார்க்க)

## ஆண்டு முடிவிற்குள் அமுலாகும் திட்டம்

பொதுத் துறையிலோ தனியார் துறையிலோ கடமையாற்றும் இந் நாட்டுப் பிரசைகள் அல்லாதவர்களை இந்த ஆண்டு முடிவதற்குள் பதவியிலிருந்து வெளியேற்ற அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது. தலை நகரிலும், இதர சில நகரங்களிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் பெரும்பாலும் மலைநாட்டைச் சேர்ந்த தமிழ் வாலிபர்கள் கடமையாற்றி வருகிறார்கள். தனியார் துறையில் மட்டுமல்லாது பொதுத் துறையிலும் அவர்கள் கடமையாற்றி வருகிறார்கள். அரசாங்கம் இந்த ஆண்டு முடிவிற்குள் விதிக்கவிருக்கும் இத்தடையின் மூலம் நாடற்றவர்கள் என்று கூறப்படும் இவர்கள் அனைவரும் வேலைகளை இழக்க வேண்டிய நிலை உருவாகும் என அஞ்சப்படுகிறது. தோட்டங்களிலிருந்து தமிழ்த் தொழிலாளர்களை வெளியேற்றவும் இத்தடை உதவியாக இருக்குமாம்.

அரசாங்கத்தின் நடப்பு வருட வேலைத் திட்டம் பற்றி மாதேசாதிபதியினுல் வாசிக்கப்பட்ட அரியணை உரையிலும் வேலை வாய்ப்புகளை வழங்குவதில் இலங்கையர்களுக்கு முதலிடம் தரப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

'நாடற்றவர்கள்' வேலைகளைத் துறக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது என்றும் அரசாங்கம் விதிக்க விருப்பதாகக் கூறப்படும் தடை உத்தரவினுல் மலைநாட்டு வாலிபர்களே பெரிதும் பாதிக்கப்படவிருக்கிறார்கள். இதனுல் 'நாடற்ற' மக்களிடையே கொந்தளிப்பு ஏற்படலாமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கல்வி வெள்ளை அறிக்கையும் இந்த ஆண்டில் அமுல் நடாத்தப்படும். வெள்ளை அறிக்கையை அமுல் நடாத்துவதன் மூலம் மலைநாட்டில் உள்ள தோட்டப் பாடசாலைகள் அனைத்திலும் சிங்களம் போதனு மொழியாக்கப்படலாம். இதன் மூலம் மலைநாட்டுத் தமிழ்ச் சிறுர்களின் தொண்டைக்குள் சிங்களம் வலிந்துபுகுத்தப்படும்.

அரசாங்கம் இந்த ஆண்டு முடிவிற்குள் அமுல் நடாத்தவிருக்கும் மற்றுமொரு திட்டம் வட கிழக்கு மாகாணக் கரையோரப் பகுதிகளின் பாதுகாப்பை பலப்படுத்துவதாகும். பாதுகாப்பை பலப்படுத்துவது என்ற பெயரில் பெருந்தொகை இராணுவம் இப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் எனக் கூறப்படுகிறது. ஏற்கனவே வட பகுதியில் இராணுவத்தினரின் அட்டகாசம் எல்லைமீறிச் சென்றுள்ளது மென்மேலும் இராணுவத்தினரை அந்தப் பகுதிக்கு அனுப்பிவைப்பதால், தமிழ்பேசும் மக்களுக்கு இன்னல்கள் அதிகரிக்குமென அஞ்சப்படுகிறது.

நாட்டில் உள்ள சகலவங்கிகளையும் இலங்கையர் மயமாக்கவும் அரசாங்கம்முடிவு செய்துள்ளது. இலங்கை வங்கி, மக்கள் வங்கிபோன்று சகல வங்கிகளும் இலங்கையர் உடமையாக்கப்படுமாம். இத் திட்டமும் இந்த ஆண்டு முடிவிற்குள் அமுல் நடாத்தப்படும் என்று தெரியவருகிறது. திருகோணமலைத் துறைமுகமும் இந்த ஆண்டு முடிவிற்குள் தேசியமயமாக்கப்பட்டு விடுமாம்.

திருகோணமலையில்

# சிங்களக் குடியேற்றம்

## நாகநாதன் தலையீட்டால் காணி வினியோகம் ரத்து

திருகோணமலைக் கருகாமையிலுள்ள பெரிய குளத்தை அண்டிய முடிக்குரிய பூமியை சிங்களவர்களின் குடியேற்றத்துக்கு வழங்கப்படுவதை டாக்டர் நாகநாதன் தலையிட்டுத் தடுத்திருப்பதாகத் தெரிகிறது. 10 வருடங்களுக்கு மேலாக இங்கு வசிப்பவர்களுக்கும், தம்பலகாமத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்குமே காணி வழங்கவேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பெரிய குளம் பகுதியில் முடிக்குரிய காணிகளை வழங்குவதற்கான காணிக்கச்சேரி அறிவித்தல்கள் வெளியாயின. கடந்த 29ம் திகதி நடைபெறுவதாகவிருந்த காணிக் கச்சேரி டாக்டர் இ. மு. வி. நாகநாதவின் தலையீட்டால் பின்போடப்பட்டுள்ளது.

கந்தளாய் குடியேற்றப் பிரதேசத்திலுள்ள 7ம் பிரிவில் வசிக்கும் சிங்கள விவசாயிகளின் உறவினர்களுக்கே இப் பிரதேசத்தில் காணி வழங்குவதற்கான ஏற்பாட்டைதிருகோணமலை அரசாங்க அதிபர் செய்திருந்தார். இப் பிரதேசம் தமிழ் பிரதேசமாயிருப்பதால், மூதூர், தம்பலகாமம் போன்ற தமிழ்பேசும் மக்கள் வதியும் பிரதேசங்களில் குடியிருக்கும் விவசாயிகளுக்கே இப்பூமி வழங்கப்படவேண்டுமென்று காணி அமைச்சரை டாக்டர் நாகநாதன் கேட்டுக்கொண்டார்.

இதன்படி, பெரியகுளத்தில் 29ம் திகதி நடைபெறுவதாகவிருந்த காணிக் கச்சேரி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 10 வருடங்கள் இப் பிரதேசங்களில் தொடர்ந்து குடியிருந்த காணியற்றவர்களுக்கும், தம்பலகாமம் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பிரிவில் குடியிருக்கும் காணியற்ற விவசாயிகளுக்கும், காணிவழங்கவேண்டிய முறையில் காணிக்கச்சேரி நடாத்தும்படி காணி அதிகாரி கட்டளை பிறப்பித்துள்ளதாகத் தெரியவருகிறது.

# ஆளும் கட்சிக்குள் பிளவு!

## சி. பி. டி. குழு வெளியேறும்

சுதந்திரக் கட்சிக்குள் மீண்டும் கோஷ்டி மனப்பான்மை தலைதூக்கியுள்ளது. உதவி மந்திரிகள் நியமனத்தின் மூலம் கூட்டரசாங்கத்தை எதிர்த்தவர்கள் பழிவாங்கப்பட்டு விட்டார்கள் என்று சி. பி. டி. சில்வா கோஷ்டியினர் கருதுகிறர்களாம். இதன் விளைவு இக்கோஷ்டியினர் சுதந்திரக் கட்சியிலிருந்து இராஜினமா செய்யுமளவிற்கு வளரக்கூடும என்று அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

உதவி நீதிமந்திரியாக இருந்த திரு. பி. பி. விக்கிரம சூரியா கூட்டரசாங்கத்தை எதிர்த்த கோஷ்டியினரில் ஒருவராவர். அவர் பிரதமருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கூட்டரசாங்க—எதிர்ப்பு மகஜரில் கையெழுத்திட்ட 4 பேர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. புதிய உதவிமந்திரிகள் நியமனத்தின்போது இவர் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இராஜினமா செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டாராம். இதனுல் சி. பி. டி. கோஷ்டியினர் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளார்களாம், கூட்டாட்சியை எதிர்ப்பவர்களைப்பழி

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய கர்த்தாவுக்கு பண்பு அவசியம்

எழுத்தாளன் பண்புக்கு இலக்கியமாகத் திகழ வேண்டும். அமைதியும், அடக்கமும் அவனது அணிகலனாக இருக்க வேண்டும் என்பது திரு. பொன்னுத்துரையின் நோக்கம். அதற்கு ஏற்ப தனது வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டவரும் கூட. அவரது சிறுகதைகளில் எளிமையும் இனிமையும் இழையோடும். ஆசிரியராகக் கடமையாற்றும் இவருக்கு குழந்தைகள் என்றால் உயிர். குழந்தைகளை மையமாக வைத்து சிறுகதைகளை ஆக்குவதில் அவருக்குத் தனிப் பிரியம்.

'நான் எப்படி எழுத ஆரம்பித்தேன்?'—அது எனக்கே இப்போது ஒரு பெரிய புதுமையாகத்தான் இருக்கிறது. பலர், பட்டியல் வைத்துக் கொண்டு எழுதுவதைப் போல் எந்த ஒரு எழுத்தாளரும் நான் எழுத்துத் துறையில் காலடி எடுத்து வைப்பதற்கு வழிகாட்டியாக இருக்கவில்லை. எந்த ஒரு எழுத்தாளருடனும் நான் ஒட்டி உறவாடிக் கொண்டு திரிந்ததுமில்லை. ஆனால் பத்திரிகைகளும் புத்தகங்களும் மனதிலெழுந்த தணியாத ஆசையும் சேர்ந்தே என்னை

## ஏப்படி எழுத ஆரம்பித்தேன்

எழுத வைத்தன என்று சொன்னால் அது முழுக்க முழுக்க உண்மையாகும். ஆம்! நிறையப்படித்தேன்; ஆர்வம் கொண்டேன்; சிந்தித்தேன்; எழுதினேன்—அவ்வளவுதான்!

### எச்சரிக்கை

இன்றைய எழுத்துலகில் இயற்கையான கலைஞானம் அறவே இல்லாதவர்கள் கூட, ஒரு எழுத்தாளருடன் ஐக்கியமாகி அவருக்குத் துதிபாடுவதனாலும், அவர் சார்ந்த ஊருக்குதவாத கொள்கையை இவர்களும் சார்ந்து விட்டதாக நெற்றியில் 'சிவப்பு லேபல்' ஒட்டிக் கொள்வதனாலும் அவர் எழுதிக் கொடுப்பதை இவர்கள் தமது உரிமையாக்கி 'எழுத்தாளர்கள்' என்ற பெயரில் நடமாடுகிறார்கள். இப்படிப்பட்ட இலக்கியப் போலிகளின் முகமூடிகள் கிழித்தெறியப்பட்டு, எழுத்துலகிலிருந்து அவர்கள் விரட்டியடிக்கப்பட வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும். கலை ஞானம்பெற்ற உண்மை விதைகளின் முன்னே, இப்படிப்பட்ட போலி விதைகள் தூசிக்குச் சமனாயிருந்தாலுங்கூட, இப்படிப்பட்ட இலக்கியப் போலிகளிடம் எழுத்துலகம் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

### அமைதி

கற்றதைக் கொண்டு அமைதியாக, சுயமாகச் சிந்தித்தேன்; மனதில் பட்டதைச் சுயமாக எழுதினேன். அந்தவகையில் இன்றும் நான் பெருமைப்படுகிறேன். எழுத்தாளன் என்றால் 'தாம் தோம்' என்று தன்னைப் பற்றிப் பேசித் தீர்த்துக் கொண்டு, 'பாட்' அடித்து விளம்பரம் செய்து கொண்டு, பெரிய மனிதர்கள் என்று சொல்லப்படுபவர்களின் பின்னால் எப்போதும்வால்பிடித்துக்கொண்டு, தெரிந்தாலும் தெரியா விட்டாலும் எந்தநிகழ்ச்சியிலும் பங்கெடுத்து, 'நானும் ஒரு எழுத்தாளன்' என்று பிரச்சாரம் செய்து கொண்டு திரிய வேண்டும் என்பதை தான் எப்போதும் வெறுப்பவன். 'இலக்கியம் படைப்பவன் அமைதியையும், அடக்கத்தையும் படைத்தவனாக இருப்பான்' என்பதுவே எனது கொள்கை—எண்ணம். 'ஆமை ஆயிரம் முட்டைகளை இட்டுவிட்டும் அமைதியாகப் படுக்கும்; கோழி ஒரேயொரு முட்

"பொன்னு"

(ஆ. பொன்னுத்துரை)

டையை இட்டுவிட்டு ஓய்வில்லாமல் கத்தும்'—இப்படிப் பழமொழி சொல்வார்களல்லவா?

### நானடைந்த மகிழ்ச்சி

வயது பதின்மூன்று. எஸ். எஸ். ஸி. முதலாம் வருடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் எங்கள் மொழி ஆசிரியர் ஒரு கற்பனைக் கதை எழுதும்படி கூறினார். எல்லோரும் எழுதினோம். எனது கதையைப் படித்துப் பார்த்த ஆசிரியருக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் தாங்கவே இல்லை. "பொன்னுத்துரையின் கதை பிரமாதமாயிருக்கிறதே! இப்படி நீ எழுதுவாய் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை" என்றார். அந்தச் சந்தர்ப்பத்தில், "பொன்னுத்துரை பாலர் கழகத்திலெல்லாம் பல கதைகள் எழுதியிருக்கிறார் ஐயா" என்றனர் என் உடன் மாணவர் சிலர். அப்பப்பா!...அன்று நான்பெற்ற பாராட்டு! நானடைந்த மகிழ்ச்சி! அதை இன்று நினைத்தால்?...ஒரே சிரிப்பு!



கட்டுரையாசிரியர்

### தாழ்வு மனப்பான்மை

எனது 18ம் வயதில் நான் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்தபோதுதான் சிறுகதைகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பும் எனது எண்ணம் வலுத்தது. கலாசாலையில் எனக்குக்கிடைத்த எழுத்தாள நண்பர் திரு. வ. சந்திரசேகரம், எனது கையெழுத்துப் பிரதிகளான சிறுகதைகளைப் படித்துப் பார்த்துவிட்டு என்னைப் பாராட்டி, கண்டிப்பாக அவற்றைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கும்படி கூறினார். அவர் என் எழுத்துக்குக் காரணகர்த்தாவாக இல்லா விட்டாலும்,என் தாழ்வு மனப்பான்மையைப் போக்கடித்து,என் கதை அச்சேற எனக்கு வலுவூட்டியவர் என்ற வகையில் அன்னார் எனக்கொரு தூண்டுகோலாயிருந்தார் என்றே கூற வேண்டும்.

### முதற்கதை

1952 ஏப்ரல் மாதம் 'பணமும் குணமும்' என்ற எனது முதற் சிறுகதையைத் 'தினகரன்' பத்திரிகைக்கு அனுப்பி வைத்தேன். என்ன ஆச்சரியம்! இரண்டு வாரத்துள் அது பிரசுரமாகியிருந்தது. என்னால் நம்பவே முடியவில்லை. சுமார் மூன்று வருடங்களாக அதைப் பத்திரிகைக்கு அனுப்பாமல் இருந்தேனே என்ற என் தாழ்வு மனப்பான்மைக்காக என்னுள் நானே வெட்கினேன். எனது பெருமை?... எனது மகிழ்ச்சி?... அப்பப்பா!......எம்மாத்திரம்!...

(10-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

## முருகன் மணவாளன்

ஆசிரியர் : செ. தனபாலசிங்கன் பி. ஏ.

வெளியீடு: சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்

விலை : ரூபா 2.

'ஆறுமுகமானபொருளை' எமக்குச் சில காலத்திற்கு முன் அளித்து தனது செந்தமிழ் ஆற்றலையும் முருகப் பற்றினையும் உணர்த்திய திரு. செ. தனபாலசிங்கன் அவர்கள் தன் நூல் தந்த வருவாய் அனைத்தையும் உரும்பிராய் . சிதம்பர சப்பிரமணிய கோயிலுக்கு உவந்து அளித்தார். அதே தனபாலசிங்கன் அவர்கள் முருகன் 'மணவாளன்' என்ற நூலினை இப்போ வெளியிட்டுள்ளார்கள். இதன் நோக்கமும் அக்கோயிற் திருப்பணி என்று குறிக்கப்பட்டுள்ளது.

கோயில் கட்ட பணம் தாருங்கள் என்று மக்களிடை நேராகச் சென்று கேட்காமல் அறிவுச் செல்வத்தை யான் தருகிறேன் பொருட் செல்வத்தை நீங்கள் தாருங்கள், உங்களுக்கு அருட்செல்வத்தையும் ஆண்டவன் அருளுவான் என்று கூறுவதுபோல் அருந் தமிழ் நூல்களை அள்ளி வழங்குகிறார் தனபாலசிங்கன் அவர்கள். கடவுளின் கற்கோயில் கட்ட இவர் எழுப்பும் சொற்கோயில் மக்கள் உளக்கோயிலில் இவர் இடம்பெறத் துணை புரிவது உறுதி.

பன்னிரு கைகள் உடைய முருகன் புகழ் பேச எழுந்த இந்நூல் பன்னிரண்டு கட்டுரைகளைப் பாங்குடன் தாங்கி நிற்கிறது. 'முருகன் மணவாளன்' என்று தொடங்குகிறது முதற் கட்டுரை. அந்த முருகனை 'வரவழைத்தால் [illegible]

(13-ம் பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

# துள்ளாதீர்!

—இப்னு உமர்—

அறம் வெல்லும்; அன் போங்கும்;
அநியாயம் அழிந்து விடும்;
மறம் ஒருநாள் நீதியின்முன்
மாய்ந்து விடும்;மறவாதீர்!

அளையிருக்கும் நச் சரவும்
ஆழ்ந்துறங்கும் புலிக்குலமும்
துளையெடுக்கும் சிற் றெறும்பும்
துடிக்க வைக்கும்; துள்ளாதீர்!

திருமிகுந்து புகழ் மிகுந்து
செம்மைவந்து விட்ட தென
மறம் மிகுந்த 'பொறையினர்' முன்
மருள் மிகுந்து ஆடாதீர்!

வாழ்வுரிமை மொழி யுரிமை
வந்து விட்ட தென்பதனால்
சூளுரைத்துச் 'சிறியோரை'
தொலைத்து விட எண்ணாதீர்!

ஆளும்நிலை உண்டு என
அகம் மிகுந்து மறந்தேடி
ஈழநாட்டு உயர் வினுக்கு
இகழ் வினைகள் சேர்க்காதீர்!

சிறுமைக்கும் முடி வுண்டு
செருக்கிற்கும் முடி வுண்டு
பொறுமைக்கும் முடி வுண்டு
புரியாமல் பாயா தீர்!

ஒருகாலம் குளி ராகும்
ஒருகாலம் வெயி லாகும்
பெருமைக்கு முடி வுண்டு
பிடுற்றுச் சிருதீர்.

# சொல்வாய் அம்மா

(அளவையூர் சோ. தி. சம்பந்தன் பி. எஸ். ஸி.)

அன்னையே! அழகுத் தமிழே!
அகத்தியன் வளர்த்த தாயே!
முன்னை நாள் உம்தன் தேயம்
முப்பெரும் கொடிகள் தாங்கி,
துன்னவர் கேட்ட ஞான்றே,
துணுக்கொடு அஞ்சும் வண்ணம்
மன்னவர் மூவர் ஆள
மாண்புடன் விளங்கிற்றன் றே!

வந்தவர் போனார்க் கெல்லாம்
வரையின்றி வாரி வாரி
சந்தனம், செந்நெல், பாக்கு
சாறுடைக் கன்னல் தேக்கு
இந்த நற் செல்வம் யாவும்
ஈந்ததால் பெருமை ஈன்ற
அந்த நாள் எங்கே தாயே!
அனைத்து மே கனவுதானே!

விந்தியம் குமரி எல்லை
விரிந்தபேர் தேயம் இன்று,
சிந்திய மணிகள் போலச்
சிறுகிலே சிறுத்த தம்மா!
முந்தையர் கொண்ட வெற்றி
முற்றுமே கதையாய்ப் போக
எந்தமிழ்த்தாயே நாங்கள்,
எலிக்குழல் மக்களா னோம்.

இறைவனைத் தொழுவதற்கும்
இன்னருள் பெறுவதற்கும்
முறையுடைத்தமிழே உன்னை
முயங்கிடில் தவறு, என்ன?
சிறையுற்ற பறவை அன்ன
சிதைபட்ட மொழியில் நாளும்
இறைவழிபாடு செய்தால்,
இனிக்குமோ? சொல்வாய் அம்மா.

புறம்புடை மொழியென்றெண்ணி
போதனை மொழியாக்காமல்
திறமிலார் புல்லோர் உன்னைத்
தெருவிலே நிறுத்திவிட்டார்
அறம் பொருள் இன்பம் யாவும்
அழகுற விளகும் உந்தன்,
திறத்தினை அவர்க்குணர்த்தி
திருத்துதல் எந்நாள்தாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ரன் குமார்,
உருத்திரபுரம்

கே: என் காதலிக்குக் கோபம் வருவது கெதி. அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

ப: காதலை வளர்க்க அந்தக் கோபம் தேவை காதலிக்குக் கோபம் வரா விட்டால்தான் நீங்கள் ஏதாவது செய்தாக வேண்டும் எதற்கும் சந்தர்ப்பத்தைப் பார்த்து நீங்களும் கோபப் படுவது நல்லது.

ஃ

க. பார்த்தசாரதி ராஜா,
கொக்குவில்

கே: தற்பொழுது உள்ள சூழ் நிலையில் தமிழரசுப் பாராளு மன்ற உறுப்பினர்கள் தங்கள் பதவிகளைத் துறப்பது சரியா?

ப: தற்போதுள்ள சூழ் நிலையில் கட்சியின் முடிவு சரியானதே.

ஃ

எஸ். கே. சண்முகநாதன்,
வண்ணார்பண்ணை

கே: மூலையில் அடங்கியிருந்த 'சுந்தரப் பெருமான்' எங்கள் மதிப்பு மிகு தந்தை செல்வா வோடு போட்டியிடப் போகிரு ராமே?

ப: மூதூரில் பட்ட அடி யின் வடு மாறிவிட்டதோ!

ஃ

இராசேந்திரம்,
சுருட்டுக்கடை, கடுகண்ணுவ

கே: எனது நண்பர் ஒருவர் ஒரு பெண்ணைக் காதலிக்கிருர். அந்தப் பெண்ணை அவருக்குத் திருமணம் செய்து தர அவரது தாய்க்கு விருப்பம். தந்தை மறுக்கிருர். இதற்கு என்ன செய்வது?

ப: தாயைக்கொண்டு தந்தையைச் சம்மதிக்க வைக்க லாம். குரங்கு பூனையைக் கொண்டு அப்பத்தை இறக் கிய மாதிரி.

கே: எனது தலைமுடி சுருள என்ன செய்யலாம்?

ப: முடியைச் சுருட்டி விடுங்கள். சுருட்டுக்கடை அனுபவமுண்டல்லவா?

ஃ

சிவ. சண்முகநாதன்,
கெங்காலை

கே: குயுக்தியாரே! மனிதன் எப்பொழுது கெட்டவனுகின் ருன்?

ப: ஜிம்கானு முதல் பிரைஸ் அடிக்கும்பொழுது.

ஃ

சி. கு.,
இளவாலை

கே: கணவனை இழந்திருக் கும் விதவைப் பெண் மறு மணம் செய்யலாமா?

ப: செய்யலாம். அதற்கு எவ்வித தடையும் கிடை யாதே.

ஃ

மூ. கருணநிதி,
ஏழாலை மேற்கு

கே: அடுத்த பொதுத் தேர்த லில் சாவகச்சேரி முன்னுள் பாரா ளுமன்றப் பிரதிநிதி திரு. வி. குமாரசாமி கிளிநொச்சித் தொகு தியில் போட்டியிடப் போவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. இது உண் மையா?

ப: எதில் வேண்டுமானு லும் போட்டியிடட்டுமே! அரசாங்க கஜானு வரண்டு கிடக்கிறது. பறிமுதலாகும் ஜமீன் பெரிதும் உதவியாக இருக்கும்.

கே: யாழ்ப்பாணத்திற்கு தற் பொழுது வர இருந்த நிதி மந் திரி டாக்டர் என. எம். அவர்கள் தன் வரவை கடைசி நேரத்தில் ஒத்திவைத்ததின் மர்மம் என்ன?

ப: கனவில் ஒரு கறுப்புக் கொடியைக் கண்டாராம். அதுதான் மர்மம்.

ஃ

ரி. கே. வி. ஆனந்தசர்மா,
வறக்காப்பொலை

கே: சுதந்திரக்கட்சி அங்கத்த வரும் மூதூர் இரண்டாவது




பிரதிநிதியுமாகிய மஜீத் அவர் கள் சிறிது காலமாகத் தமிழ், தமிழ் எனக் கூறித் திரிகிருரே. ஏது தமிழரசுக் கட்சியில் நுழை யப் பார்க்கிருரா?

ப: இல்லை ஐயா! தேர்தல் வெகு தூரத்திலில்லை. மேடையில் அந்தச் சொல் லைச் சரிவர உச்சரிக்க வேண் டாமா? அதற்கு ஒத்திகை.

ஃ

மாலினி,
நாறம்மல

கே: ஒரு மாணவி இரண்டு மாணவர்களை ஒருவருக்குத் தெரியாமல் மற்றவரை மன மாரக் காதலிக்கிருள். முடிவில் அவள் வாழ்க்கை என்ன வாகும்?

## தமிழணங்கு

**—யூ. எல். தாவூத்—**

வண்ணத்துத் தமிழணங்கே! அமிழ்தே! இன்பில்
வார்த்திட்ட சுவைத்தேனே! கனியின் சாறே!
தென்னகத்து எழிலரசே! இளமைப் பேற்றிற்
செம்மையுடன் நிலைகொண்ட திருமை நங்காய்!
மண்ணகத்தா ராதியிலே மொழியக் கற்ற
மாண்புயர்ந்த செழுங்கன்னி! புலமை வல்லோர்
தன்னகத்தில் நிறைத்திட்ட நறைபூங் காவே!
தரணியுடை மொழிக்குவையின் முதல்வள் நீயே!

எழிலுறைந்த உன்ருளில் இளங்கோச் சேரன்
இசையுறைந்த சிலம்பணிந்து இன் புறைந்தான்;
வளனுறைந்த உன்னிடைக்குச் சாத்த னென்பான்
மணியுறைந்த மேகலைப்பூ ணிறைத்தான்; உன்றன்
பொலனுறைந்த மார்பிற்றிரு தக்க தேவர்
பூட்டிட்டார் எழில்சிந்த மணியை; கைக்குக்
கலையுறைந்த குண்டலமும் செவிக ளுக்குக்
கதிருறைந்த வளையினையு மணிவித் தார்கள்.

உலகிந்த மொழியினத்து ளுனை யுயர்த்த
ஊனீந்து, உயிரீந்த சங்கச் சான்ருேர்
கலைநீந்தும் பொற்கலன்க ளணிவித் துன்னைக்
காசினியி லரசியென இருக்கச் செய்தார்,
வளனீந்தும் வள்ளுவனுர் குறளும்; கம்பன்
வழங்கிட்ட கலையமுதும்; உமறு ஈந்த
எழில்நீந்துஞ் சிருவும் சித்தர் பண்ணும்
என்றென்று முன்றனுக்கு ஓச்ச மேந்தும்.

வேங்கடமென் மலைமுதாய்க் குமரி ஈருய்
வீற்றிருந்த உன்றனது சால்பி னுக்குத்
தீங்கேது மீண்டிடிலோ மூவேந் தர்கள்
தீயெனவே வெகுண்டெழுந்துன் னிகலைச் சித்தார்;
பாங்குநிறை மலைகடலை, கதிரை, வானை
பாருறையு மியற்கைதருங் காட்சி எல்லாம்
ஓங்குபுகழ் கவியாத்து புலவர் பல்லோர்
உன்றனுடை திருவடியிற் சேர்த்து விட்டார்.

முன்னைநாட் பழமைக்குப் பழமை யாக
மூப்புற்ருய்! புதுமைக்குப் புதுமை யானுய்!
கன்னடத்தை, களிதெலுங்கை, துளுவம் மற்றும்
கவின்மலையா ளமென்னுஞ் சேய்கள் பெற்று
அன்னையெனும் பேறுற்ருய்! ஆனு லுன்றன்
அழகிளமை சரியவிலை; முதுமை காணுய்;
கன்னியெனுஞ் சதிரினிலே நிலைத்து நின்று
காசினியோர் மனத்தையெலா மீர்த்து விட்டாய்!

சேரர்சோழ பாண்டியரென் மன்னர் மூவர்
செழிப்பினிலே வளர்ந்திட்ட நாளி லுன்றன்
பேர்வளர்த்தார் புகழேந்தி, கபிலர், ஔவை,
பிரியாத இரட்டையர்கள் கல்லாட ஞர்
விறுடைய நக்கீரன், கூத்தர், காள
மேகம்,பிற நாயன்மார், ஆழ்வார்; இன்று
பாரதியென் பெருங்கவியும், பின்வந் தோரும்
பண்ணிசைத்து உன்பெருமை நிலைக்கச் செய்தார்.

ப: அவள் வாழ்க்கை என்னவாகும் என்பதைக் கண்டு பிடிக்க முன்பு இவ் விருவரைத் தவிர வேறு யார் யாரை அவள் காத லிக்கிருள் என்பதைக் கண்டு பிடியுங்கள். 'மன மார' என்ற சொல்லை உடனே வாபஸ் செய்யுங் கள்.

ஃ

ச. சபாநேசன்,
காரைநகர்

கே: 'எல்லோரும் ... வேண்டும்' என்று ... டாக்டர் என்.எம்.பெரேரா, தமிழ்

அரசாங்க ஊழியர்களுக்கு வழங் கப்பட்டுள்ள கட்டாய ஓய்வை யிட்டு எதற்காக மௌனம் சாதிக் கிருர்?

ப: மௌனம்தான் அவர் நிலையை அரசாங்கத்துள் பாதுகாக்கும். சிறுபான்மை யோர் இனி சமசமாஜக் கட் சியிடமிருந்து எதையும் எதிர்பார்க்க முடியாது என்று திரு. சமரக்கொடி ஏற்கனவே கூறிவிட்டாரே!

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
பம்பலப்பிட்டி

கே: சுய நிர்ணய உரிமைப் போருக்காகத் தமிழ்ப் பிரதிநிதி கள் இராஜினுமாச் செய்யும் பட் சத்தில் உதிரிகள் பாராளுமன் றத்தில் நுழைய எண்ணமாட் டார்களா?

ப: எண்ணினுல் மட்டும் போதுமா? மக்கள் அனும திக்க வேண்டாமா?

கே: கூட்டரசாங்கம் ஏற்பட்ட பின் யூ. என். பி. மிக்க மௌ னம் சாதிப்பதேன்?

ப: கூட்டரசாங்கம் ஏற் படுவதைத் தடுக்க யூ. என். பி. எத்தனையோ உபாயங்க ளைக் கையாண்டது. பலிக்க வில்லை. இப்பொழுது மற் ... சந்தர்ப்பத்தை எதிர் ... கிறது.

பெ. கணேஷ்,
ஹுனுகல

கே: பொன் ஏதும் தங்களிடம் உண்டா?

ப: உண்டு, உண்டு. செல் வம், இலக்குமி, அழகு, தங் கம், பொன்னுணயம், இரும்பு அத்தனையும் பொன் தானே!

ஃ

து. தேவராஜ்,
எட்டியாந்தோட்டை

கே: டாக்டர் என். எம். நிதி மந்திரிப் பதவியை அடைந்ததை யிட்டு உங்கள் கருத்தென்ன?

ப: ஒரு குடும்பப் பெண் ணைப் போல வரவைக் கொண்டு செலவைச் சரி செய்வாரென்று நம்பலாம்.

ஃ

வி. சண்முகலிங்கம்,
நாராந்தனை தெற்கு

கே: அடிப்படை உரிமைகள் முன்னணி என்றவொரு கட்சி வருடத்திற்கொரு முறையோ இரண்டு வருடத்திற் கொரு முறையோ பத்திரிகைகளில் அறிக்கை விடுகிறதே. இந்தக் கட்சி எங்கேயிருக்கிறது?

ப: அது வசிக்குமிடம் அடுப்படி. அதன் கொள்கை யும் அடுப்படிக் கொள்கை தான்.

ஃ

மு சங்கரப்பிள்ளை,
வேலணை

கே: பைந்தமிழன் பரம்பரை யிலே அவதரித்த சில மகானுப வான்கள் செந்தமிழில் 'தொழி லாளி' என்றிருக்க 'கூலிக்காரன்' என்று அழைப்பதன் மர்மம் என்ன?

ப: உழைப்பாளியை இகழ்ந்து பேசுபவர்களே இந்தச் சொல்லை உபயோ கிப்பார்கள்.

ஃ

சி. மெய்யானந்தன்,
மயிலிட்டி

கே: தமிழரசுக் கட்சியின் செயல் கமிட்டியிலிருந்து ராஜி னாமாச் செய்ததிலிருந்து திரு. திருச்செல்வம் கியூ. சி. அவர்கள் தமிழரசுக் கட்சியின் ஒற்றுமைப் பலத்தைக் குறைத்துவிட்டார் என எண்ணுகின்றேன்!

ப: இல்லை. கருத்து வேற் றுமையால் கட்சி வலுவடை யும். பலத்தை இழந்து விடாது. ஜயக்கரும், சாப் ருவும் இருந்ததால் இந்திய தேசிய காங்கிரஸ் வலு வடைந்ததேயன்றி வலு விழந்து போகவில்லை.

ஃ

தேவி,
கந்தப்பளை

கே: கடந்த சில ஆண்டுகளாக என் சிநேகிதி காதலித்து வந்த காதலன் அவளை விட்டு விட்டுத் தனது பெற்ருேருடன் தாயகம் திரும்புகிருர். திரும்பவும் இலங் கைக்கு வந்து அவளைத் திரு மணம் செய்வதாகக் கூறியுள் ளார். அது நடக்குமா?

ப: அவர் இலங்கைக்குத் திரும்ப பிரயாண அனுமதி கிடைக்குமா?, கிடைக்கா விட்டால் அவருடைய ஊருக்குச் செல்ல சிநேகிதி தயாரா? இவ்விரு கேள்வி களுக்குக் கிடைக்கும் விடை களில்தான் இருக்கிறது, நடக்குமா என்ற உங்கள் கேள்விக்குப் பதில்.

ஃ

வி. கார்த்திகேசு,
கொழும்பு-5.

கே: பிரதமர் 16-வது அமைச் சொன்றை புதிதாக ஏன் சிருஷ் டித்தார்?

ப: எம். ஈ. பி.க்கு மந்திரி சபையில் இடமளிக்கச் செய்யப்பட்ட முன்னேற் பாடாம்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

BLACK FLAG
பக் கில்லர்
மந்திர சக்தி போன்று
மூட்டைகளை
கொன்று விடுகிறது.

கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.




இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்-
ஏக விநியோகஸ்தர்கள்:
ஹூயிஸ் பிரவுண் அன் கம்பெனி லிமிட்டெட்,
மக்கலம் ரோடு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுவாதிகட்கு இலங்கையில் இடம் கிடையாதாம்

'பெடரல் குழப்பம்' என்று மகுடமிட்டு 'லங்கா தீப்ப' 30-6-64ந் திகதி எழுதியுள்ள தலையங்கத்தில், தமிழரசுவாதிகள் நாட்டை இரு கூறுகப் பிளவுபடுத்த அனுமதிக்கக் கூடாதென்றும் தமிழ் மக்களின் நியாயமான குறைபாடுகளை விசாரித்தறிந்து உடனடியாக அவற்றை நிவர்த்திசெய்ய வேண்டுமென்றும், அதற்குத் தமிழரசுத் தலைவர்கள் மட்டுமின்றி இதர நடுநிலைமைக் கொள்கையுடைய தமிழ்த் தலைவர்களையும் கொண்ட ஒரு வட்டமேசை மாநாட்டைக் கூட்டவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமலைத் திர்மானத்தைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் தலையங்கம் சுதந்திரத் தமிழரசு ஏற்படும் வரை தமிழரசு எம். பிக்கள் ராஜினாமாச் செய்து கொண்டும் மீண்டும் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டுக் கொண்டும் இருப்பார்கள் என்று கூறுகிறது.

இந்தத் தலையங்கத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

'தமிழரசுக்கட்சியின் இந்த நடவடிக்கையால் அவர்களும் நாசமாகி நாடும் நாசமாகிவிடும். இக் கட்சியின் வகுப்புவாதத்தின் விளைவாக இலங்கை மண் ஒரு முறை இரத்தத்தில் தோய்ந்தது. ஆனல் அதனை இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்வதென்று அவர்கள் கருதுகிருர்கள்.

தமிழரசுத் தலைவர்களின் இந்த நடவடிக்கைகளுக்கு மாருன பொறுப்புள்ள உண்மையான தமிழ் தலைவர்கள் கட்சியினுள்ளேயே இருப்பது அதிர்ஷ்டமே. ஆயினும் அவர்களின் தொகை சிறிது. எனவே அவர்கள் தமிழரசுத் தலைவர்களுக்குத் தடையாக இருக்க முடியாது. ஆனல் தமிழ் மக்கள் மத்தியில் நியாயமான முறையில் சிந்திப்பவர்களின் தொகை கூடிக்கொண்டு வருகிறது.'

### தமிழரசுவாதிகட்கு இங்கு இடம் கிடையாதாம்

'இலங்கையில் வசிக்கும் தமிழ் பேசும் இந்தியர்களுக்குத் தேவைப்படுவது இந்நாட்டுச் சமஷ்டித் தமிழர்களுடன் சேர்ந்து சிங்கள இனத்தின் சமாதியின் மீது தமிழ் அரசொன்றை நிறுவுவது தான். இந்தியப் பிரச்சினையைத் தீர்க்கப் புதிய முயற்சிகளைச் செய்யும் பிரதமர் சிங்கள இனத்துக்கெதிராகச் செய்யப்படும் இந்தச் சதியை மறந்து விடக் கூடாது' என்று 'தவஸ' அரசியல் நிருபர் 27-6-64ந் திகதி எழுதியுள்ள அரசியல் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுவதாவது:

'பல ஆண்டுகளாக இலங்கை, இந்திய அரசாங்கத் தலைவர்கள் இந்தியர் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி செய்தனர், முடியவில்லை.

காரணம்: அங்கே இந்தியத் தலைவர்களை இந்தியத் தமிழ்த் தலைவர்கள் மிரட்டினர்.

இங்கே, இலங்கையில் வசிக்கும் பலம் மிகுந்த இந்தியர்களுடனும், தோட்டத் தமிழ்த் தலைவர்களுடன் சமஷ்டித் தமிழர்கள் சேர்ந்து ஒரு 'தமிழ் பேசும் மக்களை' உருவாக்கிக் கொண்டு, பிரச்சினையைச் சிக்கலாக்குவதற்குப் பல்வேறு மிரட்டல்களைச் செய்து கொண்டு, தந்திரங்களைக் கையாண்டு இந்தியத் தமிழர்களுடன் சதி செய்யத் தொடங்கினர்கள்.

### திருமதி மேனனின் புத்திமதி

இந்திய வெளி விவகார மந்திரி திருமதி இலட்சுமி மேனன் இலங்கைக்கு விஜயம் செய்தபோது இந்தியப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான ஒரு விஷயத்தைக் கூறினர்.

இலங்கையில் வசிக்கும் இந்தியர்கள் இந்நாட்டு மக்களின் மொழியான சிங்களத்தைக் கற்றுக்கொண்டு, சிங்களக் குணதிசயங்களையும், பழக்க வழக்கங்களையும் கற்றுக்கொண்டு, சிங்களக் கலாசாரத்தை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந் நாட்டு மக்களுடன் தங்களின் பொருளைப் பங்கிட்

(13-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள இதழ்களில்...

### வண்டிச் சில்லுக்கு இரும்பாணி

சிங்கள "சிறி" பஸ் ஒன்று "யாழ்ப்பாணம்" என்று சிங்களத்தில் எழுதப்பட்ட ஒரு பெயர்ப் பலகையை மாட்டிக் கொண்டு வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. சிங்கள ஆசிரியர்கள்தான் பஸ் பிரயாணிகள். பஸ் ஓடும் வீதி முழுவதிலும் இரும்பு ஆணிகள் நாட்டப்பட்டுள்ளன. தமிழரசுத் தந்தையும் டாக்டர் நாகநாதனும் ஒரு குடிசைக்குள் மறைந்து பார்த்துக் கொண்டிருக்கின்றனர். டாக்டர் நாகநாதன் கையில் ஒரு கூடை இருக்கிறது. அதில் "பெடரல் பிராண்ட் இரும்பு ஆணி" என்று சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது.

(இது 30-6-64-ந் திகதி 'லங்கா தீப்ப' வெளியிட்டுள்ள ஒரு கேலிச் சித்திரத்தின் விளக்கம்)

### தூதராலயத்தில் தி.மு.க. செல்வாக்கு

"இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் அலுவலகத்தின் மீது திராவிட முன்னேற்ற கழகத்தின் பிடிப்பு வலுவடைந்துள்ளது" என்று 'லங்காதிப்ப' 1-7-64-ந் திகதி இதழில் முதற் பக்கத்தில் மூன்று பந்தி தலைப்பின் கீழ் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

'இலங்கைத் தூதர் அலுவலகம் தி. மு. க. வின் நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டிருப்பதால் இலங்கை-இந்தியர் பிரச்சினையைத் திருப்திகரமாகத் தீர்க்கும் முயற்சியில் ஓர் அடிகூட முன்னேற முடியாமலிருக்கிறதென்று வெளிவிவகார அமைச்சின் உயர்தர அதிகாரிகள் கருதுகின்றனர்.

பிரச்சினையைத் திர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுக்கும் எந்த நியாயமான நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு அளிக்காமல் இந்தியத் தூதராலயம் காலம் கடத்துவதாகத் தெரிகிறதென்று ஓர் உயர்தர அதிகாரி கூறினர்.

ஒத்துழைப்பு அளிக்காததற்குக் காரணம் டில்லியின் நிர்ப்பந்தமல்ல.

தூண்டுதல் திட்டத்தின் கீழ் பணம் பெற்று இந்தியாவுக்குச் செல்ல சுமார் 100 பேர் முன் வந்தனர். அவர்கள் ஏற்கனவே இந்திய அரசியற் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டவர்களா என்று இந்தியத் தூதராலயத்திடம் வெளிவிவகார திணைக்களம் விவரம் கேட்டது. அதற்கு இதுவரை தூதராலயம் பதிலனுப்பவில்லை.

சட்ட விரோதக் குடியேற்றக் காரர்களைத் திருப்ப இந்தியாவுக்கு அனுப்பும் விஷயத்திலும் இந்தியத் தூதராலயம் ஒத்துழைப்பு அளிக்காததால் இலங்கை அரசாங்கத்துக்குப் பெரும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது' என்று பிரஸ்தாப செய்தி மேலும் கூறுகிறது.

#### யாழ்ப்பாணத்தில் போர்ப் பாசறை

யாழ்ப்பாணத்தில் இலங்கை-இந்திய நண்பர்கள் சங்கம் நுவியது பற்றி 'லங்காதீப்ப' எழுதியுள்ள ஒரு தலையங்கத்தில் தங்களுக்குக் கிடைத்துள்ள தகவல்களின் படி யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருப்பது இலங்கைக்கு எதிரான ஒரு போர் பாசறையே தவிர இ. இ. நண்பர்கள் சங்கமல்ல, "என்று குறிப்பிட்டுள்ளது.

இத்தலையங்கம் மேலும் கூறுவதாவது:—

இந்தச் சங்கம் நிறுவுவதில் இலங்கைத் தூதர் விசேட அக்கறையுடன் கலந்து கொண்டார் என்று தெரிகிறது. சங்கம் நிறுவிய பின்னர் நடந்த விருந்திற்தான் சங்கத்தின் முழு உருவமும் தெரிந்தது. விருந்தில் இலங்கைக்கு ஆசி கூறிப் பேசிய பேச்சாளர் "இலங்கையிடமுள்ள எமது விசுவாசத்தைப் பற்றி குறைந்த அளவு பேசுவது நன்று" என்று கூறினராம். இத்தகைய நபர்களைத் தேசத் துரோகிகளென்றுதான் கருத வேண்டும்.

இந்நாட்டுடன் இராஜியத் தொடர்புள்ள நாடுகளுடன் நண்பர்கள் சங்கம் நிறுவிக் கொள்வது சரியே. ஆனல் நண்பர்கள் சங்கம் என்ற போர்வையில் தப் நாட்டுக்கு விரோதமாக மற்றொரு நாட்டுடன் பாசறை அமைத்துக் கொள்வது முற்றிலும் மாறுன விஷயமே.

சில காலமாகக் கொழும்பில் ஒரு இலங்கை-இந்தியர்

(9-ம் பக்கம் பார்க்க)

## சந்தியில்

நடந்த ஆண்டு யாழ். நகரில் நடைபெற்ற இலக்கிய விழாவொன்றில் கூழ் முட்டை அடித்துக் குழப்பம் விளைவித்த கோஷ்டியினர் தங்கள் பழைய லேபலுடன் வெளியுலகில் தலை காட்ட முடியாது தவித்து வந்தனர். இலக்கியம் என்ற போர்வையின் கீழ் நடைபெற்ற அரசியல் பிரசாரமும் அடங்கி விட்டதே என்று அவர்களின் மேலிடத்தார் அங்கலாய்த்தனராம். அவர்களைச் சார்ந்த எழுத்தாளக் குஞ்சுகளும் பேச்சுக் கலையை வளர்க்க முடியவில்லையே என்று மனமுடைந்து முக்காடுபோட்டு மூலையில் குந்தியிருந்தனர். இந்த நிலையில் இவர்கள் மத்தியிலுள்ள ஆசிரியர் ஒருவரும், நந்தி விக்கிரகமும் சேர்ந்து பழைய பெரும் புலவன் போல் கழகம் ஒன்று கண்டனராம். கழகத்தின் பெயரில் சில தமிழ்ப் பெரியார்களை அழைத்து விழா நடாத்தி வெளி உலகிற்கு இப்பொழுது வந்துள்ளனர். விழாவில் கலந்துகொண்ட தமிழறிஞர்களும் அடிப்படை நோக்கத்தை அறிய மாட்டார்கள். மேலும் உண்மை எழுத்தாளர் ஒரிருவரையும் கழகத்திற்குள் வகையாக இழுத்து வைத்துள்ளனர். அவர்களில் ஒருவரைக் கொண்டே தமிழறிஞர்களைப் பிடிக்கும் வேட்டையையும் நடாத்தியுள்ளார்கள். சூரன் வெவ்வேறு வேஷத்தில் வந்தவாறு அவர்களின் மாறு கோலம்தான் கழகம். செல்வாக்கு மீண்டும் கிடைத்ததும் சுய உருவமான சிவப்பு லேபலைக் குத்தி விடுவார்கள், அப்பொழுது உண்மை எழுத்தாளர்கள் இருந்த இடம் தெரியாது மறைக்கப்பட்டு விடுவார்கள். இக் கழகத்தில் வகையாக மாட்டப்பட்டுள்ள ஒருவர் தனது நிலையையிட்டுப் பெரிதும் கூச்சமடைகிருர். 'முட்டை எறிந்த வீரர்களுடன் எவ்வுறவையும் வைத்துக்கொள்ளவோ பக்கத்தில் நிற்கவோ நான் விரும்பக்கூடவில்லை. தனிப்பட்ட முறையில் கூட அதைவிடக் கீழான மானக்கேடு எனக்கு வேறு இருக்க முடியாது. அந்த 'வெள்ளியின் மறைவு' என்னை இந்த அவல நிலைக்கு உள்ளாக்கியுள்ளது!' என்று ஒருவரிடம் அந்த உண்மை எழுத்தாளர் கூறியுள்ளாராம்.

ஃ

இன்னுமொரு சமாச்சாரம். மாணவரின் பெயரைச் சொல்லி யாழ்ப்பாணத்தில் கூத்தாடியதும் அதே முட்டையெறி கூட்டம்தான். அரசாங்கம் தமிழ் பேசும் மாணவர்களுக்கு இழைக்கும் அநீதிகளைக் கிஞ்சிற்றுங் கண்டியாது வசதிப் பணம் ஒரு சதம் தானும் படித்த காலத்தில் கொடுக்காத மாணவர்கள் அதைக் கண்டித்தார்கள். குழப்பத்தை உண்டுபண்ணி செல்வாக்குப் பெறலாம் என்று நம்பி இறங்கிய வேட்டைதான் இச் செயல். மாணவர்களையும் தவருன வழியில் இட்டுச் செல்ல அரசியல் வரட்சி பொதுவுடைமைக் கட்சியைத் தூண்டிவிட்டுள்ளது. கூட்டத்தைக் குழப்ப கூழ் முட்டை அடித்த மாணவர்கள் முன்னிற்கும் பொழுது மாண்பைக் காண முடியுமா? உண்மை நோக்கத்தை அநேக மாணவர்கள் அறியவில்லையாம்.

அம்மான்



பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி 3597—6522

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகாவலி கங்கையை கிழக்கு இலங்கைக்குத் திருப்பியவர் விக்கிரமசிங்கா!

## மட்டுநகரில் கெனமன் பேச்சு

'மகாவலி கங்கையை கிழக்கு மாகாணத்துக்குத் திருப்ப வேண்டும் என்று முதல் முதலில் குரலெழுப்பியவர் தோழர் விக்கிரமசிங்கா.' இவ்வாறு மாஸ்கோ வாதக் கொம்யுனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் பீட்டர் கெனமன் கடந்த வாரம் மட்டுநகரில் குத்துவிளக்கேற்றிக் கோலாகலமாகக் கொண்டாடிய பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினர். பொய்யுரையும் புனைந்துரையும் கூறி அரசியல் வாழ்வு வாழும் இவர்கள் அதே கூட்டத்தில் தமிழரசுக்கட்சி ஓர் வகுப்புவாதஇயக்கம்என்றும்வர்ணித்தார்கள். சிங்களம் மட்டும் என்ற கொள்கையை அனுஷ்டிக்கும் கொம்யுனிஸ்டுகள்; இன வொழிப்புக் கொள்கையைத் தீவிரமாகச் செயல்படுத்தும் சுதந்திரக் கட்சிக்குத் துதி பாடும் கொம்யுனிஸ்டுகள்; சுண்டியெடுத்த வகுப்புவாதி பிலிப் குணவர்த்தனவுடன் கூடிக் குலாவும் கொம்யுனிஸ்டுகள்—தமிழரசாரை வகுப்புவாதிகள் என்று வர்ணித்துள்ளார்கள். மட்டுநகர் கூட்டத்தில் இவர்கள் நடாத்திய பொய்ப்பிரசாரம் இன்னும் பல.

கடந்த வார இறுதியில் மட்டக்களப்புக்கு மொஸ்கோ வீரர்கள் வந்திருந்தனர். முன்னுக்குப் பின் முரணன முடக்கு வாதங்களை அவிழ்த்து விட்டு வேகமாகச் சென்று விட்டனர்.

கொம்யூனிஸ்டுகளின் போக்கினைப் பற்றி மட்டக்களப்பு மக்கள் அறியாதவர்களல்ல. 'முற்போக்கு' என்ற முடி சூட்டிக் கொண்டு பிற்போக்காகச் செல்லும் கொள்கை வீரர்கள் இவர்கள் என்பதை நன்கு அறிவர் மக்கள்.

### யார் வகுப்புவாதிகள்?

'தமிழரசுக் கட்சியினர்—வகுப்புவாதிகள்'என்று மீண்டும் இந்த மொஸ்கோ வீரர்கள் கூறத் தலைப்பட்டுவிட்டனர். யூ. என். பி. யைப் போல் வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டுகிறார்கள் என்று பகிரங்கமாகத் திரு. பீட்டர் கெனமன் கூறினர். இந்த முற்போக்குக் கொம்யூனிஸ்டுகள் வகுப்புவாதிகள் இல்லையா என்பதை அறிய ஆசைப்படுகிறோம்.

'சிங்கள மகா சபை' என்ற சர்வ சிங்கள நிறுவனத்தின் திரு அவதாரமே சுதந்திரக் கட்சி என்பதை திரு. கெனமன் அறியாரா? சிங்கள மகாசபையின ஆரம்பகாலக் கொள்கைகள் என்னவென்பதாவது அவருக்குப் புரியுமா? இதன் ஆரம்ப கர்த்தாக்களுள் ஒருவரான மறைந்த திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஏனைய இன மக்களையும் இணைத்து அணைத்துக் கொள்ளுவதற்காகவே இயக்கத்தின அவதாரத்தைப் புதுப்பித்து 'சிறி லங்கா சுதந்திரக்கட்சி' என்று நாமகரணமிட்டார்.

'கணவன் வழியே என் வழி' என்று வாயால் மட்டும் கூறிக் கொண்டுள்ள சிறிமாவோ ஆட்சி இன்று தமிழ் பேசும் இனத்தவர்களின் மிகச் சிறிய பிரச்சினைகளையும் உதாசீனம் செய்கிறதே அத்தகைய ஒரு அரசினை—சிறுபான்மை இனத்தவரை வேரோடு வீழ்த்த எண்ணும் குழுவினரை ஆதரிப்பவர்கள் ஆக மாட்டார்களா?

சிங்கள மக்கள் மட்டுமே இந்த நாட்டில் ஏகபோக உரிமைகளைப் பெற்று, சகல போகங்களையும் அனுபவிக்க உரித்துடையவர்கள் என்று வாதிடும் கூட்டத்துக்கு வக்காலத்து வாங்குபவர்கள் வகுப்புவாதிகள் பட்டியலில் இடம் பெற்றுத்தானே ஆக வேண்டும்.

### எது முற்போக்கு?

'முற்போக்கு' என்று முக்காடிட்டுச் சிறுபான்மை இனத்தை அழிக்க முயலும் சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்கு முட்டுக் கொடுப்பவர்கள் நிச்சயம் வகுப்புவாதிகளே! தமிழ் பேசும் இனத்தின் அழிவிலே கண்ணும் கருத்தும் கொண்டவர்களே! என்பதை ஐயமின்றிக் கூறுவோம்.

ஆரம்பத்தில் தமிழ் பேசும் மக்களுக்குச் சம அந்தஸ்து வழங்க முன் வந்தவர்கள், ஆட்சியினரின் ஏக மொழிக் கொள்கையை ஆதரிக்கவும், முன் வந்தனரே! காலத்துக்குக் காலம் தங்கள் கொள்கைகளையும் மாற்றுவதில் இவர்கள் தீராதி தீரர்கள் என்பதும் அறிந்த விடயமே!

இடதுசாரி இயக்கங்களில் இணைந்து கொண்டிருக்கும் மக்கள் ஐக்கிய முன்னணியினரும் பச்சை வகுப்புவாதிகளேயாவர். திரு. பிலிப் குணவர்த்தன தமிழ் பேசும் மக்களுக்கு விரோதமாக எடுத்துக் கொண்ட செயல்கள் யாவற்றையும் தமிழ் பேசும் இனம் என்றும் மறக்க முடியாது. 'பௌத்த பலவேகயாவிலேயே இரு கால்களையும் ஊன்றிக் கொண்டிருக்கிறேன்' என்று அவர் பகிரங்கமாகக் கூறியுள்ளாரே! பலவேகயாவே ஒரு அசல் வகுப்புவாத இயக்க மாகாதா? அத்தகையவர்களைத் தங்கள் வட்டம் என்று கூறிக்கொள்ளும் கொம்யூனிஸ்டுகளை வடி கட்டிய வகுப்புவாதிகள் என்று பகிரங்கமாகக் குற்றஞ் சாட்ட விரும்புகிறோம்.

### விக்கிரமசிங்காவின் சாதனை

திரு. பீட்டர் கெனமன் பேசும்போது இலங்கையின் புவியியலையே தெரியாதவர் போல் பேசினர்.

'இலங்கையில் ஓடும் நதிகளின் திசைகளைத் திருப்பி நாட்டைச் செழிப்பாக்க வேண்டுமென்ற திட்டத்தை முதன் முதலில் டாக்டர் விக்கிரமசிங்கா கொண்டுவந்தார். குறிப்பாக மகாவலி கங்கையை கிழக்கு மாகாணத்துக்குக் கொண்டுவரவேண்டும் என்பதே அவருடைய திட்டம்' என்று கூறினர்.

ஆங்கிலத்தில் பேசிய அவருடைய பேச்சு தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. ஆனல் இரு மொழிகளிலும் இதே கருத்து வலியுறுத்தப்பட்டது. மகாவலி கங்கை மலைநாட்டில் உற்பத்தியானலும் கிழக்குமாகாணத்திற்கூடாகச் சென்றுதான் திருகோணமலை அருகில் கடலில் கலக்கிறது. இந்த உண்மை திரு கெனமனுக்குத் தெரியாதா? மொழிபெயர்ப்பாளருக்குத்தான் தெரியாதா? தடுமாற்றமா? அல்லது உண்மையிலேயே ஞான சூனியமா?

### அரசியல் சதி

திரு. பீட்டரின் பேச்சிலிருந்து இடதுசாரி ஐக்கிய முன்னணியின் சதித்திட்டம் அப்பட்டமாகத் தெரிந்தது.

'அரசியல் நெருக்கடியில் ஒரு பகுதிதான் தீர்ந்துள்ளது. அடுத்த பகுதியில் கவனம் செலுத்துவோம். இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு முற்போக்குச் சக்தி வாய்ந்த, நாட்டை முன்னேற்றத்தக்க ஓர் பூரண சோசலிச அரசாங்கத்தை அமைக்க முன்வர வேண்டும். இதுவே எமது அடுத்த கட்டமாகும். இதற்கானஒத்துழைப்பை அனைவரும் தாரீர்.'

இவ்வாறு கூறினர் திரு. கெனமன். இதனல் இந்த இடதுசாரிகளின் உண்மையான நோக்கம் தெட்டத் தெளிவாகப் புலப்படுகிறது.

இ. ஐ. மு. வைச்சேர்ந்த ஒருவரான டாக்டர் பெரேரா எப்படியோ ஆளும் கட்சியுடன் இணைந்ததன்றி, தமது சுய கருத்துக்களனைத்தையுமே ஆளும் கட்சிக்கு அடவுவைத்து விட்டார். கொம்யூனிஸ்டுகளையும், மக்கள் ஐக்கிய முன்னணியினையும் விட்டு விட்டு டாக்டர் என். எம். மட்டும் சேர்ந்துவிட்டமை குறித்து கொம்யூனிஸ்டுகள் ஆத்திரமடையவில்லை. பிலிப் குணவர்த்தன ஓரளவு தங்கள் கட்டுக்கோப்புக் கலைந்ததை யிட்டு அங்கலாய்த்தாலும், பீட்டர் கெனமன் டாக்டரின் போக்கை வரவேற்றதுடன், ஆளும் கட்சிக்கு ஆதரவும் அளிக்க முன்வந்திருக்கிறார். இவர்களுக்குள் ஒரு பெரிய திட்டம் ஆட்சியைக் கைப்பற்றும் திட்டம்—புரட்சிகரமான பயங்கரத் திட்டம் இருக்கிறது என்று அவதானிகள் கருதுகின்றனர்.

ஆளும் கட்சியான சுதந்திரக்கட்சி 'ஒட்டகத்துக்கு கூட்டாரத்துள் இடம் கொடுத்த' படலத்தை அடைய வெகுநாட்கள் பிடிக்காது என்பதை காலம் உணர்த்தும்.

# எமது போராட்டம் ஓயாது

## அ. எ. வி. சங்க ஆண்டுக் கூட்டத்தில் தலைவர் கனகசபை முழக்கம்

சிங்களம் மட்டும் சட்டத்தை ஆட்சியாளர் அநியாயமான முறையில் அவசரமும் அவசியமுமாக அமுல் நடாத்த முனைவதால் தமிழ் பேசும் அரச ஊழியர்கள் எல்லையற்ற இன்னல்கள் பலவற்றிற்கு இலக்காக வேண்டியுள்ளது. இச் சட்டத்தை ஏற்க மறுப்பவர்களை வெளியேற்றுவதில் அரசாங்கம் முனைந்துவிட்டது. இதனை எதிர்த்துச் செயல்படுவது கஷ்டமான காரியம். கஷ்டமான காரியம் என்று தெரிந்திருந்தும் உரிமைப் போராட்டத்தில் இறங்கிவிட்டோம். இனி ஓயமாட்டோம். முன்னரைக் காட்டிலும் உறுதியுடன் போராடி வெற்றிகாண அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

இவ்வாறு அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் மூன்றாவது வருடாந்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் சங்கத் தலைவர் திரு. வே. கனகசபை முதலி குறிப்பிட்டார்,

வெள்ளவத்தை நாவலர் போதன மன்ற மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும் அவர் கூறியதாவது:

'சிங்களம் படித்தவர்களும் படிப்போம் என்று எழுதிக் கொடுத்தவர்களும் பொறியில் சிக்கிய எலிகளாகிவிட்டனர். சிங்களப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களை சிங்களத்தில் கடமையாற்றும்படி அரசு வற்புறுத்தப் போகிறது. சிங்களம் படிப்போம் என்று எழுதிக் கொடுத்தவர்கள் சிங்களப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும். பின்னர் சிங்களத்தில் கடமையாற்ற வேண்டும். இவர்களால் சிங்களத்தில் வேலை செய்வது இயலாத காரியம். அப்பொழுது இவர்களைத் தகுதி குன்றியவர்கள் என்று காரணம் காட்டி சம்பள உயர்ச்சியும் பதவி உயர்வும் தடுத்து நிறுத்தப்படும். சிங்களத்தைக் கல்[illegible] படித்தும் பழைய நிலைக்குத் தள்ளப்படுவார்[illegible]. இது உறுதி.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டாக இயங்கி வந்த நமது மொழிவழித் தொழிற் சங்கம் இப்பொழுது அரசாங்கத் துறையில் மட்டும் பன்னிரண்டாகப் பல்கிப் பெருகியுள்ளது. ஏனைய துறையில் உள்ளவர்களும் இதை உணர்ந்து, தமக்கெனத் தனிச் சங்கம் உருவாக்க முன் வரவேண்டும்.'

### ஆண்டறிக்கை

சங்கத்தின் ஆண்டு அறிக்கையில் பல முக்கியமான விடயங்களை வெளியிட்டுள்ளார்கள். ஆண்டறிக்கையிலிருந்து சில பகுதிகள் வருமாறு:

சிங்களம் மட்டும் சட்டம் உருவாக்கப்பட்டு அதன் பலனக எமது அடிப்படை உரிமைகள் மனிதத் தர்மத்திற்கே அப்பாற்பட்ட மிலேச்சத்தனமான வகையிற் பறிக்கப்பட்டுவருவதை எமக்காக உரிமை பெற்றுத்தரத் தவறிய எமது தாய்ச் சங்கம் வகுப்புவாத அடிப்படையில் தன்னினம், தன் மொழி என்ற பிரச்சாரத்தில் எம்மைப் புறக்கணித்த தோடல்லாமல் எம்மவர்களை அடிமைப் படுத்துவதி[illegible] றுககாது, நாம் மொழிவழி [illegible] சங்கம் இன்று இடையூறுகளுக்கும், இன்னல்களுக்கும் இடையில் தனது மூன்று ஆண்டுகளை முடித்து நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றது.



மூன்ருவது முறையும் அ. எ. வி. சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. வே. கனகசபை முதலி

கடந்த ஆண்டு நாம் பல சோதனைகளுக்கு ஆளாக நேர்ந்தது. சம்பள உயர்வையும், பதவி உயர்வையும் உதாசீனம் செய்து போராடி வந்த நாம் பதவி இழப்பை எதிர்நோக்க வேண்டிய இறுதிநாளாகிய 31-12-63ம் வந்து போய்விட்டது. இத்தினத்தில் பரிதாபத்திற்குரிய சில உறுப்பினர்கள், தம் பாதையையே மாற்றிக் கொண்டனர். வேறு சிலர், தொடர்ந்து போராட முடியாததாலும், எங்கள் போராட்டத்திற்குப் பங்கம் விளைவிக்க விரும்பாததாலும் பதவியைத் துறந்து விட்டனர். எஞ்சிய நாம் அத்தனை பேரும் இச் சோதனைகளுக்கெல்லாம் ஈடு கொடுத்து, சங்கத்தின் இலட்சியங்களை நிறைவேற்றும் வரையோ, அல்லது பதவி துறக்கும் வரையோ, தொடர்ந்து போராடுவதுஎன்ற திடசங்கற்பம் செய்துள்ளோம். நாம் கொண்ட இலட்சியம் புனிதமானது. சத்தியத்துக்கு உட்பட்டது. மாற்றானைத் தாழ்வு படுத்தாது. ஆகவே, இறுதி வெற்றி நமதே.

### அவர்களும் நம்மவர்களே

கொள்கையில் வழுவியவர்கள் எம்மை அலட்சியப் படுத்தாது எமது போராட்டத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. ஏனெனில், அவர்களும் நம்மவர்களே. போராடும் ஆற்றலை அவர்கள் இழந்ததற்காக அவர்களை நாம் அலட்சியம் செய்வதற்கில்லை. அவர்களுடைய நல்வாசிகளுடன் நாம் தொடர்ந்து போராடுவோம்.

கடந்த கால நிகழ்ச்சிகளிலிருந்து எதிர்காலத்தை எண்ணும்போது நம்மை நாம் உறுதிப்படுத்தும் நிலையில் இருக்கிறோம். எமது எதிர்காலம் நீதி தேவியின்

(13-ம் பக்கம் பார்க்க)


### உத்தரவாதம்

பின்வரும் தேர்வுகளுக்கு இக்கலாசாலை அளிக்கும் திறமை வாய்ந்த பாடங்களை அஞ்சற் கல்வி மூலம் பயில்வோர் சித்தியெய்வது திண்ணம். அவ்வண்ணம் தவறும் மாணவர்களுக்குத் திரும்பவும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படும்.

நீங்களும் சித்தியெய்த விரும்பின் இன்றே சேருங்கள்.

- இலங்கைப் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வும் ஜி. சி. ஈ. உயர்தரத் தேர்வும்— கலை, விஞ்ஞானம்.
- கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) தேர்வு— கலை, விஞ்ஞானம், வாணிபம்.
- அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிப் புகுமுகத் தேர்வு— விஞ்ஞானம்.

யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,
நெல்லியடி — கரவெட்டி.
கிளைகள்:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. த. அ. கட்சியின் தேசிய மாநாடு

# திருமலையில் நடைபெறும்

## வரவேற்புக்குழுத் தலைவராக மாணிக்கராசா தெரிவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒன்பதாவது தேசிய மாநாட்டைச் சிறப்புற நடாத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை கட்சியின் திருமலைக்கிளை ஏற்றுள்ளது. அதற்கு வேண்டிய ஒழுங்குகள் இப்பொழுது ஆரம்பமாகிவிட்டன. மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவராக திருமலைப் பிரதிநிதி திரு. எஸ். எம். மாணிக்கராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாநாட்டு ஆரம்ப வேலைகளைக் கவனிப்பதற்காக திரு. மாணிக்கராசாவின் இல்லத்தில் ஒரு வேலைத் தலமும் நிறுவப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் மாதம் 21-ந்திகதி தொடக்கம் 23-ம் திகதி வரை திருகோணமலையில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 9-வது தேசிய மாநாடு, 1956-ம் ஆண்டு திருகோணமலை மாநாட்டைவிடச்சிறப்பானவகையில் நடந்தேற, விரிவான ஏற்பாடுகளைத் திருகோணமலைத் தொகுதி உறுப்பினர் திரு. எஸ். எம். மாணிக்கராஜாவும், திருமலை மக்களும் செய்து வருகிறார்கள். 1956-ம்ஆண்டுமாநாட்டுப் 'பழம் புள்ளி'களும், அம்மாநாட்டையும், யாத்திரையையும் சிறப்புற நடாத்தி முடித்த இளைஞர்களும் இந்த ஏற்பாட்டு வேலைகளில் முழுமூச்சுடன் ஈடுபடத் தொடங்கி விட்டனர்.

கட்சியின் திருமலைக்கிளை கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய பொழுது, வரவேற்புக் குழுவொன்றும், மாநாட்டை ஒழுங்குசெய்ய வேறு குழுக்களும் தெரிவு செய்யப்பட்டன. திரு. எஸ். எம். மாணிக்கராஜா வரவேற்புக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

### திருமலை மக்களுக்கு...

வரவேற்புக் குழுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. மாணிக்கராஜா, திருகோணமலை மக்களுக்கு விடுத்துள்ள ஒரு செய்தியில், பின்வருமாறு கூறியுள்ளார்:

'இந்த நேரம் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் சோதனைக்காலமாகும். தமிழ் பேசும் மக்களில் ஒருசிலர் சிங்களம் படிக்க விரும்புகிறார்கள் என்ற சாட்டில், தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளை உதாசீனம் செய்துவிட்டுச் சிங்களத்தை தமிழ் பேசும் மக்களின் மீது திணிக்க இந்த அரசாங்கம் முயலுகிறது. தமிழ்பேசும் மக்களுக்கெதிரான இனவொழிப்பு நடவடிக்கையை இச் சிங்களச் சர்வாதிகார அரசாங்கம் தடையில்லாமல் கையாண்டு வருவதால், தமது சுயநிர்ணய உரிமைக்காக ஏகோபித்தவோர் போராட்டத்தில் இறங்குவதைத் தவிர, தமிழ் பேசும் மக்களுக்கு வேமுரு மார்க்கமும் இல்லை.



திரு. எஸ். எம். மாணிக்கராசா

இதனுலே, எமது கட்சியின் 9வது மாநாடு விசேஷ முக்கியத்துவம் பெறுகிறது. நிலாவெளிக்குப் பதிலாக இம் மாநாடு திருகோணமலையில் நடைபெறுவது ஏனெனில், தமது சுயநிர்ணயப் போராட்டத்திற்காகத் தமது ஒன்றுபட்ட உறுதியைத் தெரியப்படுத்துவதற்கு அவர்களுக்கு ஓர் சந்தர்ப்பம் அளிக்கவேயாகும். ஆகவே, பெருந்திரளான தமிழ் பேசும் மக்கள் இம் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கெனத் திருகோணமலையில் பிரசன்னமாயிருப்பார்கள். இவர்களை வரவேற்று உபசரிக்கவும், 1956ம் ஆண்டு திருமலை மாநாட்டைப் போன்று வெற்றிகரமாக இந்த மாநாட்டையும் நடத்தி முடிக்கவுமான பெரும் பொறுப்பு திருமலை தமிழ் பேசும் மக்களாகிய எம்மைச் சார்ந்துள்ளது.

### அழைப்பு

இந்த மாநாட்டை வெற்றியாக்க, எனக்கும் வரவேற்புக் குழுவுக்கும் முழு ஆதரவையும் நல்கும்படி, இளைஞர், வயோதிபர், ஆண், பெண் இருபாலாரும் உட்பட திருகோணமலை மக்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறேன். மாநாட்டு ஒழுங்குகளில் கடமையாற்றத் தொண்டர்களைத் திரட்டும் முயற்சிகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக கூடவே ஒரு வேலைத்தலமும் எனது வீட்டிலே திறக்கப்பட்டுள்ளது. திருமலை வாழ் தமிழ் பேசும் மக்களை, முக்கியமாக இளைஞரை, தொண்டர்படையில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.'

## தோட்டப் பாடசாலைகளின் தரம் உயர வேண்டும்

தோட்ட ஆசிரியர்கள் பொருளாதார ரீதியில் வெறுத்து ஒதுக்கப்பட்ட, பின்தங்கிய நிலையில்தான் இன்றும் உளர். ஆசிரியத் தொழில் புனிதமானது. புண்ணியமானது. மனிதாபிமானத்துடன் இரக்க சிந்தனையுடன் செயலாற்றவேண்டியது.

தானும் வாழவேண்டும், தன்னிடம் வரும் பிள்ளைகளையும் வாழப் பழக்க வேண்டும் என்பதே அவர்கள் இலட்சியம். ஊதியம் கருதியேஉலகிலேஒவ்வொரு வரும் தொழில்களைச் செய்கின்றார்கள். ஊதியம் குறைந்த தொழிலில் ஏதாவது ஊழல்கள் தோன்றுவது இயற்கை.

பாடசாலை ஆசிரியர்கள் மேல் பிழைபோடுவதிலும் பார்க்க தோட்டப் பாடசாலைக்கு என்று அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட பாடத்திட்டத்தின் மேல் தான் முழுப் பிழையுமாகும். எய்தவன் இருக்க அம்பை நோவதால் ஒரு பிரயோசனமும் இல்லை. பாடத் திட்டத்தை மாற்றி அமைத்து விட்டால் அதற் கேற்ப பாடங்களும் வித்தியாசப்படும்; ஆசிரியர் தொகையும் அதிகரிக்கப்படும். பாடசாலைக் கல்வியிலும் முன்னேற்றம் காணலாம்.

தோட்டப்பாடசாலைகள் என்று ஆரம்பிக்கப்பட்டனவோ அதே நிலையில் தான் இன்றும் இருக்கின்றன என்பதை யாராவது மறுக்க முடியுமா?

ஒரு தோட்டம் என்ருல் ஓர் ஊருக்குச் சமமானது. ஓர் ஊருக்கு ஓர் ஆசிரியரால் படிப்பிக்க முடியுமா? தோட்ட ஆசிரியரும் மனிதர் தான். மனித சக்திக்கு அப்பாற்பட்ட விடயத்தை யார்தான் செய்ய முடியும்? காலத்துக்குக்காலம் பத்திரிகைகளில் அறிக்கை விடுவதால் ஒருவித பயனும் ஏற்படமாட்டாது.

மலைநாட்டு பெற்ருேர்களும், அறிஞர்களும், ஆதரவாளர்களும், சீர்திருத்தச் செம்மல்களும், தொழிற் சங்கவாதிகளும், தொழிலாளத் தோழர்களும் மற்றும் தோட்ட ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து ஒரே குரலில் தோட்டப் பாடசாலை விடயமாக கிளர்ச்சி செய்து, தோட்டப் பாடசாலைத் தரத்தையும் படிப்பின் தரத்தையும் உயர்த்தி தோட்டச் சிருர்களின் புனர் வாழ்வுக்கு அத்திவாரமிட வேண்டியது அவசியமாகும்.

இரத்தினசபாபதி
நாவு-ஓயா

## மலை நாடு

## பாடத்திட்டம் மாற வேண்டும்

சுதந்திரன் 21-6-64ம் திகதி இதழில் மலைநாடு பகுதியில் திரு. டி. வி. துரை அவர்கள். நூரளையிலிருந்து எழுதிய கட்டுரைபற்றி எமது கருத்தையும் இங்கு குறிப்பிடுகின்ருேம்.

தோட்டப் பாடசாலை ஆசிரியர்களில் தொண்ணூறு வீதமானேர் தம் கடமையைக் கவனிப்பதில்லை என்று கட்டுரையாளர் எழுதியது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

கட்டுரையாளர் தமது கட்டுரையில் தோட்டப்பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலைக்கு நேரம் பிந்தி வருதல், மாணவர்களைக் கொண்டு வேலைகள் செய்வித்தல் முதலியவற்றை எழுதியுள்ளார். ஒருசில ஆசிரியர்கள் இவ்வாறு குற்றம் புரிந்தால் அதை உரிய வழிகளில் பாடசாலை முகாமையாளருக்கு அவரின் கவனத்திற்கோ அன்றி பெற்ருேர் தங்களின் ஸ்தாபனங்களின் கவனத்திற்கோ கொண்டு வந்து அவ்வண்ணம் செய்யும் ஒருசில ஆசிரியர்களைத் திருத்தவோ அன்றி சிருர்களின் கல்வியை மாசுபடுத்தும் கேவலமான இப்பாதகச் செயலுக்கு ஆளாகி உள்ள அவ்வாசிரியர்களை ஆசிரிய சமூகத்தில் இருந்து அகற்றவோ முடியும்.

இ. சுப்பிரமணியம்
பொதுச் செயலாளர்,
அ. இ. தோ. பாடசாலை ஆசிரியர் சங்கம்,
கலகா.

## இ. தொ. கழக பிரசாரக் கூட்டம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பிரசாரக் கூட்டம் ஒன்று இம் மாதம் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நோர்வூட் சிவசுப்பிரமணியர் கோயில் முன்றலில் நடைபெறும். இ. தொ. கழகத் தலைவர் வைத்திய கலாநிதி இ. மு. வி. நாகநாதன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், உட்பட கழகப் பிரமுகர்கள் பலர் உரை நிகழ்த்துவார்கள்.

அன்றியும் தோட்டத் தொழிலாளர் தம் பிள்ளைகளைஒழுங்காகப் பாடசாலைக்கும் அனுப்பமாட்டார்கள். உதாரணமாக: ஒரு பாட

(13-ம் பக்கம் பார்க்க)

## தகராறைத் தீர்க்க மத்தியஸ்தர் நியமனம்

### வேலை நிறுத்தம் வாபஸ்

நொட்டகலை பெரிய மண்வெட்டித் தோட்டத்தில் கடந்த 12ந் திகதி முதல் நடைபெற்று வந்த வேலைநிறுத்தம் 30ந் திகதி முடிவுற்றது. இந்த வேலைநிறுத்தம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை விசாரணை செய்வதற்கு அதிகாரம் பெற்ற மத்தியஸ்தரை நியமிக்க வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் கழகம் வற்புறுத்தியதின் மீது தொழில் இலாகா அதற்கு இணங்கி மத்தியஸ்தரை நியமித்துள்ளது. ஆகவே தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

இலங்கைத் தொழிலாளர் கழகம் தலைமை தாங்கிய இந்த வேலைநிறுத்தத்தில் 475 தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.


S-lon

இன்றைய அதிசயமான பைப் எஸ்-லோன்

உங்கள் வீட்டில், ஸ்டோரில், அல்லது தொழிற்சாலையில் தண்ணீர் வசதி அமைத்துக்கொள்ளும் உத்தேசம் உங்களுக்கு உண்டானுல் எஸ்-லொன் பைப்புகள் மிகக் குறைந்த செலவில் மேலானபயன் தரவல்லவை என்பதை மறந்து விடாதீர்கள். இவை வளையக்கூடியவை, கனக்குறைவானவை, நேரத்தையும் கூலியையும் மிச்சப்படுத்தும் - இணைப்பதும் வெகு சுலபம்-நீங்களே செய்யலாம். எஸ்-லொன் உக்காது கறையான் அண்டவிடாது, அரிப்பு ஏற்படுத்தாது, கிருமி, கறள், அழுக்குப்படல எதிர்ப்புடையது.

ஆகவே பணத்தை மிச்சம் பிடிக்க வேண்டுமானுல், உங்கள் எஸ்-லொன் பைப் தேவைகளை எந்த பெரிய ஹார்ட்வெயர் ஸ்டோரிலிருந்தாகினும் இன்றே வாங்குங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம், பேங்ஷால் வீதி, கொழும்பு-11.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'அட்வைஸ்' கிடைக்காமல் பட்ட அவஸ்தைகள்

## மதுரையிலிருந்து 'புளியம்' பழமுதிர் சோலை சென்றோம்

**பணத்துக்கான 'அட்வைஸ்' வராமையினால் 9 நாட்கள் மதுரையில் தவம் கிடந்தோம். நமக்கு கைமாற்றுக் கொடுத்த போட்டருக்கு தினசரி நம்மைத் தரிசிக்கும் வேலை. தந்தி கொடுத்த பின்தான் பணம் கிடைக்க வழி கிடைத்தது. திருப்பரங்குன்றம், அழகர்மலை, பழமுதிர் சோலை ஆகிய இடங்களைத் தரிசித்துவிட்டு திருநெல்வேலி புறப்படுகிறோம். ஔவையாருக்கு சுட்டபழம் கொடுத்த கந்தன் உறையுமிடமான பழமுதர் சோலை செல்லுகையில் நமது மைந்தன் முகுந்தன் ஐந்தரைக் கட்டையில் சுருதி போட்டு தனது ஆலாபனையை ஆரம்பித்தான். எதற்காக?**

### மைந்தன் முகுந்தனின் மாயக்குரல் ஒலி

ஆச்சு; மதுரையில் நாம் முகாம் போட்டு 9 நாட்களாச்சு! இந்த 9 நாட்களும் ஒரு நாளைக்கு இரண்டுதடவைகளாக நாம் மதுரை 'சென்ரல்' வங்கிக்கு நடையாக நடக்கின்றோம். அப்படி நடந்ததில் மதுரை வீதிகள் எல்லாம் நமக்கு அத்துபடியாகின்றன. இந்த 9 நாள் நடையின்போது நமக்கு வங்கி மனேஜர் கூறும் பதில் இதுதான்: 'என்ன ஸார் செய்யிறது? இலோனிலிருந்து இன்னும் உங்கள் 'அட்வைஸ்' வந்து சேரவில்லையே?'

நாம் மட்டும் பணத்துக்கு இப்படி நடையாய் நடக்கவில்லை. இன்னும் ஒரு ஜீவனும் நடையாக நடந்து கொண்டே இருந்தது. அது தான் 'போட்டர்!'

நமக்கு நூறு ரூபாவை அவன் தந்துவிட்டு, இரண்டு நாள் 'சாண்ஸ்' தந்தான். அப்பவும் நாம் அவனுக்குப் பணத்தைத் திருப்பித் தராமல் போகவே, தினசரி அவனும் இரண்டு தடவை நம்மைத் தேடி நடக்கத் தொடங்கிவிட்டான்.

**அட்வைஸ் அவஸ்தை**

'அட்வைஸ்' வராத சமாச்சாரத்தை மனேஜர் நம்மிடம் சொல்ல, நாம் அதையே கிளிப்பிள்ளை போல் 'போட்டரிடம்' உரைக்க இப்படியே நாட்கள் 9 கடந்துவிட்டது.

இடையில் ஏற்பட்ட செலவுகளை ஒருமாதிரி நம்மிடமிருந்த சர்வ வல்லமையுள்ள 'பிரிட்டிஷ் கரன்ஸி' நோட்டுகளைக் கொண்டு 'சரிக்கட்டி'க் கொள்ளுகின்றோம். நம்மைத்தான் ஒரு மாதிரிச் 'சரிக்கட்ட' முடிந்ததேதவிர, 'போட்டரை'ச் சரிக்கட்ட இயலவில்லை!

பொறுமையிழந்த நாம், கோபாவேசம் கொண்டு ஒரு நாள், மட்டக்களப்பில் நம் பிரயாணத்துக்கு மிக ஒத்தாசையாக இருந்த கிராம சபை எழுதுவினைஞர் திரு. துரைராசா அவர்களுக்கு, 'ஐயா! இன்னும் நீங்கள் செலுத்திய பணம் வந்து சேரவில்லை. மதுரை வீதியில் பஞ்சையாய் பராரியாய்த் திரிகின்றோம்; ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள்!' என்று ஒரு தந்தியை அடித்துவிடுகின்றோம்.

தந்தி வேலை செய்திருக்கின்றது. மனுஷன் உடனடியாக நடவடிக்கை எடுத்ததன் மூலம் 10-ம் நாள் சுபவேளையில் திருவாளர் பணநாதனார் நம் கரமேறுகின்றார்! மதுரை மீனாக்ஷி அம்மனுக்கு, அந்த எழுதுவினைஞர் பேரில் ஓர் அர்ச்சனை செய்துவிட்டு, போட்டருக்கும் வட்டியோடு பணத்தைச் சேர்த்துவிட்டு, நமது பிரயாண 'புரோகிரா' முக்கு வருகின்றோம்.

மதுரைப் பொலீஸ்காரர் சொல்லியபடி முதலில் மதுரை மீனாக்ஷியைத் தரிசித்துவிட்டு தெப்பக்குளம் செல்கின்றோம். தெப்பக்குள தரிசனத்தை முடித்துக் கொண்டு 'திருமலை நாயக்கன் மஹா'லுக்குள் நுழைகின்றோம். அப்படி நுழைந்த நம்மைச்சுற்றி ஒரு கூட்டம் 'கைடு'கள்—அதாவது வழிகாட்டிகள்- மொய்க்கின்றனர். அவர்களின் 'பிடுங்க'லிலிருந்து ஒருபடியாக 'விளத்தி' அங்குள்ள கொலு மண்டபம், மாடமாளிகை, கூட கோபுரம், அரசகுமாரிகள் அமரும் உப்பரிகைகள் முதலியவற்றைப் பார்க்கின்றோம்.

அதன் பின்னர் திருப்பரங்குன்றம் சென்று மலைக் குகைக்குள் ஆலயம்சமைத்து அங்கு அழகாகக் கோயில் கொண்டிருக்கும் முருகனைத் தரிசித்துவிட்டு, நேரே அழகர் கோயிலுக்குப் பஸ் ஏறுகின்றோம்.

வழியில் ஒரு புதுமையான அனுபவம் கிட்டுகின்றது நமக்கு.

திருப்பரங்குன்றத்தில் வைத்து நமது அருந்தவப் புதல்வன் முகுந்தன் அடம் பிடித்து ஒரு பலூன் வாங்கிக் கொள்கின்றான்.

பேசாமல் அவன் கையில் 'பலூனை'க் கொடுத்த அந்த மனிதர், தாம் பஸ்ஸின் எதிர்த்திசையில் மதுரை நோக்கிச் சென்று கொண்டிருந்ததாகவும், இந்தப் பஸ்ஸிலிருந்து 'வார்' என்று ஒரு பலூன் பறந்து வந்து தமது காருக்குள் அகஸ்மாத்தாக விழுந்ததாகவும், உடனே அதை உரியவனிடம் சேர்க்க வேண்டுமென்ற அவாவில்

**நவம்**

காரைத் திருப்பிக் கொண்டு பஸ்ஸின் பின்னால் ஓடி வந்ததாகவும் கூறிவிட்டுச் சென்று விட்டார்.

இந்தச் சின்னஞ் சிறு நிகழ்ச்சி நமக்கு உரோமாஞ்சனத்தை ஏற்படுத்துகின்றது. 'மனிதன் யந்திரமாக இயங்கிக் கொண்டிருக்கின்ற

கெல்லாம் விடாமல் நம்மைத் தொடர்ந்து வந்த ஒரு மகாபுருஷர் யார் என்றால் அவர்தான் திருவாளர் புளியனார்!

சாலையின் இருமருங்கிலும் புளிய மரங்கள் சோலை சோலையாய் நிற்பது மிக அழகாகத்தான் இருக்கின்றது. இருக்கும் புளியமரங்கள் போதாதென்று, இன்னும் இன்னும் நட்டு உற்பத்தி செய்து கொண்டே இருக்கின்றார்கள். பூமி சாஸ்திரப் பாடத்தில், 'நமக்கு இந்தியாவிலிருந்து புளி இறக்குமதி செய்யப்படுகின்றது' என்று படித்த பாடத்தின் அர்த்தம் இப்போது தான் நமக்கு நன்றாகப் புரிகின்றது.

பழமுதிர் சோலை செல்லும் வழியெல்லாம் தத்தித் தத்திக் கிளைக்குக் கிளை பாயும் குரங்கினங்களையும்,

சிறியது. ஆனால் ஆலயத்தைச் சுற்றிவர இருக்கின்ற இயற்கை எழில் சொல்லில் அடங்கா! முருகன் நிச்சயமாக அந்தப் பிரதேசத்தில் குடி இருக்கவே செய்வான். முருகப் பெருமான் தமிழ்ப் பாட்டி ஔவைக்குச் 'சுட்ட பழம்' கொடுத்த இடமும் இதே பழமுதிர் சோலைதானும். ஆனால் மருந்துக்குக் கூட ஒரு நாவல் மரத்தையும் அங்கு காணோம்!


அங்கு உள்ள நூபுர கங்கையில் நீராடி முருகதரிசனம் செய்துவிட்டு, மீண்டும் அழகர் கோயில் வந்து அங்கிருந்து மீண்டும் மதுரைக்குப் பஸ் ஏறுகின்றோம் நாம்.

அன்று இரவே நாம் திருநெல்வேலி செல்ல வேண்டியிருப்பதால், அவசரம் அவசரமாக மூட்டை முடிச்சுகளைச் சுருட்டிக்கொண்டு மதுரை ரெயில் நிலையத்துக்கு விரைகின்றோம்.

சொல்லி வைத்தாற் போல், முன்னர் ஒரு தடவை மதுரையில் சந்தித்த அந்தப் பொலீஸ்காரர் நம் முன் வந்து நிற்கின்றார்.

"என்ன ஸார் திருநெல்வேலி புறப்பட்டாச்சா? மதுரையை நல்லபடி சுற்றிப் பார்த்தாச்சா" என்று கேட்டுக் கொண்டு, நம்மை திருநெல்வேலி ரெயிலில் பக்குவமாக ஏற்றுவதில் முனைந்தார் அந்தப் பொலீஸ்காரர்.

திருநெல்வேலியில் நாம் இறங்கிய பிற்பாடுதான் அந்தப் பொலீஸ்காரர் நம் மீது காட்டிய 'கருணையின்' அர்த்தம் புரிந்தது. அம்மட்டல்ல; விலை உயர்ந்த பொருட்கள் அடங்கியிருந்த நம் பெட்டி காணமற் போன இரகசியமும் திருநெல்வேலி ஸ்டேஷனில் வைத்துத்தான் நமக்குப் புரிகின்றது!...




**ஐந்தரைக்கட்டை அமரகீதம்**

அழகர் கோயிலை நோக்கிச் சென்ற நமது பஸ் சற்று வேகமாகச் செல்லவும் முகுந்தன் கையிலிருந்த 'பலூன்' கீழே தவறிவிழுந்து விடுகின்றது.

கேட்கவேண்டுமா? 'ஆலாபனம்' தொடங்கிவிடுகின்றது. எத்தனை சமாதானம் சொல்லியும் பையனின் ஐந்தரைக் கட்டை 'அமர கீதத்தை' நிறுத்த முடியவில்லை. இப்படி அவன் 'கான மழை' பொழிந்து கொண்டிருந்த போது, திடீரென்று, பின்னாலிருந்து வந்த கார் ஒன்று எங்கள் பஸ்ஸை முந்திக் கொண்டு வந்து நின்றது.

காரிலிருந்து இறங்கிய ஒரு நடுத்தர வயதினர் எங்கள் பஸ்ஸை நிறுத்தினார். அவர் கையில் ஓர் அழகான பலூன் இருந்தது.

'அடடே! தேவலையே! தமிழ் நாட்டில் 'பலூன்' வியாபாரம் காரிலே கூட நடக்கின்றதோ!' என்று வியந்து கொண்டு, அந்தப் 'பலூன்காரரை' நாம் கூவி அழைக்கின்றோம்.

வியர்க்க விறுவிறுக்க வந்த அந்த மனிதர், பஸ்ஸுக்குள் ஏறி, 'இந்தப் பஸ்ஸில் 'பலூனை'த் தொலைத்தவர்கள் யாராவது இருக்கின்றார்களா?' என்று கேட்டுவைக்கின்றார்.

நாம் பதில் சொல்வதற்குள் நமது பையன் சுருதியை இன்னும் சற்று கூட்டி, பலூனுக்குச் சொந்தக்காரன் தான் தான் என்பதை 'விளக்கி' விடுகின்றான்.

இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு மனிதாபம் மிக்க நிகழ்ச்சியா?' என்று வியப்புக் கொள்ளுகின்றோம் நாம்.

பேசாமல், அழகர்கோயில் 'புரோகிராமை' ரத்துப் பண்ணிவிட்டு அந்த மனிதருடன் சற்று நேரம் பேச்சுக் கொடுத்தால் என்ன என்று மனம் ஏங்குகின்றது!

கண்டக்டர் 'ரைட்' சொல்கின்றான். பஸ் அழகர் கோயில் நோக்கித் தன் 'நடை'யைக் கட்டுகின்றது.

இராமேஸ்வரத்தில் தான் கோபுரம் என்றால்; மதுரையில்தான் வானோங்கிய 4 கோபுரங்கள் என்றால், திருப்பரங்குன்றத்தில்தான் திகைப்பூட்டும் கோபுரம் என்றால், அழகர்கோயிலிலும் அற்புத வேலைப்பாடமைந்த கோபுரம் கம்பீரமாகக் காட்சி தருகின்றது!

கோயிலுள் நுழைந்து கூடலழகராகிய சுந்தரராஜப் பெருமானையும், மோகனவல்லி அம்மையையும் சேவித்துவிட்டு, அறுபடை வீடுகளில் ஒன்றும் பழமுதிர் சோலைக்கு வருகின்றோம்.

**புளியம் 'பழமுதிர்சோலை'**

அழகர் கோயிலிலிருந்து சுமார் இரண்டு மைல் காட்டுப் பாதையால் நடந்து செல்ல வேண்டும் பழமுதிர் சோலைக்கு!

என்ன ஆச்சரியம்! பழமுதிர்சோலைக்கு நாம் வரும் வழியெல்லாம் பழங்கள் உதிர்ந்ததுதான் இருந்தன— அத்தனையும் புளியம்பழம்! தமிழ் நாட்டில் நாம் எங்கெங்கு சென்றோமோ; அங்

அவைகள் பற்றிப் பிடிக்கும் புளியங் கொம்புகளையும் பார்த்துக்கொண்டே அந்த இரண்டுமைல் தூரத்தையும் நடந்து முடித்துவிடுகின்றோம் நாம்.

**சுட்ட பழம் தந்தவனே...!**

பழமுதிர் சோலையில் முருகன் குடிகொண்டிருக்கும் ஆலயம் மிகச் சிறியது. நமது கதிர்காமக் கோயிலைவிடச்

வளரும்

## வேல் தைலம்
## மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக்கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**

**34, செட்டியார் தெரு,**

கொழும்பு-11.

சுதந்திரன்
SUTANTIRAN

1964 யூலை மாதம் 5-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் : 3411 த. பெ. 1183

# அரியணை உரை

நான்கு மாதங்களுக்குப் பிறகு பாராளுமன்றம் மீண்டும் கூடியுள்ளது. இவ்வருட அரியணைப் பிரசங்கத்தில் மொழி பற்றி ஒரு சில வார்த்தைகள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன. வார்த்தைகளின் எண்ணிக்கை கூடிவிட்டதால், சிறுபான்மை மக்களுக்கு நியாயம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை.

'சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தனிச் சிங்களச் சட்டத்தையும், தமிழ் மொழியின் நியாயமான உபயோகம் பற்றிய சட்டத்தையும் அமுல் நடாத்துதற்குத் தேவையான சட்டவிதிகள் இயற்றப்படும்' என்று அரியணை உரை கூறுகிறது.

'தமிழ் பேசும் மக்களுக்குப் பாதகம் ஏற்படாத முறையில் தனிச் சிங்களச் சட்டம் அமுல் நடாத்தப்படும்' என்று அச் சட்டம் இயற்றிய காலத்திலிருந்து பல தடவை கூறிவிட்டனர் ஆட்சியாளர்.

ஆனால் நடந்ததென்ன? அந்த வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிட்டன. சிங்களத்தைத் தமிழ் பேசும் மக்கள் மீது பலவந்தமாகத் திணித்து வருவதுடன், அச் சட்டத்தைக் கொண்டு தமிழ் பேசும் ஊழியர்களை அரசாங்க சேவையிலிருந்தே விரட்டி அடித்துக் கொண்டிருக்கின்றனர். தமிழ் பேசும் இனத்தையே அழித்துவிடக் கூடியதாகத் தனிச் சிங்களச் சட்டம் இன்று அமுல் நடத்தப்படுகிறது.

இந்த நிலையில், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தனிச் சிங்களச் சட்டம் அமுல் நடாத்தப்படுமென அரியணை உரையில் குறிப்பிட்டிருப்பதைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

• அப்படியானால், தனிச் சிங்களச் சட்டத்தின் கீழ் இதுவரை எடுக்கப்பட்ட மிலேச்சத்தனமான, கண் மூடித்தனமான நடவடிக்கைகளை வாபஸ் செய்தாக வேண்டுமே! செய்வார்களா?

ஆனால், அரியணை உரையில் குறிப்பிட்டுள்ளபடி சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தை அமுல் நடாத்துவார்களென்று நம்பலாம். அதனை அமுல் நடத்தினால், சிங்களவர்களைத் திருப்திப்படுத்தக் கூடியதாகவே நடாத்துவார்களென்பதில் ஐயமில்லை.

தெளிவாகக் கூறின், இச் சட்டத்தை அமுல் நடாத்துவதற்காக இயற்றப்படும் விதிகள் சிங்கள மக்களுக்குச் சாதகமாகவே இருக்க முடியும்.

அரியணை உரையில் குறிப்பிட்ட அளவில் எந்த விடயத்தையும் அமுல் நடாத்த வேண்டுமென்பதில்லை. எனவே இந்த வாக்குறுதியும் காற்றில் பறந்தாலும் நாம் வியப்படைய மாட்டோம். சட்ட விதிகள் இயற்றப்படுமா, இயற்றப்பட்டால் அவை தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் வழங்கக் கூடியதாக இருக்குமா என்பதே இன்றுள்ள கேள்வி.

மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அரியணை உரை பகருகிறது.

முதலில், மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். அடுத்து, மாவட்ட சபைகளுக்குப் போதிய அதிகாரம் வழங்குவதற்கான விதிகள் மசோதாவில் இடம் பெற வேண்டும். இவ்விரண்டும் இவ்வாண்டில் நடைபெறும் என்று நிச்சயமாகக் கூறுவதற்கில்லை.

மாவட்டசபை பற்றிய விசாரணைக் குழுவின் சிபார்சுகளைப் பார்த்தால், முக்கியமான அதிகாரங்கள் மாவட்ட சபைக்கு வழங்கப்படுமென எதிர்பார்க்க இடமில்லை.

தமிழ் பேசும் மக்களைத் திருப்திப்படுத்த மாவட்ட சபைகளை அமைத்து, சிங்கள வகுப்பு வாதிகளைத் திருப்திப்படுத்த அச்சபைக்குப் போதிய அதிகாரங்களை வழங்காமல் கண் துடைப்பு செய்யவும் இடமுண்டு.

ஒவ்வொரு அரியணை உரையிலும் இலங்கை—இந்தியர் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடுவதுண்டு. ஆனால் பிரச்சினையைத் தீர்க்கத் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுப்பதே இல்லை.

வழக்கம்போல இவ்வாண்டு அரியணை உரையிலும் அந்தப் பிரச்சினை இடம் பெற்றுள்ளது. அது தொடர்ந்து இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு அரியணை உரையில் இடம் பெறப் போகிறதோ? ஏனெனில் வகுப்புவாத அடிப்படையில் உருவான இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தின் கீழ் என்றுமே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

இவ்வருட அரியணை உரையில் ஒரு சிறிய மாற்றம் காணப்படுகிறது. "வழவழா" என்று பிடி கொடுக்காமல் கூறுவது ஓரளவு குறைந்து, சில விடயங்களைச் சிறிது திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருப்பதுதான் அந்த மாறுதல்.

இன்னும் ஓராண்டில் ஆளும் கட்சி பொதுத் தேர்தலில் குதிக்க வேண்டியிருப்பதால், இந்த அரியணை உரையில் கூறப்பட்டுள்ள விடயங்களை அமுல் நடத்துவதைப் பொறுத்தேயிருக்கிறது ஆளும் கட்சியின் எதிர்காலம்.

# ஐக்கிய உணர்ச்சியுடன் செயலாற்ற வேண்டும்

## கருத்து வேற்றுமையால் கட்சியில் "உள்கட்சி ஜனநாயகம்" வளரும்

ஓர் இனம் ஒன்றுபட்டு நின்றாலே உரிமைகளைப் பெற்றுத் தலை நிமிர்ந்து வாழ முடியும். ஒற்றுமை குலைந்திடில் உரிமைகள் பறிபோவதுடன் இனமே அழிந்தொழிந்து போய்விடும்.

இனத்தின் விடுதலைக்கு வழிகாட்டும் அரசியல் கட்சியின் நிலையும் இதுதான். தமிழரசுக்கட்சி சரித்திரபூர்வமான ஒரு கடமையை நிறைவேற்றும் பொறுப்பை மேற்கொண்டுள்ளதால் உறுதியான எஃகு கட்டுப்பாடும் ஒற்றுமையும் கட்சியில் நிலவவேண்டியது அவசியமாகும். அதன் அணியிலே பிளவு ஏற்பட இடமிருக்கக் கூடாது.

தமிழ் பேசும் இனத்துக்கு விடுதலை தேடித் தரும் பொறுப்பை ஏற்றுள்ள தமிழரசுவாதிகள் ஐக்கிய உணர்ச்சியுடன் ஒரே குழுவாக நின்று செயலாற்ற வேண்டும்.

உறுப்பினர்களிடையே அரசியற் பிரச்சினைகளின் மீதும் கட்சி அமைப்பை உருவாக்கும் பிரச்சினையின் மீதும், கட்சி முடிவுகளின் மீதும் கருத்து வேற்றுமைகள் தோன்றுவது இயல்பே.

கட்சியின் வளர்ச்சிக்கும், கட்சி வலிமை பெறவும் இத்தகைய கருத்து வேற்றுமைகள் நிச்சயம் தேவைப்படுகின்றன.

### உள் கட்சி ஜனநாயகம் தேவை

கருத்துவேற்றுமைகள் இருந்தால்தான் கட்சியில் 'உள் கட்சி ஜனநாயகம்' நிலவ இடம் கிடைக்கும். வேறு வார்த்தைகளில் கூறின், 'உள் கட்சி ஜனநாயகம்' கட்சியில் இருந்தால்தான் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடமிருக்கும்.

ஓர் அரசியற் கட்சியுள்—அதுவும் மக்களின் பேராதரவை அசைக்க முடியாதபடி பெற்றுள்ள ஒரு கட்சியுள்—எதேச்சாதிகார மனப்போக்கு எளிதாக வளர முடியும். அவ்வாறு கட்சி எதேச்சாதிகாரப் பாதையிற் செல்வதைத் தடுத்து நிறுத்தவும், எதேச்சாதிகார மனப்பான்மை கட்சியினுள் தோன்றி வளருவதைத் தடுக்கவும் 'உள் கட்சி ஜனநாயக'த்தால் மட்டுமே முடியும்.

கருத்துவேற்றுமை இல்லையேல், உள் கட்சி ஜனநாயகம் வளர முடியாது. உள் கட்சி ஜனநாயகம் வளராவிட்டால், கட்சியினுள் எதேச்சாதிகார மனப்பான்மை வளர இடமேற்படமுடியும்.

ஆதலின், தமிழரசுக் கட்சிக்குள் மேற்கண்ட மூன்று காரணங்கள் மீதும் கருத்துவேற்றுமைகள் ஏற்படுவதைப் பெரிதும் வரவேற்கின்றோம்.

### எப்படித் தீர்ப்பது?

இக் கருத்துவேற்றுமைகளை எப்படித் தீர்ப்பது?

கட்சியின் ஒரு தீர்மானத்தின் மீது கருத்துவேற்றுமைகள் ஏற்பட்டால், அந்தத் தீர்மானத்தை எதிர்ப்பவர்கள் கட்சியினுள் அது பற்றி ஒரு விவாதத்தையே ஆரம்பித்தல் வேண்டும்.

அந்த விவாதம் கட்சி உறுப்பினர்களிடையே மட்டுமே நடைபெற வேண்டும். விவாதத்தைப் பொது மேடைக்கோ, பத்திரிகைகளுக்கோ, பொது மக்களிடமோ எடுத்துச் செல்லவே கூடாது. இது பற்றித் திட்டவட்டமான கட்டுப்பாடு இருப்பது தேவையே.

கருத்துவேற்றுமைகொண்டோர்கள் உறுப்பினர்களுடன் விவாதித்து, அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கட்சிக் குழுவின் அடுத்த கூட்டத்திலே அத் தீர்மானத்தை மாற்றி அமைக்க முயற்சி செய்ய வேண்டும். அக் கூட்டத்திலேயும் தமது கருத்து ஏற்றுக் கொள்ளப்படவில்லையேல், கட்சியின் அடுத்த வருடாந்த மாநாட்டில் தமது கருத்தை வலியுறுத்தித் தீர்மானத்தை மாற்றியமைக்க முயற்சி செய்ய வேண்டும்.

அப்படிச் செய்வதே முறை. கட்சியின் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் பாதுகாக்க அதுதான் வழி. அப்படிச் செய்வதின் மூலம் கட்சி மென்மேலும் வலுவடைவதுடன் கட்சியின் 'உள் கட்சி ஜனநாயகமும்' பாதுகாக்கப்படும்.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

அதை விடுத்து, கட்சியின் தீர்மானத்தை எதிர்த்துப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தும், பொது மேடைகளில் பேசியும் கிளர்ச்சி செய்யத் தொடங்கினால், அதனால் கட்சியினுள் பிளவுகள் தோன்றி கட்சி பலவீனமடையவும் கட்சிக் கட்டுப்பாடு கலகலக்கவும், அச் சம்பவத்தை எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் பயன்படுத்தி கட்சி மீது தாக்குதல் தொடுக்கவும் இடமேற்படும்.

### உரிமை கிடையாது

ஆகவே கட்சியுள் தோன்றும் கருத்து வேற்றுமைகளை மக்களிடம் எடுத்துச்செல்ல எந்த உறுப்பினருக்கும் உரிமைகிடையாது. அது கட்சிக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் மீறுவதாகும். கட்சி ஒற்றுமை உணர்ச்சியுடன் ஒரே குழுவாக செயலாற்றவும் அதனால் தடங்கல் ஏற்படும்.

தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டையும், தமிழரசுவாதிகளின் கொள்கைப் பிடிப்பையும் எதிர்க்கட்சிகள்—எஃகு கட்டுப்பாடுள்ள கட்சிகள் என்று கூறப்படும் இடதுசாரிக் கட்சிகள் கூட—பாராட்டி வந்துள்ளன.

திருமலை யாத்திரை, சத்தியாக்கிரகம், கட்சி மாநாடுகள் முதலியவை கட்சியின் கட்டுப்பாட்டையும், ஒற்றுமையுணர்ச்சியுடன் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒரே குழுவாக நின்று செயலாற்றிய திறனையும் அனைவருக்கும் எடுத்துக்காட்டின. இத்தகைய உணர்ச்சியும், கட்டுப்பாடும், ஐக்கியமும் தான் கட்சியைத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஏகோபித்து ஆதரிப்பதற்கு ஆதாரமாக அமைந்தன.

கட்சியினுள் ஏற்படும் சிறு சலசலப்பையும்கூட பெரிதுபடுத்தி 'கட்சியில் ஒற்றுமை குலைந்துவிட்டது, பிளவு ஏற்பட்டுவிட்டது' என்றெல்லாம் பிரசாரம் செய்ய பத்திரிகைகள் தயாராயிருக்கின்றன. இந்த நிலையில் கட்சியின் கருத்துவேற்றுமைகளைக் கட்சிக்குள்ளேயே தீர்த்துக்கொண்() ஒற்றுமை உணர்ச்சியுடன் செயலாற்ற வேண்டிய தேவை அதிகரித்துள்ளது.

### சிவசுந்தரம் இராஜிநாமா

கிளிநொச்சிப்பாராளுமன்றப் பிரதிநிதி திரு. சிவசுந்தரம் கட்சியின் கட்டுப்பாட்டையும் கட்சி ஒழுங்கையும் மீறியதுடன் கட்சியின்மீது பகிரங்கத் தாக்குதலும் தொடுத்துள்ளார்.

திரு. சிவசுந்தரம் கட்சியின் கொள்கையின்மீது பிடிப்பில்லாதவர் என்பதை அவரது இராஜினாமா கடிதமே எடுத்துக்காட்டுகிறது. அத்தகைய ஒரு நபர் கட்சியில் இவ்வளவுகாலம்எப்படி உறுப்பினராக இருந்தார் என்பதுதான் விந்தையாக இருக்கிறது.

கட்சிக் கொள்கைமீது நம்பிக்கை வைக்காதவர்கள் கட்சியிலிருந்து வெளியேறுவதால்கட்சிவலுவடையுமேயன்றி பலவீனமடையாது.

### தமிழ் தெரிந்த சிங்களப் படை

25000 தமிழ் தெரிந்த சிங்களவர்கள் படையொன்றைக் கல்வித் திணைக்களம் திரட்டவிருக்கிறது. இவர்களுக்கு தமிழ் மொழிப் போதனையும் சில காலங்கட்கு நடைபெறும். அதன் பின்னர் இவர்கள் வடகிழக்கு மாகாணங்களுக்கு அனுப்படுவார்கள். வடகிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்படும் இவர்கள் தமிழ் பேசும் மாணவர்களுக்கு சிங்களம் போதிப்பார்களாம். 'அமைதியின் தூதுவர்களாக இவர்கள் வட கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள்' என்று கல்வி மந்திரி அபிப்பிராயம் வேறு தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் மீது பிறிதொரு நாடு படையெடுக்க முன்னர் படையெடுக்கப்படவிருக்கும் நாட்டு மக்கள் பேசும் மொழியை படைவீரர்களுக்குப் போதிப்பது போராட்ட தந்திரங்களில் முதன்மையானது. இத்தந்திரத்தில் முன் நிற்பவர்கள் சீனர்கள் என்பது உலகறிந்த உண்மையும் கூட.

கடந்த ஆண்டு இந்தியர் மீது சீனா படையெடுக்க முன்னர் சீனப்படை வீரர்களுக்கு இந்தி முதல் சகல பிராந்திய மொழிகளும், தமிழ் உட்படப் போதிக்கப்பட்டது.

இதே போன்று வடகிழக்கு மாகாணங்களில் வதியும் தமிழ் பேசும் மக்கள் மீது 'சிங்களம் மட்டும்' என்ற படை ஆக்கிரமிப்பு செய்யவிருக்கிறது. அதன் முதற்படியே இன்று கலவி அமைச்சு அப்படைக்குத் தமிழ் கற்பிக்கச் செய்யும் முயற்சி.

சமாதானத்தின் தூதுவர்கள் என்ற போர்வையில் செல்லும் சிங்கள ஆசிரியர்கள் சிங்களத்தைப் போதிப்பதுடன் மட்டும் நின்று விடமாட்டார்கள். 'சிங்களம்'

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்புரிமையைத் துறக்கவும்

## இராஜிநாமாச் செய்யும் எம். பிக்கு தமிழரசுத் தந்தை கடிதம்

கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. அ. சிவசுந்தரம் இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து தமது உறுப்புரிமையைத் துறப்பதாக தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களுக்கு கடந்த 28 ம்திகதி எழுதியுள்ளார். அக் கடிதத்திற்கு தமிழரசுத் தந்தை அவர்கள் எழுதியுள்ள பதிலில், 'கட்சியின் நடைமுறை விதிகளுக்கு ஏற்ப ஒருவர் கட்சியிலிருந்து வெளியேறுவதாயின அவரின் பாராளுமன்ற உறுப்புரிமையையும் துறக்க வேண்டும் என்பது நியதி. இதை ஏற்றே கடந்த பொதுத் தேர்தலில் நமது கட்சி வேட்பாளராக போட்டியிட்டுள்ளீர்கள். ஆகவே கட்சி உறுப்புரிமையைத் துறக்கும் அதே பொழுதில் பாராளுமன்ற உறுப்புரிமையையும் துறக்கவும்,' என்று குறிப்பிட்டுள்ளார்.

திரு. சிவசுந்தரத்திற்குத் தமிழரசுத் தந்தை எழுதியுள்ள கடிதத்தின் விபரம் வருமாறு:

திரு. சிவசுந்தரம் அவர்கட்கு,

'28-6-64 திகதியிடப்பட்டு ஜூன் 29 எனக்கொழும்புத் தபால் திகதி முத்திரை பொறிக்கப்பட்ட உங்கள் கடிதம் இன்றுதான் என்னிடம் வந்துசேர்ந்தது. ஆனல், உங்கள் கடிதத்தை நான் பெறுமுன்னரே, அது பத்திரிகைகளில் பிரசுரமாகிவிட்டது.

திருகோணமலைத் தீர்மானம் உங்கள் ஆதரவுடன் ஞாயிறு 21ம் திகதியன்று நிறைவேற்றப்பட்டது.

உங்களுடைய ராஜிஞமாவைப் பொறுத்த வரையில், என்ன அடிப்படையில் கட்சி உங்களைக் கிளிநொச்சித் தொகுதிக்கு அங்கத்தவராக நியமனம் செய்தது என்பதை நீங்கள் நினைவு கூரலாம். 'காலத்துக்குக் காலம் கட்சியின் செயற்குழு நிறைவேற்றும் தீர்மானங்களுக்கும், சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பதுடன், அவற்றிலிருந்து மாறுபடும் பட்சத்தில் எனது பாராளுமன்றப் பதவியையும், கட்சி அங்கத்துவத்தையும் துறப்பதுடன், எனது தொகுதியில் மீண்டும் போட்டியிடுவேன்' என்ற உங்கள் கூற்றின் மீதே கட்சி உங்களை நியமனம் செய்தது.

பாராளுமன்றத்திலிருந்து ராஜிஞமாச் செய்து விட்டு, திரும்பவும் உங்கள் தொகுதியில் போட்டியிடுமாறு உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களது கட்சியின் அங்கத்துவம் என்ருல், பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதனல் வரும் நன்மைகளைப் பெறுவது மாத்திரமல்ல, பாராளுமன்ற ஆசனங்களைத் துறப்பது போன்ற இடர்ப்பாடுகளையும் ஏற்றுக் கொள்வதாகும் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்க வேண்டும்.

கட்சி நிதிக்கணக்குகள் பற்றிய உங்கள் முறையீடுகள் எனக்கு விளங்கவில்லை. கணக்குப் புத்தகங்களும் மற்றும் தேவையான பத்திரங்களும் உங்கள் பார்வைக்கு உண்டு என்று நான் உங்களிடம் பல தடவைகூறியுள்ளேன். அத்துடன், ஒருநாள் நீங்களே இங்கு நேரில் வந்து, கணக்குகளைப் பரிசிலனை செய்வதில் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் செலவழித்தீர்கள். கிடைக்கப் பெறும் பணம் அத்தனைக்கும் பற்றுச் சீட்டுஉண்டென்றும், செலவு செய்யப்படும் தொகைகளுக்கு—சில்லறைச் செலவுகளைத் தவிர்த்து—செக்குகள் உண்டென்றும் உங்களுக்குச் கூறப்பட்டது அது தவிர, இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் சேமிப்புப் பகுதியில் போடப்பட்ட அத்தனை பணமும் உங்கள் பெயரிலும் தான் உண்டு. உங்களுடைய அதிருப்தியை எங்கள் குழுக் கூட்டங்களில் நீங்கள் குறிப்பிடாததையிட்டு நான் வருந்துகிறேன்.

உங்கள் கடிதம் பொதுமக்கள் பார்வைக்கு ஏற்கனவே விடப்பட்டமையினல், இக் கடிதத்தைப் பத்திரிகைகளுக்கு அனுப்புகிறேன்.

(ஒப்பம்)
சா. ஜே. வே.
செல்வநாயகம்.

30-6-64

மக்கள் குரல்

## நல்ல தலைவனை நாம் பெறுவோம்

திரு. சிவசுந்தரம் தமிழ் பேசும் மக்களுக்கு நெருக்கடி நிறைந்த இந் நேரத்தில் தமிழரசுக் கட்சியால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் மொழிப் பிரச்சினைக்கும் தீர்வு காணவே முடியாது எனவும் கூறி ராஜிமைாச் செய்துள்ளார். 1960ம் ஆண்டில் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய தமிழரசுக் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட அவர் கட்சியை விட்டு விலகியுள்ள இந் நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியையும் ராஜிஞமாச் செய்வதுதான் முறையும் நியாயமுமாகும். தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை மக்கள் வெறுக்கின்ருர்களா என்பதையிட்டு அவரின் ராஜிஞமாவால் கிளிநொச்சித் தொகுதியில் ஏற்படும் உப தேர்தலில் மக்கள் தீர்ப்பளிக்கட்டும். அவரே போட்டியிட முன் வரலாம்.

மு. சுப்பிரமணியம்
செயலாளர்,
த. அ. க. கிளை,
கிளிநொச்சி.

—

திரு. சிவசுந்தரம்அவர்கள் கடந்த சிலகாலமாக நடந்து கொண்ட முறைகிளிநொச்சி மக்களுக்கு பெரிதும்வேதனையைக்கொடுப்பதாக இருந்து வந்துள்ளது. கட்சியின் இலட்சியங்களைச் சரிவரப் புரிந்துகொள்ள முடியாதமையினலோ, அல்லது இன விடுதலைப்போரில் இன்னல்களைத் தாங்கிக்கொள்ளும் தியாக மனப்பான்மையற்றமையினலோ, காரணமின்றி முன்னுக்குப் பின் முரணை முறையில் கருத்துக்களைத் தெரிவித்து வந்துள்ளார். வவுனியாவில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் 'பிரிவினையையும் பலாத்காரத்தையும்' வற்புறுத்திய சிவசுந்தரம் அவர்கள், சில காலத்தின் பின்னர் வேறு ஒரு கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் ஐக்கிய இலங்கையை ஆதரித்து 'போராட்டம் எதுவும் பயன் தராது' என்ற கருத்துப்பட உரைநிகழ்த்தியுள்ளாராம்.

இந்த முரண்பட்ட கருத்துக் குழப்பத்திற்கு மேற் கண்ட இரண்டு காரணங்களே இருக்க முடியும்.

தமிழரசுக் கட்சி மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்கப்போகிறது என்பதை உணர்ந்தே திரு.சிவசுந்தரம் இராஜிஞமாச் செய்துள்ளார் என்று கிளிநொச்சி மக்கள் கருதுகிருர்கள்.

திரு. சிவசுந்தரத்தின் இராஜிஞமா, கிளிநொச்சி மக்களுக்குப் போராட்ட மனப்பான்மையும், இலட்சியப் பற்றும், இன விடுதலையை நோக்கமாகக் கொண்ட ஒரு நல்ல தலைவனை, மக்கள் தொண்டனைத் தெரிவு செய்ய வழி வகுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வி. நாதன்
பரந்தன்.

## சீன-ருஷ்ய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாஸ்கோவில் செய்தி அடிபடுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கதைக்கப்படுகிறது.

சீன உடனடியாக தூதர் உறவைத் துண்டித்துக் கொள்ள தனது மூட்டை முடிச்சுக்களை வெளியேற்றுவதில் இப்போதே ஈடுபட்டிருக்கக்கூடும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## ஆளும் கட்சிக்குள் பிளவு!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாங்குவதில்லையென்று பிரதமர் திரு. சில்வாவுக்கு வாக்குறுதி அளித்திருந்தாராம் திரு. விக்கிரமசூரியாவை நீக்கியது வாக்குறுதியை மீறியதாகுமென இக் கோஷ்டியினர் கருதுகின்றனராம்.

உள்நாட்டு உள்ளூராட்சி மன்ற உதவி மந்திரியாக திருமதி வீவியன் குணவர்த்தன நியமிக்கப்பட்டதும் சி. பி. டி. கோஷ்டியினருக்கு அதிருப்தியைக் கொடுத்துள்ளதாம். இப்பதவியை விவியன் குணவர்த்தனவுக்கு கொடுத்ததன்மூலம், அவருக்குப் பாராளுமன்றத்தில் முதல் வரிசையில் இடம் கிடைத்துள்ளது. மேலும் உள்நாட்டு உள்ளூராட்சி மந்திரி திரு. ஏ. பி ஜெயசூரியா அரசியலிலிருந்து ஓய்வு பெறக்கூடும் என்றும் நம்பப்படும் வேளையிலே இப் பதவி திருமதி விவியனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. திரு. ஜெயசூரியா ஓய்வு பெறும் பொழுது அப்பதவி திருமதி குணவர்த்தனவுக்குக் கிடைக்கக்கூடும் என்றும் பிரஸ்தாப கோஷ்டியினர் நம்புகிருர்களாம் இதனல் மந்திரிசபையில் சமசமாஜிஸ்டுகளின் கை ஓங்க இடமிருக்கிறது என்றும் இக்கோஷ்டியினர் அஞ்சுகிருர்களாம்.

பிரதமர் சிருஷ்டித்து தனதாக்கிக்கொண்டுள்ள தகவல் மந்திரிப்பதவி காலப்போக்கில் பிலிப் குணவர்த்தனவை மந்திரி சபைக்குள் இழுப்பதற்கு எடுக்கப்பட்ட மறைமுக நடவடிக்கையாக இருக்கலாமென இக் கோஷ்டியினர் கருதுகிருர்களாம்.

இவையனைத்தும் சி. பி. டி. சில்வா கோஷ்டியை சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றும் அளவிற்கு வலுப் பெறும் என்று அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

## ஐக்கிய .... ....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் சட்டத்தையும் வட கிழக்கு மாகாணத்தில் நிலைத்து நின்று ஆதிக்கம் செலுத்த வைப்பார்கள்.

அத்துடன் சிங்கள கலை கலாச் சாரத்தையும் தமிழ் பேசும் சிருர் மத்தியில் நிலைக்கச் செய்வார்கள். அடுத்து புத்த மதத்தையும் வட கிழக்கு மாகாணத்தில் பரப்பும் புனிதகைங்கரியத்தில் ஈடுபடுவார்கள். முடிவில் சமாதான தூதுவர்கள் என்ற போர்வையில் சென்ற சிங்கள ஆசிரியர்கள், ஒரு நாட்டை ஆக்கிரமித்து கைப்பற்றிய வெற்றி வீரர்களாகத்திரும்புவார்கள். இதை கல்வி அமைச்சும் அரசாங்கமும் நன்ருக அறிவார்கள்.

இவர்களுக்கு தமிழ் பேசும் மக்கள் கொடுக்கவிருக்கும் 'வரவேற்புத்' தான் தமிழ் பேசும் இனத்தின் எதிர் காலத்தை நிர்ணயிக்கும்.

## தூதராலயத்தில்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் இயங்கிக் கொண்டிருப்பதால், யாழ்ப்பாணத்தில் அத்தகைய ஒரு சங்கம் நிறுவுதல் முக்கியமான விஷயமல்ல. அதற்கு தூதராலய உயர்தர அதிகாரி ஒருவரை அனுப்பாமல், தூதரே நேரடியாகச் சென்று கலந்து கொண்டது இல்லாத ஒரு முக்கியத்துவத்தை அதற்கு ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

வட, கிழக்கு மாகாணங்களில் பெரும் பான்மை மக்கள் தென்னிந்திய தமிழர் இனத்தைச் சார்ந்தவர்களாவர். இலங்கையிலும் பார்க்க தென்னிந்தியாவின் மீது தான் அவர்களுக்கு விசுவாசம் அதிகம். இந்த விஷயத்தைக் கருத்திற் கொண்டே இந்தியத் தூதர் இங்கு செயல் பட வேண்டும். அவர் இலங்கைத் தமிழ் மக்களுடன் (இந்தியர்களுடன் அல்ல) அளவுமீறி ஒட்டிக் கொண்டு செயலாற்றினுல், அது அவர்களின் தேசத்துரோக இயக்கங்களுக்கு ஆக்கம் அளிப்பதைப் போலாகும்.

அத்துடன் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதுமாகும். இலங்கைத் தேசிய இனத்தின் ஒரு பகுதியினரான இலங்கைத் தமிழர்களுடன் விசேடத் தொடர்பு கொண்டு செயலாற்றுவதற்கு இந்தியத் தூதருக்கு உரிமை கிடையாது. ஆகவே யாழ்ப்பாணச் சம்பவத்தில் இந்தியத் தூதருக்குத் தொடர்பு இருக்குமாயின், இலங்கை [illegible] குத் தெரிவிக்க வேண்டும்.''


## விவேக மீட்டல் பாடங்கள்

மிகச் சிறந்ததும், தற்காலிகமானதும், புரிந்து கொள்ளக் கூடியதுமாகிய குறிப்புக்கள் முதலியன ஒன்று சேர்ந்து கட்டப்பட்ட தொகுதிகள் கீழ்க்காணும் பரீட்சைகளுக்கு கிடைக்கும்.

ஜி. சி. ஈ. உயர்தரமும் பல்கலைக்கழக புகுமுகத் தேர்வும்.

ஆங்கில மொழி மூலம்
இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல், தூய கணிதம், பிரயோக கணிதம்,
பிரதி ஒன்றுக்கு ரூபா 12-00

தமிழ் மொழி மூலம்
தமிழ், இலங்கை வரலாறு, ஐரோப்பிய வரலாறு, இந்திய வரலாறு, அரசியல், புவியியல், சமஸ்கிருதம்.
பிரதி ஒன்றுக்கு ரூபா 12-00

தமிழ்ப் பாடப் புத்தகங்கள்
பாஞ்சாலி சபதம், நளவெண்பா, திருக்குறள்.
பிரதி ஒன்றுக்கு ரூபா 5-00

ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சை.

ஆங்கில மொழி மூலம்
ஆங்கிலப் பாஷை தூயகணிதம், பிரயோக கணிதம், உயர்தர கணிதம், உயிரினவியல், இரசாயனவியல், பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல்
பிரதி ஒன்றுக்கு ரூபா 6-00

தமிழ் மொழி மூலம்
தமிழ்ப் பாஷை, எண்கணிதம், சரித்திரம், குடியியல், [illegible] சுகாதாரம், மனையியல், தூயகணிதம், புவியியல், விவசாயம், இந்துசமயம், உயிரினவியல், இரசாயனவியல், கணக்கியல்.
பிரதி ஒன்றுக்கு ரூபா 6-00

பாடப் புத்தகங்கள்
பாரதி பாடல், அலையும் கலையும், கம்பராமாயணம்.
பிரதி ஒன்றுக்கு ரூபா 2-50

தபால் செலவு பிரதி ஒன்றுக்கு 50 சதம்
வி. பி. பி. அனுப்பப்படமாட்டா.

யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,
நெல்லியடி, கரவெட்டி.

கிளைகள்:
107, பருத்தித்துறை ரோ[illegible]லூர், யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பல் ஒழுங்[illegible]ளவத்தை, கொழும்பு-6.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# நினைத்ததும் நடந்ததும்

பாண்டியூர் இராகி

நேரம் மாலை ஐந்து மணி. பாண்டியூர்த் துரோபதையம்மன் கோயில் வீதி. கோயிலைச் சூழ்ந்திருக்கும் ஆல மரங்களும், அரச மரங்களும், நாவல் மரங்களும் கோயில் வீதியைச் சற்று இருட்டாக்கிக் காட்டின. இருப்பினும், மறையும் கதிரோனின் மஞ்சள் கலந்த செந்நிறக் கதிர்கள் மரங்களின் கிளை, இலைகள் இடைவெளியூடு சிறிது வெளிச்ச நிலையை ஏற்படுத்தியது.

அங்கு, கட்டுடல்கொண்ட இளம் காளையர்கள் மூவர் உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தனர். வருடமொன்றிற்கு ஒருதரம் கதவு திறந்து பதினெட்டு நாள் திருவிழா நடத்தி பூட்டிவிட்டால், பின் அந்தப் புனித இடம் வம்பளக்கும் இளைஞர்களும், வரட்டு வேதாந்தம் பேசும் கிறுக்கர்களும், சிறுவர்களும் அரட்டையடிக்கும் இடமாகவே அனேகமாகப் பயன்படுகிறது. கோயிலின் காவலர்களாகப் பெருமையடித்துத் திரியும் கண்ணியவான்கள், உண்டியலில் விழுந்திருக்கும் காசை எண்ணிக் கணக்குப் பார்த்ததும் காண்பதற்கு முயற்கொம்புகளாகி விடுவர். நமக்கேன் வீண் பேச்சு? கதைக்கு வருவோம்.

இளம் வாலிபர்களான மூவரும் ஏதோ தங்களுக்குள் குசு, குசுவென்று பேசிக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் பேசுவதைப் பார்த்தால்...ஏதோ திட்டம் தீட்டுகிருர்கள் என்பதை உணர முடியும். அப்போது, அமைதியே உருவான ஒரு இளைஞன் அவர்களை நோக்கி வந்து கொண்டிருக்கிருன். அவ்வாலிபன் வருவதைக் கண்டு கொண்ட ஒருவன் மற்றவர்களைத் தட்டி உசார் படுத்துகிருன். இதிலிருந்து அவர்கள் அவ்வாலிபனைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்திருக்கிருர்கள் என்று அறியக் கூடியதாக இருக்கிறது. ஆனல் அவனே இவற்றையெல்லாம் அறியாதவனுகவே வந்து கொண்டிருந்தான். அவர்கள் அருகே வந்து விட்டான். பேச்சை வேறு புறம் திருப்புகின்றனர்.

'ஹரிசனில் நீங்க நேற்றுப் பார்த்த படம் என்ன மச்சான் பாரதி?'

சுருட்டைத் தலை முடியான இளைஞனிடம் குள்ளமாயிருந்த இராசு கேட்டான்.

'பெஸ்ட் கிளாஸ் பிக்சர். வயது வந்தவர்களுக்கு மட்டும். நேம் கூட...ஆ! 'நேக்கட் மிறர்'. பாரதியிடம் கேட்ட கேள்விக்குத் தடியனுல சுந்தரம் கூறிய பதில்.

'இப்படிப்பட்ட ஒரு படம் நான இதுவரையில பார்க்கல்லடா. உண்மையிலே இது தாண்டா வயது வந்தவர்கள் பார்க்க வேண்டிய படம்.' இவ்வாறு வாலிப உணர்ச்சியைத் தூண்டும் வண்ணம் படத்தை மிகைப் படுத்திக் கூறினுன் பாரதி.

'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று விளம்பரப் படுத்திவிட்டால் பட மாளிகைகள் நிறைந்துவிடும் காலமிது. கதையமைப்பை, நடிப்பைப் பற்றி அக்கறையில்லாது, அறிவுக்கு முதலிடம் கொடாது உணர்ச்சிக்குத் தான் முதலிடம் கொடுக்கும் படித்தவர்கள் நிறைந்த நம் நாட்டில் கிருஷ்ணன் மட்டும் விதிவிலக்கல்லவே. அதுதான் அமைதியே உருவாக வந்த வாலிபன் பெயர். 'என்னைக் கூப்பிடாமத் தானேடா நீங்க மட்டும் பார்த்திருக்கீங்க' என மனத் தாங்கலோடு கேட்டான் கிருஷ்ணன்.

'போரா, நீதான் நேற்று வீட்டை விட்டுக் கிள[illegible]லியே. என்னிடம் [illegible] இருந்தால் இன்[illegible] [illegible]யப் பார்த்தி[illegible]

மேலும் ஆவலூட்டினன் பாரதி.

'நேரம் என்ன?' ஆவலால் உந்தப்பட்ட கிருஷ்ணனின் கேள்வி.

'பை தேர்ட்டி, எனக்கும் ஒரு ரிக்கட்டுக்கு வழிபண்ணுடா' நேரத்தைப்பார்த்தபடி நசுக்கினுன் இராசு.

'இல்லடா......அப்ப நான் வருகிறேன்'. ஓட்டமும்நடையுமாக வீட்டை நோக்கினுன் கிருஷ்ணன்.

'அப்பாடா; ஆளை ஒரு மாதிரியாக அப்புறப் படுத்திட்டோம். உன்னுடைய பிளான் என்ன சுந்தர்?' விட்ட கதையைத் தொடர்ந்தான் இராசு.

'லேபர் ஆபிஸ் ஹெட் கிளார்க் மூர்த்தியின் மகள் விஜயா மேல் கிருஷ்ணனுக்கு ஒரு கண். இவன் ஆபிஸுக்குப் போகும் நேரம் அவள் பாடசாலைக்கு வரும் நேரமாயிருக்குமாம். இவனுக்குத்தான் அவள் மீது சபலமேயொழிய அவள் இவனை நிமிர்ந்து கூடப் பார்ப்பதில்லையாம். இதுதான் விஷயம். இதை வைத்துக் கொண்டுதான் இவனை ஒரு கிறுக்குக் கிறுக்க வேண்டும்.' தன்னுடைய திட்டத்தை விளக்கவாரம்பித்தான் சுந்தர்.

'இதற்கு என்ன செய்யலாம்'. தலையைச சொறிந்தான் பாரதி.

'இப்படிச் செய்வோமா?— அவள் என் தங்கையின் கிளாஸ்மேட். என் தங்கை மூலம் அவுள் குறிப்புக் கொப்பியைக் கைப்பற்றி அவள் எழுதுவது போல் அதே எழுத்தில் கிருஷ்ணனுக்கு ஒரு காதல் கடிதம் எழுதிவிட்டால்...' மீண்டும் கள்ளக் கையெழுத்திடுவதில் தனக்குள்ள திறமையைச் சொல்லாமல் சொன்னுன் சுந்தர். சம்மதத்திற்கு அறிகுறியாக மற்ற இருவரும் தலையை ஆட்டினுர்கள். இங்கு கூட்டம் கலைந்தது. அங்கு கிருஷ்ணன் முன் படம் ஓடியது.

கடிதம் ஒன்று மேசையின் மேல் விரித்துக் கிடக்கிறது. கதிரையில் இருந்து மேலே அண்ணுந்துவாறு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான் கிருஷ்ணன். விஜயா மேல் என்னவோ அவனுக்கு ஒரு சபலம்தான். ஆனுலும், இப்படித் திடீரென்று காதல் கடிதம் எழுதுவாள் என்று அவன் எதிர்பார்க்க வில்லை. அவனுக்கு ஒரு பெண் காதல் கடிதம் எழுதியிருப்பது இது[illegible] முதல் தடவை. அது

வும் 'நாளை பெற்ருர் தின விழாவில் அவள் நடனம் ஆடுவதாயும் அங்கு அவளை வந்து சந்திக்குமாறும்' எழுதியிருந்தாள். அவன் நெஞ்சம் இன்பத்தால் கிளுகிளுத்துப் பெருமையால் விமமியது. இடையிடையே அவள்தான் இதை எழுதினுளா என்ற சந்தேகமும் எழுந்தது. இருப்பினும், போய்ப்பார்த்து விடுவதென்றே அவன மனம் இறுதியாகத் தீர்மானித்தது.

மாலை ஆறு மணியாகிவிட்டது. பாண்டியூர் அரசினர் மகா வித்தியாலயத்திலிருந்து பெற்ருர் தின விழாவின் பொருட்டு ஒலிபெருக்கி இனிய சினிமாப் பாடல்களை ஒலிபெருக்கிக் கொண்டிருந்தது. கிருஷ்ணன் அரை மணித்தியாலமாகக் கண்ணுடியின் முன் நின்று தன் அழகெல்லாம் ஒன்று சேர உருவக்ப்படுத்திக் கொண்டிருந்தான். நேரம் ஓடியதே



தெரியவில்லை. சரியாக ஏழு மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. கிருஷ்ணனும் தயாராகிப் பாடசாலைக்கும் வந்துவிட்டான். பாடசாலை மண்டபத்தினுள் ஆண்களுக்காக விடப்பட்ட பகுதியில் ஒரு மூலையில் போய் இருந்து கொண்டான். நண்பர்கள் பின்னுலிருந்து பேசிச் சிரிப்பதை அவன் கவனிக்கவில்லை. விஜயாவும் அவன் கண்களில் படவில்லை. தலைமையுரை, பேச்சுக்கள் ஆரம்பமாயின. ஆனுலும், அவையொன்றும் அவன் சிந்தையைக் கவரவில்லை.

மூன்றாவது நிகழ்ச்சியாக, [illegible] விஜயாவும் அவர்கள் தற்போது ஒரு நடனம் ஆடுவார்கள்' என ஒலிபரப்பப்பட்டது. கிருஷ்ணன் நிமிர்ந்திருந்து தன்னைக் கவர்ச்சிப் படுத்திக் கொண்டான். திரை விலகியது. விஜயா ரதியாகத் தோன்றினுள். அவள் மின்னிடை வளைந்து துவண்டது. மான் விழிகள் மருண்டு சுழன்றன. ஆட்டத்தின் நெளிவுகள் அங்கங்களின் அழகிய அமைப்புகளுக்கு மெருகூட்டின. 'கண்ணன் என் ஆசைக் கண்ணன்' என்னும் பாடலுக்கு ராதையாக அபிநயம் பிடித்துக் கொண்டிருந்தாள் விஜயா. தன்னை நினைந்து தான் பாவனை செய்வதாகக் கிருஷ்ணனுக்குப் பட்டது.

'ஓடி வாராயோ என் நெஞ்சில் நிறைந்த கண்ணு' என்றதும்; பாடசாலையை, கூடியிருந்த மக்களை, ஏன் தன்னையே மறந்து கிருஷ்ணன் எழுந்துவிட்டான். அவனுக்குச் சாதகமாக நடனமும் முடிந்துவிட்டது. இருப்பினும் பின்னுல் பலர் பரிகாசம் செய்து சிரிப்பது கேட்டது, அவமானத்தால் குன்றிவிட்டான். தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு வெளியே வந்துவிட்டான்.

'நாலு பேர் மத்தியில் இப்படித் தலை குனியும் வண்ணம் நடந்து கொண்டேன்' என்று தன்னைத் தானே நொந்து கொண்டான். அப்போது, மேக்கப்பைக் கலைப்பதற்காக விஜயாவும், ஒரு ஆசிரியையும் பக்கத்திலுள்ள மேக்கப் செய்யும் அறையை நோக்கி வந்து கொண்டிருப்பது கிருஷ்ணன் கண்களுக்குப் பளிச் சென்று தெரிந்தது. வந்து கொண்டிருந்தவர்களை யாரோ மீண்டும் கூப்பிட விஜயாவை நிறுத்திவிட்டு ஆசிரியை மட்டும் சென்று விட்டார்கள். விஜயா தனிமையிலே நின்று கொண்டிருந்தாள். என்றுமில்லாத ஒரு அபாரத் துணிவு கிருஷ்ணனை விஜயா

நிற்குமிடம் நோக்கித் தள்ளியது. அவளை நெருங்கி விட்டான். விஜயா கிருஷ்ணனைப் பார்த்து முறுவலித்தாள். கிருஷ்ணனுக்கோ கால்களில் ஆட்டம் காணவாரம்பித்தது. அவளோ அவனையே விழுங்கி விடுவது போலப் பார்த்துக்கொண்டிருந்தாள். இந்நிலையைப் போக்க:- "நீங்கள்..." என்றவன் மேற்கொண்டு பேச முடியாமல் தத்தளித்தான்.

'கடிதம் கிடைத்ததா?' அவள் பேசினுள்.

'ஆம்' மந்திரத்தால் கட்டுண்டவள் போல் கூறினுள்.

(15-ம் பக்கம் பார்க்க)

## இலக்கிய...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கதையை நானே திருப்பித் திருப்பிப் படித்த தடவைகள்? எனக்கே தெரியாது. கலாசாலை நண்பர்களில் என்னைப்பாராட்டாதவர்கள் யாருமிலர். இத்தனைக்கும் இன்று எண்ணிப் பார்த்தால் அது ஒரு சாதாரண கதைதான்.

### 'ஈழச் சுடரு'ம் நானும்

நான் எழுத்துலகில் காலடி எடுத்து வைத்து விட்டாலும் நான் எழுத்தாளனுக வளர்வதற்குக் காரணமாயிருந்த 'ஈழச்சுடர்' என்ற கையெழுத்துப் பத்திரிகையை என்னுல் என்றும் மறக்க முடியாது. அதைப் பற்றியும் இங்கு சில வார்த்தைகள் குறிப்பிடவே வேண்டும்.

எனது முதற் சிறுகதைக்குப் பின்னர் தொடர்ந்து பல கதைகள் 'தினகரனி'ல் இடம் பெற்றன. அப்போது நான் முன்னர் குறிப்பிட்ட நண்பரின் ஆலோசனையுடன் எம்போன்ற பலர் சேர்ந்து ஆரம்பித்தோம் 'ஈழச்சுடர்' கையெழுத்துப் பத்திரிகையை. சிறுகதைப் பகுதிப் பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டது. அந்த ஸ்தாபனத்திலிருந்து எஸ். பொன்னுத்துரை, நவம், நீலாவணன், உதயணன், ஈழக்குமார் போன்ற பல இன்றைய எழுத்தாளர்களின் சிறுகதைகளைப் படித்துப் பரிசீலனை செய்யும் வாய்ப்பு அன்று எனக்குக் கிடைத்ததையிட்டு இன்றும் நான் பெருமைப்படுகின்றேன். 'ஈழச் சுடர்' வளர்வதற்கு நானும் ஒருவன் எவ்வளவுக்கு உறுதுணையாக இருந்தேனே, அதே அளவுக்கு 'ஈழச் சுடரு'ம் என் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தது என்பதைக் கட்டாயம் நான் குறிப்பிட்டேயாக வேண்டும். எனது ஊக்கமும் ஆற்றலும் 'ஈழச் சுடரு'க்கே பயன்பட்ட காரணத்தால் பத்திரிகை உலகை சுமார் நான்கு வருடம் அளவில் நான் மறந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஓர் அச்சுப் பத்திரிகையை விடக் கூடிய தரத்துக்கு 'ஈழச் சுடர்' வளர்ந்து விட்டதை, பல தமிழ் நாட்டு அறிஞர்கள் கூட ஒப்புக் கொண்டனர்.

### பிடித்த கதை

1957ல் இலக்கிய வட்டத்தில் ஒரு வேகம் பிறக்க ஆரம்பித்தபோது என் பார்வை மீண்டும் பத்திரிகைகளின் பக்கம் திரும்பியது. எனவே நான்கு வருட இடைவெளியின் பின்னர் அவ்வாண்டு டிசம்பர்மாதம் 'தினகரனி'ல் வெளி வந்தது 'கண்மணி சாரதா'என்ற கதை. எனக்கு மிகவும் பிடித்தமான கதை. ஒரு குழந்தையை மையமாக வைத்து எழுதப்பட்ட அந்தக் கதை பல பாராட்டுக்களைப் பெற்றுத் தந்ததுடன், என் மனதுக்கு மிகுந்த அமைதியையும் கொடுத்து, என் எழுத்துலகில் ஒரு புதிய வேகத்தையும் எனக்குக் கொடுத்தது.

### நோக்கம்

இன்றுகூட, குழந்தைகளை மையமாக வைத்துக் கதைகள் எழுதுவதையே நான் அதிகமாக விரும்புகிறேன். குழந்தைகளை வைத்து நான் எழுதிய கதைகள் எனக்கு அதிகமான பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்றுத் தந்தன என்பதற்காக அல்ல; குழந்தைகளோடு ஊடாடுவதில் எனக்குள்ள பிரியத்தினுலும், அவர்களின் வெள்ளை உள்ளங்களில் மறைந்து கிடந்து வெளிப்படும் தனித்துவம் வாய்ந்த செயல்களைப் பார்த்துப் பெரியவர்கள் திருந்த வேண்டும் என்ற ஆசையினுலுமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியில் தலை விரித்தாடும் எழுத்துக் குழப்பம்

## வடமொழியைக் கடனெடுத்தும் வறுமை தீரவில்லை

## ஆங்கிலத்திற்கு மதிப்பளிப்போர் அதனினும் பழைய இலக்கணம் தமிழுக்கு இருப்பதை மறந்துவிடுகிறார்கள்

பிறமொழிச் சொற்களைத் தமிழில் எழுதுவதைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவிவருகின்றன. எந்த இருவரும் ஒன்றுபோலவே எழுதுவதல்லை என்பதைக் கண்கூடாகக் கண்டுவருகிறோம். இந்தக் குழப்பம் மொழியின் எதிர்காலத்தை மிகவும் பலவீனப்படுத்துவதாக உள்ளது. இக் குழப்பத்திற்கு முக்கிய காரணம் வடமொழிக் கிரந்த எழுத்துக்களேயாகும். இத்தகைய குழப்ப நிலை வேறு மொழிகளில் இருப்பதாகவும் தெரியவில்லை. குறிப்பாக ஆங்கில மொழி வேற்றுமொழிக் கருத்துக்களைத் தனதாக்கும் பொழுதும் ஆங்கில எழுத்து மரபைக் காத்து நிற்கிறது. தமிழ் மொழியில் ஏற்பட்டிருக்கும் இந்த எழுத்துக் குழப்பத்தைத் தீர்க்க இக் கட்டுரையாசிரியர் சில வழிவகைகளைக் காட்டியுள்ளார். இக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்களை ஆதரித்தோ அல்லது மறுத்தோ வாசகர்கள் தங்கள் கருத்துக்களை சுருக்கமாக எழுதி அனுப்பலாம். தக்கவை பிரசுரமாகும்.

பிறமொழிச் சொற்களைத் தனித் தமிழில் மொழி பெயர்த்து எழுதிவிடுவது சாலவும் சிறந்ததொரு செயலாகும். 'Light' என்பதை ஒளி என்றும், (Sound) என்பதை ஒலி என்றும் தமிழில் எழுதும்போது ஆங்கிலச் சொற்களால் கூட வெளிக்கொணர முடியாத சொற் பொருள் ஒற்றுமையினைக் கண்டுமகிழ்கின்றோம். ஒளிக்கும், ஒலிக்கும் அறிவியல் கண்டு கூறும் ஒற்றுமை சொல்லிலேயே ஒளிரவும், ஒலிக்கவும் செய்கிறது!

### இன்றைய நிலை

இன்று தமிழ் மொழி கல்விக் கூடங்களில் பயிற்று மொழியாக உயர்ந்திருக்கின்றது. எனவே, இன்றைய சூழ்நிலையில் ஆங்கில அறிவியல் சொற்கள் பலவற்றை அப்படியே (மொழி பெயர்க்காமல்) எடுத்தாள வேண்டிய நெருக்கடியான நிலையில் நாம் இருக்கின்றோம். ஆனால் மொழி பெயர்ப்பதனை விட ஆங்கிலச் சொற்களை இவ்வாறு 'தத்து' எடுத்துக் கொள்ளுதல் எளிது என்று யாரேனும் எண்ணிவிடுவார்களானல் அவர்களை உண்மை நிலையினை உணராதவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இங்கு நம் பொறுப்பு மிகவும் பெரிதாக உள்ளது. பொதுவாக, மொழி பெயர்ப்பிலே ஈடுபடும்போது கருத்துக் குழப்பம் ஒன்றுதான் ஏற்படும். எடுத்துக்காட்டாக 'Photograph' என்பதைப் 'புகைப்படம்' என்று மொழி பெயர்த்து ஒளியைக் குறிக்கும் 'Photo' என்ற சொல்லை அதற்கு எவ்வகையிலும் தொடர்பில்லாத புகையிலே இருளும்படி செய்துவிடுகிறோம்! ஆனால், பிறமொழிச் சொல்லைத் 'தத்து' எடுத்து ஆள்வதிலே, மொழியின் அடிப்படையினையே சிதைக்கும் எழுத்துக் குழப்பம் தலையெடுப்பதையும் காண்கிறோம்.

### செங்கல்லும் கட்டடமும்

கட்டடத்தின் உயரம் எவ்வளவு இருக்க வேண்டும்; கட்டடத்தில் எத்தனை அடுக்குகள் இடம் பெற வேண்டும்; கட்டடத்தின் தோற்றம் எந்தவகையில் அமைய வேண்டும் என்றெல்லாம் எண்ணிப் பார்ப்பதிலே நாம் ஆர்வம் காட்டுகின்றோம். ஆனால் கட்டடத்தின் எழுச்சி செங்கல்லை அடுக்கும் வகையில்தானே அமையப் போகின்றது? செங்கல்லை எப்படி அடுக்குவது என்பதிலேயே நமக்குக் குழப்பம் தெளியவில்லை என்றால் நாம் காண இருக்கும் கட்டடம் நம் கனவளவிலேயே நின்றுவிட வேண்டியதுதானே? கட்டடத்திற்குச் செங்கற்கள் எப்படியோ, அப்படியே மொழிக்கு எழுத்துக்களும்!

எழுத்திலே குழப்பம் நிலவுகின்ற வரையில்

**கொ. கூ. மகாதேவன்**
**எம். ஏ., பி. எஸ்ஸி.**

மொழிக் கட்டடம் ஒருநாளும் முற்றுப் பெறாது!

ஒரு மொழி நன்னிலை எய்திவிட்டதென்றால், முதல் படியாக அதில் எழுத்துக் குழப்பம் இருத்தல் கூடாது. எடுத்துக்காட்டாக 'Teacher' என்ற ஆங்கிலச் சொல்லை எடுத்துக் கொண்டால், உலகத்தில், வெளிவருகின்ற அத்துணை ஆங்கில ஏடுகளும் (Teacher) என்று ஏழு எழுத்துக்களால், ஒன்று போலவே எழுதும். ஆனால் ஆங்கிலத்தினும் பழமையும், பெருமையும் பெற்றது என்று நாம் பாராட்டும் தமிழ் மொழியிலோ தமிழ்ச் சொற்களை எழுதுவதிலேயே எழுத்துக் குழப்பம் தீர்ந்தபாடில்லை என்றால் (காட்சி-காக்ஷி; வேட்டி-வேஷ்டி) எடுத்துச் சேர்த்துக் கொள்ளப்பட்ட வேற்று மொழிச் சொற்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஒரே நாளில் வெளி வந்த வேறுபட்ட நான்கு தமிழ்த் தாள்களை ஒன்றாக வைத்துப் பார்த்தால் எழுத்துக் குழப்பத்திற்கு எண்ணற்ற எடுத்துக் காட்டுக்கள் காணலாம். ஒரிசா-ஒரிஸா-ஒரிஸ்ஸா; காங்கிரசுக்கு-காங்கிரஸுக்கு-காங்கிரஸ்ஸுக்கு; ஹரிஜனம்-அரிஜனம்-அரிசனம்; குருசேவ்-குருச்சேவ்-குருச்சாவ்-குருஷ்சாவ்; சமஷ்டி-சமட்டி-கூட்டரசு என்று எழுத்துக்கள் எப்படியெல்லாம் மாறமுடியுமோ, அத்தனை வகையிலும் மாறிக் குழம்புவதைக் காணலாம்!

இத்தகைய எழுத்துக்குழப்பத்தைக் காண நான்கு வகை இதழ்களைக் கூடத் தேட வேண்டுவதில்லை; ஒரே அறிக்கையிலேயே ஒரே சொல் வரிக்கு ஒரு வடிவத்தைப் பெற்று வடவெழுத்திற்கும் தமிழ் எழுத்திற்கும் பாலம் அமைப்பதைப் பாருங்கள்! 'ஆயுள் இன்சூரன்சு—நீங்கள் இன்ஷ்யூர் செய்யும் நன்னாளே நீங்கள் பாதுகாப்புப் பெறும் பொன்னாளாகும்.' இதனைக் காணும்போது 'Insure' என்ற வார்த்தையை யாரேனும் இன்சூர் செய்து வைத்தால் கூட நல்லது என்று நமக்குப்படுகிறது! தமிழ் மொழியின் தெளிவிலே, உறுதியிலே நம்பிக்கை வைத்து நாம் எவ்வளவோ திட்டங்களைத் தீட்டியிருக்கின்றோம்.

எனவே இத்தகைய எழுத்துக் குழப்பம் பண்பட்ட ஒரு பழைய மொழியில் ஏன் ஏற்படுகிறது என்பதனை அறிவதிலாவது நாம் ஆர்வம் காட்ட வேண்டாமா?

### வேண்டுமென்று செய்யும் குழப்பம்

ஆங்கிலச் சொற்களில் பலவற்றைத் தமிழ் எழுத்துக்களாலேயே குழப்பமின்றி எளிதாக எழுதி விடலாம். எடுத்துக்காட்டாக 'Cell, enzyme, isotope, ozone, Silver' போன்ற சொற்களை, செல், என்சைம், ஐசோடோப்புகள், ஓசோன், சில்வர் என்று எழுதுவதே முறையாகும். ஆனால் வேண்டுமென்றே எழுத்துக் குழப்பம் செய்ய விரும்புகின்றவர்கள் இந்தச் சொற்களை ஸெல், என்ஸைம், ஐஸோடோப்ஸ், ஓஸோன், ஸில்வர் என்று எழுதித் தங்கள் மொழியியல் அறியாமையைக் காட்டுவதோடு எழுத்துக் குழப்பத்தையும் ஏற்படுத்தி வைக்கின்றனர்.

### கடன் வாங்குதல்

சில ஆங்கிலச் சொற்களை, தமிழில் ஓரளவு வழங்கி வரும் வட மொழிக்குரிய சிறப்பு எழுத்துக்களை வைத்துக் கொண்டு எழுதிவிடலாம். எடுத்துக்காட்டாக Gene, Hydrogen, Mutation, Nitrogen, Oxygen, போன்ற சொற்களை ஜீன், ஹைட்ரஜன், மியூட்டேஷன், நைட்ரஜன், ஆக்சிஜன் (ஆக்ஸிஜன் என்று எழுத வேண்டியதில்லை) என்று எழுதலாம். ஆனால் இதனை முறையாக மேற்கொள்ள முடியாது.

கடன் வாங்குவது என்பது எதிர்பாராமல் ஒரு நிலையில் நிகழ வேண்டுமேயன்றி எப்பொழுதும் கடன் வாங்குவதையே நம்பி, திட்டம்தீட்டிவிடல் நல்லதன்று. ஆங்கிலச் சொற்கள் அவ்வளவையும் வட மொழிக் கிரந்த எழுத்துக்களைக் கொண்டு எழுதிவிடலாம் என்பது பச்சையான பகற்கனவாகும். ஒலிவளம் குறைவு என்று இன்று பலராலும் (அடிப்படையின்றி) குற்றம் சாட்டப்படுகின்ற 'தமிழ்' என்ற மொழியின் பெயரையே வட மொழி எழுத்துக்களைக் கொண்டு எழுத முடியாது! மேலும் தமிழர் நாவிலே நாள்தோறும் ஒலித்துக் காற்றிலே கலக்கும் குழந்தை, ஆறுமுகம், பொன்னன், எம்பெருமான், ஒப்பிலியப்பன் போன்ற சொற்களை எழுத இனிமேல்தான் வட மொழியில் எழுத்துக்கள் பிறந்து வர வேண்டும்!

### 'கடன் வாங்கியும் பட்டினி'

எனவே தமிழில் வழங்கும் வட மொழிக் கிரந்த எழுத்துக்களைக் கொண்டும் எழுத முடியாத ஆங்கில அறிவியல் சொற்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக 'Bacteria, Delta, Fossil, Quantum, Zymosis' போன்ற சொற்களை ஒலி குன்றாமல் எப்படி எழுதுவது? கிரந்த எழுத்துக்களைக் கடன் வாங்கினாலும் காரியம் ஈடேறுவதில்லை! ஆம்! கடன் வாங்கியும் பட்டினி! கடன் வாங்குவதில் சுவை கண்டுவிட்ட நாம், இன்னும் சற்று மேலே சென்று ஆங்கில எழுத்துக்களையும் கடன் வாங்கலாமா? இது ஒரு வகையில் எளிமை கூட! ஏனென்றால் இன்று நாம் கடன் வாங்கியுள்ள கிரந்த எழுத்துக்களான ஹ, ஸ, ஷ, ஜ, க்ஷ ஆகிய ஐந்தும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடு சேர்ந்து வரும்போது (5X12=60) அறுபது எழுத்துக்களாகப் பெருகி விடுகின்றன. நம் தமிழ் எழுத்துக்களாகிய 247 எழுத்துருவங்களைச் சொல்லிக் கொடுப்பதோடு நம் குழந்தைகட்கு இந்தக் கிரந்த வடிவங்களான அறுபது எழுத்துக்களையும் சேர்த்துச் சொல்லிக் கொடுத்துவிடுகின்றோம்! அப்படியும் நமக்கு இருப்பது பற்றாக்குறையே! அறுபது கிரந்த எழுத்தைக் கடன் வாங்குவதை விட 26 ஆங்கில எழுத்துக்களையே வாங்கிக் கொண்டால் ஆங்கிலேயர்கள் வேண்டாமென்றா சொல்லப் போகிறார்கள்! நம் சிந்தனை குழம்புகிறது! அது போகட்டும். இந்த ஆங்கிலேயர்கள் உலகத்து மொழியிலிருந்தெல்லாம் சொற்களைக் கடனாகப் பெறுகிறார்களே! அவர்களுக்கு இந்த எழுத்துக் குழப்பம் வரவில்லையே! அதில் உள்ள இரகசியம் தான் என்ன?

வேற்று மொழிச் சொற்களை ஏற்றுக் கொள்வதால் தான் ஆங்கிலம் வளர்ந்து கொண்டு போகிறது என்று நம்புகிறவர்கள், பிறரும் நம்பவேண்டும் என்று விரும்புகிறவர்கள், இந்தக் கேள்வியை முதலில் தங்களுக்குள்ளேயே கேட்டுக் கொள்ள வேண்டும்.

### எழுத்தும் மொழியும்

மனிதனுக்கு நாவு ஒன்று; என்ன பேசினாலும் எந்த மொழியில் பேசினாலும் அந்த ஒரு நாவால்தான் பேச வேண்டும். மனிதன் கைகளில் விரல்கள் பத்து; எந்த நாட்டிலிருந்து எந்தப் புதிய இயந்திரம் இறக்குமதியானாலும் அதனை அந்தப் பத்து விரல் கொண்டுதான் கையாள வேண்டும். பதினோராவது விரல் இருப்பவர்கள் தாம் இந்த இயந்திரத்தை ஓட்ட முடியும் என யாரும் சொல்ல முடியாது. சொன்னால் இயந்திரம் இறக்குமதியும் ஆகாது! மனிதனுக்கு நாவும் விரலும் இருப்பது போன்றுதான் ஒவ்வொரு மொழிக்கும் தனிப்பட்ட முறையில் எழுத்துக்கள் இருக்கின்றன. எதனை எங்கிருந்து எடுத்து வந்து எழுதினாலும் ஒரு மொழி தனக்குரிய சொந்த எழுத்துக்களால் தான் அதை எழுத வேண்டும். பிறமொழிச் சொற்களை ஆங்கிலம் ஏற்றுக்கொள்கின்றது என்றால் அது தன் 26 எழுத்துக்களை நீட்டித் தான் ஏற்றுக்கொள்கின்றது. இதுவே ஆங்கிலத்தின் வெற்றிக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் இரகசியம்! ஆங்கிலேயர் இருநூறு ஆண்டுக் காலம் தமிழ்ப் பகுதியை ஆண்டிருந்துங்கூட, தமிழ் என்ற மொழியின் பெய

(13-ம் பக்கம் பார்க்க)

எழுத்துக் குழப்பம்

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா 174 SEA STREET, COLOMBO 11

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்கள்ல் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சுப சரண செப சித்தே’ தடையான காரணம்?

## சிங்களக் கலாசாரம் கெட்டுவிடுமா?

**தமிழ் பிரமுகர் ஒருவரால் தயாரிக்கப்பட்ட சிங்களப் படமான ‘சுப சரண செபசித்தே’ சிங்களக் கலாச் சாரத்தைப் பாழ்படுத்தும் என்ற காரணத்தினுல் தடைசெய்யப் பட்டிருந்தது. இப்பொழுது இப் படம் வயதுவந்தவர்களுக்கு மட்டும் திரையிடப் பட்டுள்ளது. இந்தத் “தடைக் காண்டத்”துக்கான உண்மைக் காரணம் வேறு இருக்கிறது என்று நமது ஒற்று நிருபர் கூறுகிருர்.**

சிவா பிலிம்சார் தயாரித்த ‘சுபசரண செப சித்தே’ என்ற சிங்களப் படம் தணிக்கை சபையாரின் பார்வைக்குப் பல தடவைகள் போட்டுக் காண்பிக்கப்பட்டதாம். முதன் முதலில் தணிக்கையாளருக்குத் திரையிடப்பட்ட அன்று மின்சாரம் கோளாறு பண்ணியதாம். அடுத்த பல பல இடைஞ்சல்கள் ஏற்பட்டனவாம். இறுதியில் மந்திரி ஒருவரும் இப் படத்தைப் பார்த்துவிட்டு பொது மக்களுக்குத் திரையிடத் தகுதியற்றது எனத் தீர்ப்பு வழங்கி விட்டாராம். இப்பொழுது வயது வந்தவர்களுக்கு மட்டும் இப்படத்தைத் திரையிடலாம் என்று தணிக்கை சபை முடிவுசெய்ததன் பேரில் படம் திரையிடப்பட்டுள்ளது.

தமிழகத்திலும் இலங்கையிலும் வெற்றிக் கொடிநாட்டிய ‘சாரதா’ படத்தின் தழுவலே இச் சிங்களப்படம் என்று கூறப்படுகிறது. ஒரு கல்லூரி மாணவி கல்லூரி ஆசிரியர் மேல் காதல்கொள்வதே தணிக்கை சபையினரின் ஆட்சேபனைக்கு இலக்கானது என்று கூறப்படுகிறது. இத்தகைய செயல் சிங்களக் கலாச்சாரத்தை நாசமாக்கி விடும் என்று சுட்டிக் காட்டப்படுகிறதாம்.

சிங்களக் கலாச்சாரம் எங்கிருந்து வந்தது என்பதை ஆராயப்புகின் உண்மை புலப்படும். தென் இந்தியாவின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றின் அனுசரணையில்தான் இன்றைய சிங்கள மக்களின் நாகரிகம் இரண்டறப் பிணைக்கப்பட்டிருக்கிறது என்பதை எந்த வரலாற்று ஆசிரியரும் மறுக்க முடியாது. இது பண்டு தொண்டு ஏற்பட்டிருக்கும் அறுக்க முடியாத பிணைப்பு.

தென்னுட்டிலும், இலங்கையிலும் திரையிடப்பட்டு பலராலும் கண்டு களிக்கப்பட்ட—சிங்கள மக்களாலும் நன்கு சுவைக்கப்பட்ட—படமான ‘சாரதா’வின் கதையினைத் தழுவி தயாரிக்கப்பட்ட ‘சுப சரண செப சித்தே’ தடை செய்யப் பட்டமைக்கு அடிப்படைக் காரணம் சிங்களப் பண்பு சீர்கெடும் என்பதல்ல.

இதற்கான உண்மையான காரணங்கள் வேறு பல உள, என்பதை சுதந்திரன் ஒற்று நிருபர் நமக்குத் தெரிவித்துள்ளார்.


வெசாக் தினத்தன்று இப் படத்தைத் திரையிட தயாரிப்பாளர்கள் ஆயத்தங்கள் செய்து வந்தனர். இதே தினத்தன்று ஒரு சிங்களத் தயாரிப்பாளர் தயாரித்த வேறொரு படத்தையும் திரையிட முயற்சிகள் நடைபெற்றனவாம். சுமார் மூன்றரை இலட்ச ரூபாய்களைச் செலவிட்டுத் தயாரிக்கப்பட்ட ‘சுப சரண செப சித்தே’ படத்தை திரையிடுவதற்கு முட்டுக் கட்டைகள் போடுவோம் என்று சிங்களத் தயாரிப்பாளர் சிலர் சபதம் செய்ததாகவும் தெரிய வருகிறது. இவர்களுடை சபதமும் இத்தடை விதிப்பு நடவடிக்கைக்கு ஒரு காரணமாகும் என்றும் வர்ணிக்கப்படுகிறது.

இது தவிர சிங்களத் திரைப்படத் தயாரிப்பில் அதிகமாகத் தமிழ் பேசும் பிரமுகர்களே ஈடுபட்டுள்ளனர். இந்த உரிமையைக் கட்டுப்படுத்த—வெட்டி வீழ்த்த சிங்கள வகுப்பு வாதிகள் பலர் பல வருடங்களாக பெரு முயற்சி எடுத்து வருகின்றனர். இதன் விளைவே ‘திரைப்பட விசாரணைக் குழு’ தோன்ற ஏதுவாக அமைந்தது என்ருல் மிகையாகாது. தமிழ் பேசும் பிரமுகர்களிடம் சிக்கியுள்ள சினிமா வர்த்தகத்தை அபகரித்து விடவே, திரைப்பட தேசியமயக் கோஷம் ஏற்பட்டுள்ளது. இதைச் சகலரும் நன்கு அறிவர். இக் காரணங்களினுல்தான் ‘சுப சரண செப சித்தே’ என்ற தமிழ் பிரமுகர் ஒருவரின் தயாரிப்பு, பல சங்கடங்களைத் தாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தென்னுட்டுத் திரைப் படங்கள்— குறிப்பாகத் தமிழ் படங்கள் இங்கு திரையிடப்படுவதனுல் சிங்களக் கலை—கலாச்சாரம் பண்பாடு கெட்டுப் போகிறது, என்றும் ஒரு வரட்டுக் கூச்சல் கிளம்பிய வண்ணம் இருப்பது கண்கூடு. இந்த அடிப் படையில் தமிழ்ப் படங்களை இங்கு திரையிடுவதும் விரைவில் தடை செய்யப்படவும் இடமுண்டு.

சிங்களப் பெண்கள் இன்று பொதுவாக தமிழ் முறைப்படியே நடை உடை பாவனைகளை மாற்றிக் கொண்டு வருகின்றனர். கவர்ச்சியாக தங்கள் ஆடை அணிகளை உடுத்திக் கொள்வதற்கும், திலகம் முதலானவைகளை இட்டுக் கொள்வதற்கும் தமிழ்த் திரைப் படங்கள்தான் உதவுகின்றன. ஆகவே இக் கூற்றில் ஓரளவு உண்மையும் உண்டு என்பதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும். இன்று தமிழ் பெண்களுக்கும் சிங்களப் பெண்களுக்கும் வித்தியாசம் தெரியவில்லையே என்று வயோதிப சிங்கள அரசியல்வாதி ஒருவர் அங்கலாய்த்தாராம்.

இவை எல்லாவற்றையும் அவதானிக்கும்போது தமிழ் பேசுவோரிடம் சிக்கியுள்ள திரைப் படத் தொழிலை அபகரிக்கவே சிங்கள வகுப்பு வாதிகள் மட்டுமல்லாமல் அரசும் முயற்சி எடுக்கிறது என்பது புலனுகிறது.



தமிழ் திரை உலகில் ‘கற்பகம்’ ஒரு புரட்சியை ஏற்படுத்தியவள். அவள் சென்ற விடமெல்லாம் சிறப்புப் பெற்றுள். விரைவில் இலங்கை இரசிகர்களையும் மகிழ்விக்க சினிமாஸ் திரைகளுக்கு வருகிருள். கற்பகத்தில் கே. ஆர். விஜயாவும், ஜெமினி கணேசனும் இப்படித்தோன்றுகின்றனர்.


### நீங்கள் முன்னேற விரும்பினுல் நான் உதவி செய்யத் தயார்



எந்த விதமான இன்னல், துன்பம், மனவேதனை, எதிரிகளால் ஆபத்து ஏற்பட்டாலும், தெய்வ பலத்தாலும், மந்திர வலிமையாலும் நீங்கள் விரும்புகிறபடி எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொடுப்பேன். எனக்குக் கிடைத்துள்ள ஆயிரக் கணக்கான அத்தாட்சிப் பத்திரங்களே அதற்குச் சான்று. கொடியவர்களை மடக்க, வேண்டாதவர்களை நீக்க, விரும்பியவர்களைச் சேர்த்து வைக்க, காதலி காதலரின் உள்ளத்தைக் கவர, பெரியோர்களுக்குக் கீழ்ப்படியுமாறு செய்ய, கணவன்—மனைவி தகராறு நீங்க, தொழில் கிடைக்க, பதவி உயர, பணம் கிடைக்க, பணத்தைத் சேமிக்க, வர்த்தகம், கமச் செய்கை முன்னேற, கிரக தோஷம், இடத்தின் தோஷம், எதிரிகளால் ஏற்படும் இடைஞ்சல்கள் ஆகியவை நீங்க, கோள் மூட்டும், நிந்தனை செய்யும், அவமானப் படுத்தும் குற்றங்களைச் செய்து தப்பியோட முயலும் துஷ்டர்களை தெய்வத் தண்டனை பெற்றுக் கொடுக்க, வயது கூடியதால் விவாகம் செய்ய முடியாதிருப்பவர்களுக்கும், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமலிருப்பவர்களுக்கும் அதிர்ஷ்டமுள்ள கலியாணம் அல்லது எதிர்பார்க்கும் கலியாணம் நடைபெற, பரீட்சை, போட்டி, ஆகியவற்றில் வெற்றி பெற, சபைக் கோழைதனம் அகன்று திறமையான பேச்சாளராக்க, படிப்பு முன்னேற, மருந்துகளால் குணப்படுத்த முடியாத நோய், மிதமிஞ்சிய உஷ்ணத்தால் தாது சக்தி வேளியேறுதல், நஞ்சு மருந்து விஷம் முதலியவை தின்பட்டதால் ஏற்படும் வயிற்று, நெஞ்சு எரிவு ஆகியவற்றைக் குணப்படுத்த இரகசிய மாந்திரீக முறைகளின் மூலம் நிவாரணம் பெற்றுக் கொடுப்பேன். வேறு எந்த விதமான துன்பங்களாக இருந்தாலும் எழுதுங்கள். இல்லையேல் என்னை நேரடியாகச் சந்தியுங்கள். இரகசியம் வெளியிடப்பட மாட்டாது. நிறைவேற்றித் தருவேன்.

கவர்மெண்ட் ரெஜிஷ்டர்

மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

**அநுதா என்ணெய் தலைமைக் காரியாலயம்**

கண்டி ரோட், கம்பளை.





## நடித்துக் கொண்டே டைரக்ட் செய்வது சுலபமல்ல

‘நாமே நடிக்கும் படத்தை நாமே டைரக்ட் செய்வது அவ்வளவு சுலபமானதல்ல. நாம் டைரக்ட் செய்வதானுல் நாம் நடிப்பது சாத்தியமல்ல. நடிகர்கள் தாங்களே நடித்துக்கொண்டு திறமையாக டைரட் செய்வது முடியாத காரியம். இதை நான் எனது சொந்த அனுபவத்தில் கண்டேன்.’ இவ்வாறு சிவாஜி கணேசன் கருத்து வெளியிட்டார்.



சிவாஜி பிலிம்சார் பலவர்ணத்தில தயாரித்துவரும் ‘புதிய பறவை’ என்ற படத்துக்கு டைரக்ஷன் மேற்பார்வையை சிவாஜி கணேசனே மேற்கொண்டிருந்தார். ஆனுல் தானே அப் படத்தில் பிரதான பாகத்தில் நடிப்பதனுல், டைரக்ஷன் செய்வதோ, மேற் பார்வை செய்வதோ [illegible] அப் பொறுப்புகளை விட்டு விட்டார். இது சம்பந்தமாக (அவர் கூறியகருத்தே மேலே தரப்பட்டது. அவர் தொடர்ந்து கூறும்போது:

‘ஒரு படத்தை டைரக்ட் செய்வது என்பது மிகவும் கடினமான காரியம். படமாக்கும் முறையினையிட்டு தீவிரமாகச் சிந்தனை செய்ய வேண்டும். அத்துடன் அதே படத்தில் முக்கிய வேடமும் புனைவதானுல் மனிதனுல் அது சாத்தியப்படக்கூடிய காரியமல்ல’ என்று கூறினுர்.

### நடந்தவை

#### ‘நவீன அரிச்சந்திரா’

கரணவாய் தெற்கு சந்திரா கலாமன்றத்தினரின் இரண்டாவது தயாரிப்பான ‘‘நவீன அரிச்சந்திரா’’ எனும் நகைச்சுவை நாடகம் கடந்த வாரம் அரங்கேற்றப்பட்டது.

இந் நாடகத்தில், திருவாளர்கள் சின்னவன், சி. செல்வன், நா. மாணிக்கம், சு. சிவபாதம் சின்னத்தம்பி, ஆகியோர் முக்கிய பாகமேற்று நடித்தனர்.

சங்கீத பூஷணம் கந்தையா இந்நாடகத்தை இயக்கினுர். நாடக முடிவில் சிறப்பாக நடித்தவர்களான திருவாளர்கள் சின்னவன், சி. செல்வன் ஆகியோருக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது.

#### கரக ஆட்ட விழா

சுடுகந்தை தோட்டத்திலுள்ள முத்துமாரியம்மன் ஆலயத்தில் 16-ம் திகதி கரக ஆட்டத்துக்கான காப்புக் கட்டுத் திருவிழா நடைபெற்றது. சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் இவ் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இறுதி தினத்தில் அன்னதானமும் வழங்கப்பட்டது. தோட்டத்து மக்கள் இவ் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

#### 90-வது வில்லுப்பாட்டு

மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நகரசபைத் தலைவர் திரு. ஜே. எல். திசவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற மக்கள் சுகாதார விழாவில் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினர் தங்கள் 90-வது வில்லுப்பாட்டுக் கச்சேரியை அரங்கேற்றினர். முற்றிலும் புதுமை நிறைந்த ‘யம லோகத்திலே’ என்ற நகைச்சுவை வில்லுப்பாட்டுப் பலரது பாராட்டுக்களையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

#### நாடகப் போட்டி முடிவுகள்

கண்டி, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கான நாடகப் போட்டி முடிவுகள் இவ்வாரம் இடம் பெறவில்லை அடுத்த வாரம் வெளி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் மணவாளன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது கட்டுரை. 'இன்னமும் சின்னவன் தானே முருகன்' என்கிறது மூன்றாவது கட்டுரை. நாலாம் கட்டுரையில் 'தெய்வம் உண்டென்று இரு' என்று நம்பிக்கை ஊட்டும் இவ்வாசிரியர் 'சிந்தனையிற் சிவனே' ஏற்றுங்கள் என்கிறார் தனது ஐந்தாவது கட்டுரையில். 'கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்' என்ற ஆறாவது கட்டுரையில் கடவுட் காதலை கனிவுற எடுத்துக் கூறும் இவ்வாசிரியர்எம்தலைவனைவணங்கினால் எம் தலையெழுத்து அழிவது உறுதியெனப் பொருள் பட 'தலையெழுத்து அழிந்தது' என்று தன் ஏழாம் கட்டுரையில் ஏற்றமுற எடுத்துரைத்துள்ளார். இவர் தன் எட்டாவது கட்டுரையில் 'யமனுக்குச் சவால்' விடுகிறார். ஒன்பதாவது கட்டுரையில் அருணகிரிநாதர் கண்ட 'குதிரைக்கார முருகனை' எம்முன் காட்டிப் பத்தாவது கட்டுரையில் ஆண்டாளின் திருப்பாவையையும் மணிவாசகரின் திருவெம்பாவையையும் தமிழருக்கு அருள் நெறிகாட்டும் 'இரு கண்கள்' என்கிறார். 'நடமாடும் கோயில்கள்' என்ற தனது பதினோராவது கட்டுரையில் சிவனைச் சிந்தனையில் தாங்குவோர் திருமேனி நடமாடும் கோயில் என்றும் இத் திருமேனியாகிய திருக்கோயிலுக்குச் செய்யும் சீரும் சிறப்பும் படமாடும் கோயில் பரமனார் திருவடியில் சென்று சேரும் என்ற திருமூலர் திருமந்திரத்திற்கு திறம்பட விளக்கம் கூறுகிறார் இவ்வாசிரியர்.

இப்படி அரும் பெரும் தத்துவங்களை அழகுற விளக்கும் இவ்வாசிரியர் தனது இறுதிக் கட்டுரையில் 'சும்மா இரு' என்கிறார். இவரின் இக்கூற்று முதலில் எம்மை வியப்பில் ஆழ்த்துவது உண்மைதான். எனினும் இந்நூலுக்குச் சிகரம் வைத்தாற்போன்ற இக் கட்டுரையை உளம் ஊன்றிப் பயில்கின்றபோதுதான் 'கந்துகமதச்சரியை வசமாய் நடத்தலாம் கரடி வெம்புலியையும் அடக்கலாம்' இன்னும் பல எத்தனையோ செய்யலாம் ஆனால் 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது' என்று ஏன் தாயுமானார் கூறினார் என்பதிற்கு பொருள் விளங்கும். மெய் உணர்வை வேண்டி நிற்போருக்கு இக் கட்டுரை தனிப்பெரும் விருந்து.

இந்நூலுக்கு நூலாசிரியர் மொழிந்துள்ள முகவுரை நூலின் உள்ளடக்கவுரையாக ஒளிவிடுகிறது. நூலிலே காணப்படும் 'காப்புக்' கவிதைகள் இந்நூலைக் காக்கும்படி கடவுளை வேண்டி நிற்கின்றன. கோயம்புத்தூர் நீதிபதி அறிஞர் திரு. நா. கிரிதாரி, பிரசாத், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் ஆகியோர் இந்நூலுக்கு அளித்திருக்கும் அணிந்துரைகள் இந்நூலின் அருமையை, அழகை, ஆழத்தை எடுத்துக் காட்டுகின்றன நூலை முற்றுக நுகர்கின்றபோது நூலாசிரியரின் மும்மொழிப் புலமை தெற்றெனப் புலப்படுகிறது.

'முருகன் மணவாளன்' என்ற நூலுக்கு என் மதிப்புரையின் முடிவுரை கூறுகையில் ஒரு சொல் மொழிய விழைகிறேன், தூயோன் இறைவனை உளத் தூய்மையோடு வழிபடும் இந் நூலாசிரியர் மொழியின் தூய்மையையும் இன்னும் கொஞ்சம் காக்க முயலின் எம்மொழியின் காவலனாயும் அவர் விளங்குவது உறுதி. மெய் விளக்கத் (தத்துவத்) கருத்துக்களை செந்தமிழில் பெய்தெழுதல் சிறிதுகடினம் எனினும் முயலின் வெற்றியுண்டு. அந்த ஆற்றல் அவரிடம் நிறைய உண்டென்பதையும் யான் அறிவேன். ஆதுவன செய்யுமாறு அன்போடு வேண்டுகிறேன்.

இந்நூலின் இறுதியில் பிழைதிருத்தம் என்ற பகுதி உண்டு. நாவலர் காலத்திலேயே அச்சுப்பிழைகள் தவிர்க்கப்பட்டபோது இருபதாம் நூற்றாண்டில் அவற்றிற்கு எங்கே இடமுண்டு? இதனைப்பதிப்பகத்தார் நினைவிற் கொள்வார்களாக.

-'ஈழவேந்தன்'

## பாடத் திட்டம்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலை வருடத்தில் 206 நாள் நடைபெற்றால் அநேகமாக மாணவர்கள் நாலில் ஒரு பகுதி நாட்களுக்கே வந்திருப்பார்கள். மற்றைய நாட்களில் அப்பிள்ளைகள் தம் வீடுகட்கு விறகு தேடுவதற்கும், வீட்டில் பெற்றோர் வேலைக்குப்போய்விட கைக் குழந்தைகளைப் பார்க்கவும், பெற்றோர்க்கு வேலைத்தளங்கட்கு தேநீர் உணவு எடுத்துச்செல்லவும் பாடசாலைக்குச் செல்லாமல் இருந்துவிடுவார்கள்.

இந் நிலையில் அநேக தோட்ட ஆசிரியர்கள் பாடசாலைகட்கு வந்தும் மாணவரின் வரவுஒழுங்கீனத்தால் வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாமல் அல்லல் உறுவதைக் கட்டுரையாளர் தோட்டப்பகுதியில் உள்ளவராய்இருந்தும் அறியாதது ஆச்சரியமே!

ஆனால் தற்போதைய தோட்டப் பாடசாலை ஆசிரியர்களில் பெரும்பாலோர் நன்கு தராதரம் உள்ளவர்கள். இந்நிலையில் தோட்டப் பாடசாலை ஆசிரியர்களின் வேதனமோ ஏனைய இந் நாட்டு ஆசிரியர்களின் வேதனத்திலும் பார்க்க மிகவும் கீழ்நிலையில் இருக்கின்றது. இவ்வாசிரியர்கள் கல்வித் துறையில் முன்னேற முடியாமல் அரசாங்கத்தின் வகுப்புவாதப் போக்கினால் அல்லலுறுகின்றனர்.

தோட்டப் பாடசாலைகளில் நல்ல கல்வி போதிப்பதற்கு 1939ம் ஆண்டில் இயற்றப்பட்ட பிற்போக்கான பாடத் திட்டம் அடியோடு மாற்றியமைக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் 2மணித்தியாலப் போதனை நீங்க வேண்டும். சகல பாடசாலைகளும் 5 மணித்தியாலம் நடைபெற வேண்டும்.

இவைகள் ஆசிரியர்கள் பிழை அல்ல. அரசாங்கமும், தொழிலாளர் ஸ்தாபனங்கள் எல்லாம் செய்ய வேண்டிய முக்கிய விடயம். இவைகளில் பெருங்குறை இருக்க தோட்டப் பாடசாலை ஆசிரியர்களைக்குறைகூறுவதுநியாயம் ஆகாது. அவர்கள் இனத் துரோகம் புரிபவர்கள் அல்ல.

## தமிழரசுவாதிகட்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக் கொள்ள வேண்டுமென்றும் அவர் புத்திமதி கூறினார்.

இந்தப் பேச்சு இலங்கை இந்தியர் தலைவர்களுக்கும், தமிழரசுவாதிகளுக்கும் வேப்பம் காயைப் போலக் கசக்கிறது.

சிங்களவர்களுடன் ஒற்றுமையாக வாழ ஒரு வழியைக் கூறினால், அதனை அவர்கள் எதிர்ப்பதிலிருந்து. இந்தியர்களுக்கோ, அவர்கள் கைகோத்துக்கொண்டுள்ள தமிழரசுவாதிகளுக்கோ இந்த நாட்டில் இடம் கிடையாது என்பது தெளிவாகிறது.'

# எமது போராட்டம் ஓயாது

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் ஒப்படைக்கப்பட்டு, நல்ல தீர்ப்புக் கிடைக்கப்பெற்றும், ஆட்சியின் பொறுப்பற்ற தன்மை எம்மை வேதனைக்குள்ளாக்கியுள்ளது. அதன் காரணமாக, தொடர்ந்து நீதி தேவியின் துணைநாடி நிற்கின்றோம். முடிவு எப்படியானாலும், எமது எதிர்காலம் எமது கையில் என்பதை மறவாது தொடர்ந்து போராடுவோம்.

### காலம் மாறும்

கோடீசுவரன் வழக்கு முடிவு எமக்கெல்லாம் புத்துயிர் ஊட்டியுள்ளது. ஏப்ரல் 20ல் எமக்கு நல்ல தீர்ப்பு வழங்கப்பட்டது. தமிழ் இனமே குதூகலித்தது. தமிழர் பிரச்சினையில் பெரும் பகுதி தீர்ந்துவிட்டதாகவே கருதப்பட்டது. கொள்கையில் வழுவினர்களில் ஒரு பகுதியினர், இவ்வெற்றியைக் கண்டு மகிழ்ந்தார்கள். மற்றவர்கள் வேதனைப்பட்டார்கள் ஆட்சிக்கே வேட்டு வைக்கும் இந்த முடிவைப் பொறுக்க முடியாத ஆட்சியாளர் சூட்டோடு சூடாக வழக்கின் தீர்ப்பை எதிர்த்து உயர்தர நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்கள் அது மட்டுமல்ல, தீர்ப்பு எமக்குச் சாதகமாக இருந்துங்கூட அதனைப் புறக்கணித்துக் கட்டாய ஓய்வு முன்னறிவித்தல்களைத் தொடர்ந்து கொடுத்து வருவது கண்டு நாம் வேதனையடைகின்றோம். இந்த முன்னறிவித்தல்களைச் சட்ட நடவடிக்கை மூலம் தடுத்து நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் எமது சட்ட வல்லுனர்கள் செய்து முடித்துவிட்டார்கள். இதன் நல்ல முடிவை விரைவில் அறியக்கூடியவர்களாக இருப்போம். எதற்கும் கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்—காலம் மாறும்.

### எமது பயணம்

கடந்துமுடிந்த காலங்களிலே பல்வேறு இன்னல்களையேற்று உரிமைவாழ்வு காண உறுதியுடன் செயலாற்றி வந்தோம். சாவின் மடியில் சாய்ந்திருக்கும் தமிழ் இனத்தின் வாழ்வு தழைத்து வளமார் தமிழகத்தைக்காண நாம் நெடும் பயணம் செய்யவேண்டும். பாதையொன்றும் வழவழப்பான புதிய வீதியல்ல. பாதையிலே பலர் பலியாகலாம், சிலர் தடுக்கி விழுந்துவிடலாம். ஆனாலும் பயணம் தொடர்ந்து நடைபெற வேண்டும். தொடர்ந்து நடப்போம். முன்னேறுவோம் எதிர்காலத்திலே எழில்மிக்க ஒரு குளிர்ச் சோலையைச்சமைத்து இன்பவாழ்வகாண ஆற்றவேண்டிய பணி-செய்யவேண்டிய கடின உழைப்பு-இழக்கவேண்டிய பெருஞ்செல்வம்--செய்யவேண்டிய தியாகம்--இவை எங்கள் உள்ளத்தைக் கலக்கி உறுதியைக் குலைத்து திசையைத் திருப்பிவிடுமென்று அஞ்சினேமானால் உலக வரலாறே பொய்யாகிவிடும். மனித சமுதாயமெ மிருகக் கூட்டமாக மாறிவிடும். இந்த உண்மையை எண்ணத்திலிருத்தி-எமது பயணத்தைத் தொடர்ந்து நடத்துவோம்.

### பதவியாளர்கள்

நடப்பு வருடப் பதவியாளர்களாகப் பின் வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. வே. கனகசபைமுதலி, துணைத் தலைவர்: திரு. ஏ. புண்ணியமூர்த்தி, செயலாளர்: திரு. ஆ. வி. கனகரத்தினம், துணைச் செயலாளர்: திரு. இ. அந்தோனிப் பிள்ளை, பொருளாளர்: திரு. செ. அருச்சுனு, துணைப் பொருளாளர்: திரு. க. பாலசுப்பிரமணியம்.

# இ. த. க. உடுப்பிட்டிக் கிளை கலைப்போட்டி முடிவுகள்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின உடுப்பிட்டிக் கிளையின் ஆதரவில், நடந்த கலைப் போட்டி முடிவுகள்:

### பேச்சுப் போட்டி:

கீழ்ப்பிரிவு: ஆண்: 1. தா. தா சத்தியகிரி. 2. 'சுதந்திரன்' 3. த. வசந்தகுமார்.

பெண்: 1. கணேசராசா குமுதவல்லி, 2. நவரத்தினம் இளவேணி.

மேற்பிரிவு: ஆண்: 1. ச. சிவராசசிங்கம், 2. ஆ. வேலாயுதம், 3. க. நீலகண்டன்.

பெண்: 1. த. சுகிர்தலோசினி, 2. சி. சிவயோகம்.

### சங்கீதப் போட்டி

கீழ்ப்பிரிவு: 1. க. கமலினி, 2 செ. நிர்பமதேவி, 3. க. சாந்தாலக்ஷ்மி.

மேற்பிரிவு: த செல்வலிங்கம், 2. வி. யோகராசா, 3. க. மங்கையற்கரசி.

### கட்டுரைப் போட்டி

கீழ்ப்பிரிவு: 1. எஸ். ஜே. ஜெயக்குமாரன், 2. ஆனந்த இராசமாணிக்கம், 3. க. கமலாம்பிகை.

மேற்பிரிவு: 1. க. நீலகண்டன், 2. எஸ். விநாயகமூர்த்தி, 3. இந்திராணி.

### நடனப் போட்டி

1. கோபிகா நடனம், 2. க. கமலினி, 3. க. குமுதவல்லி, நவரத்தினம் இளவேணி, 4. செ. கமலாதேவி.

### நாடகப் போட்டி

இளங்கோ முத்தமிழ் மன்றம்: பேனு நண்பர் கழகம்.

பரிசில்கள் வழங்கியவர்: திருவாட்டி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்.


## தமிழ் பொழியில்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

ரையோ, பழனிஎன்றஊரின் பெயரையோ காட்சி நலத்தை முன்னிட்டு இல்லாவிட்டாலும் ஆட்சி நலத்தை முன்னிட்டாவது எழுதுவதற்கு இருபத்து ஏழாவது எழுத்தாக 'ழ' கரத்தையோ, அல்லது திருவரங்கம், திருவில்லிபுத்தூர்களை ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் என்று எழுதுவதற்காக இருபத்து எட்டாவது எழுத்தாக ஸ்ரீயையோ சுவீகாரம் செய்துகொள்ளவில்லை!

நாளை திங்கள் உலகிற்கோ, செவ்வாய் உலகிற்கோ சென்றாலும்கூட அங்கு நடப்போகின்ற ஊர்ப் பெயர்களைக் குறிக்கும் நெடுஞ்சாலைக் கற்களெல்லாம் ஆங்கிலத்திலே எழுதப்படுமானால், இந்த இருபத்தாறு எழுத்துக்கள் தாம் பயனபடும்! இவ்வளவுஏன் 'பதனி தண்டபாணி ஸ்வாமி அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்' என்ற தொடர் ஆங்கிலேய நாளிதழிலும் வருகிறத; தமிழ் நாளிதழிலும் வருகிறது. ஆங்கிலத்தில் அச்சுக் கோர்ப்பவன் ஆங்கிலேயரின் இலக்கணத்திற்கு மதிப்புக் கொடுத்து 26 எழுத்து என்ற எல்லையைத் தாண்டாமல் நின்று கோர்த்துக்கொண்டிருக்கின்றான்; தமிழ்த் தாளில் அச்சுக் கோர்க்கும் தமிழனோ தமிழ் இலக்கணத்தைக் கூரைமீது விசியெறிந்துவிட்டு நான்கு முறை வடமொழி கிரந்த எழுத்துக்கள் இருக்கும் பெட்டியைத் தேடி ஓடுகின்றான்.

(தொடரும்)


ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர் கதை:

# சோலை மண்டபம்

—'மாவிட்டபுர ஆனந்தன்'—

## (11)

இருகாவலாளிகளும் நடந்துவந்தபொழுது நிலமே அதிர்ந்து விடுவது போலிருந்தது. இரண்டு மலைகள் அசைந்து வந்தால் எப்படியிருக்குமோ அப்படி இருந்தது அவர்கள் வருகை! என் கண்கள் சுற்ற ஆரம்பித்தன. என்றுமே நான் அடைந்திராத பீதி! பயம்!! அந்த இடத்தை விட்டே ஓடிவிடமுயன்ருேம். அதைக் கண்டுவிட்டு 'நில்லுங்கள் அங்கே' என்று இடி இடிப்பதுபோலக். கத்திஞர்கள். அந்தச் சத்தத்தில் என் உள்ளமும் உடலும் ஒருங்கே அதிர்ந்தன.

முன்னர் அவர்களைக் கண்டபோது ஏற்பட்ட அதிர்ச்சியினுல், பாடலை மறந்திருந்தேனல்லவா? இப்பொழுது, அவர்கள்போட்ட சத்தத்தினுல் ஏற்பட்ட அதிர்ச்சி பாடலை மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்தது. பாடல் நினைவுக்குவந்த போது, அவர்களிருவரும் எமக்கு மிக அண்மையில் வந்துவிட்டார்கள். நான் ஒரு கணமேனும் தாமதிக்கவில்லை. எவ்வளவு சிறப்பாகப் பாடமுடியுமோ அவ்வாறு பாடலானேன். எனது சங்கீதத்திலே இருவரும் லயித்துப்போய் மெய் மறந்து நின்ருர்கள்.

பாடல் முடிந்தது; அவர்களை நோக்கினேன். நிலத்தில் விழுந்து, மெய் மறந்து தூங்கிக்கொண்டிருந்தனர் இருவரும்! என் மனதிலே கரைபுரண்டோடிய மகிழ்ச்சிக்கு அளவேது? அவர்கள் வசமிருந்த இரு துப்பாக்கிகளையும் எடுத்துக்கொண்டு, சோலை மண்டபத்துட் பிரவேசித்தோம்.

ஏட்டுச் சுவடியிலே சொல்லப்பட்டிருந்த பாதை வழியாக நடந்துசென்ருேம். வெகுநேரம்வரை எந்தத் தடையும் நேரவில்லை. திடீரென்று யானையின் பிளிறலைப்போன்ற ஒரு ஓசை கேட்டுத் திடுக்கிட்டோம். சுமார் இருபது யார் தூரமிருக்கும். எமது பாதையில் யானையைப் போன்ற ஒரு உருவம் அசைவது தெரிந்தது.

## (12)

அந்த உருவம் பார்வைக்கு விநோதமாயிருந்தது. பூலோகயானையின் துதிக்கையையும், வாலையும் நீக்கிவிட்டால் அந்த உருவத்தின் அமைப்புவரும். எங்களைக் கண்டமாத்திரத்திலேயே, மிகவும் கோபங்கொண்டு எம்மைக் கொல்ல ஓடிவந்தது. அதன் கோபம் என்ன செய்யும்? நாம் சிறிதும் கலவரமடையவில்லை. கையில் துப்பாக்கி இருக்கும்போது பயமேது? துப்பாக்கியிலிருந்து குண்டு புறப்பட்டுச் செல்கிறது. மறுகணம்... ...உருவம் கீழே விழுந்தது.

தொடர்ந்து நடந்துசென்ருேம் நாம். சிறிது தூரம் போனபின், அகழியொன்று குறுக்கிட்டது. இலகுவிற் கடந்துசெல்லக் கூடியவாறு அதற்குமேல் ஒரு பாலம் அமைக்கப்பட்டிருந்தது. அவசர அவசரமாக அதைக் கடக்கமுற்பட்டோம். அதிக பாரத்தை அந்தப் பாலம் தாங்கமாட்டாதென்பதை நாம் கவனிக்கவேயில்லை!

ஐவரும் ஒரேயடியாக அதன்மேல் நடந்தோம். 'படார்...' என்று பெரிய சத்தம் கேட்டது. ஐவரும் அகழி நீருக்குள் வீழ்ந்தோம். எம் ஐவரில், நீந்தத்தெரிந்தவர்கள் இருவர் தான்— —நானும், எட்வர்ட்டும்! மற்ற மூவருக்கும் நீந்துவதைப்பற்றி எள்ளளவேனும் தெரியாது. அகழியோ மிக மிக ஆழமாயிருந்ததால் அந்த மூவரின் நிலையும் பரிதாபகரமானதாயிருந்தது. அவர்கள் நீருக்குள் மூழ்கிக் கீழே கீழே போய்க்கொண்டிருந்தது என் கண்களுக்குத் தெரிந்தது. என்னுல் என்னதான் செய்துவிடமுடியும், இரக்கப்படுவதைத் தவிர?......

(தொடரும்)

# கதைப் பாட்டு

—(பூனையும்-எலிகளும்)—

—மட்டுநகர் முத்தழகு—

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இதைக் கேட்ட பூனையின் வாயால் நீர் வடிந்தது. அதை நாக்கால் நக்கிக்கொண்டு, எலிகளை நிமிர்ந்து பார்த்து,

'கொழுத்த கொழுத்த
எலிகளாக வந்துவணங்கினுல்
கொன்று தின்று நாளையெல்
லாம் குஷியாய்ப் போக்குவேன்!
இழுத்திழுத்து என்னை நீங்கள்
ஏய்க்கத் தொடங்கினுல்
இயமனுகி உம்மினத்தை
இரையாய் மாற்றுவேன்!'

இதைக் கேட்ட எலிகளெல்லாம் நடுநடுங்கி, தினமும் வருவதாக வாக்குப் பண்ணிச் சென்றன. மாதங்கள் இரண்டு ஓடி மறைந்தன. எலிகளின் எண்ணிக்கை குறையைத் தொடங்கியது. எலிகளெல்லாம் மீண்டும் மாநாடு கூடின. அதில் ஒரு எலி:

'குறைந்து குறைந்து எம்மினமே
ஆழிந்து போவதா?
நிறைந்த நிறைந்த வயிற்றுடன்
பூனை வாழ்வதா?'

என்று ஏக்கத்துடன் கேட்டது. இச் சோகக் குரலைக் கேட்டுக் கொண்டிருந்த எல்லா எலிகளும் ஒருவர் முகத்தை ஒருவராகப் பார்த்துக்கொண்டன. கேள்விக்குப் பதிலே இல்லை!

ஒரு எலிஎழுந்தது. கேள்வி கேட்ட எலியிடமே பூனையை ஒழிப்பதற்கான ஆலோசனை கேட்டது......! அந்த எலி:

'தினம் தினமும் விண்பலியாய்ச்
சாவதைவிட
திரண்டுசென்று போர்தொடுத்து
மாள்வதே நலம்!'

'பூனையோ ஒன்று. நாங்களோ பலர். எல்லோரும் ஒன்று திரண்டு போய் நமது கூரிய பற்களால் பூனையைக் கடித்துக் கொண்டுவிடுவோம். ஒவ்வொன்றாய்ச் சாவதைவிட ஒன்றுகூடி எதிர்த்து எமது இனத்தின விடுதலைக்கு வழி வகுப்போம்! அதனுல் வரும் வீர மரணத்தையும் ஏற்றுக் கொள்ளத் தயங்கோம்!' என்று வீர முழக்கம் இட்டது! எலியின் போர் முழக்கம் கேட்ட ஏனைய எலிகளெல்லாம் துள்ளிக் குதித்தன.

'எம்மையே அழித்திடும்
எதிரியை ஒழித்துமே
நம்மையே ஆளுவோம்!
நாமெலாம் கூடியே!'

...என்று பாடிக் கொண்டே பூனையிடம் சென்றன!

எலிகளின் ஆவேசப் பாடலையும், அவைகளின் திரளான கூட்டத்தையும் கண்ட பூனை ஒருகணம் திகைத்தது. மறுகணம் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு நிற்கையில், எலிகளின் கூட்டம் எதிரியை வளைத்துக் கொண்டு தங்களின் கூரிய பற்களால் கடித்துக் காயப் படுத்தின. பூனையும் விடவில்லை. ஒன்று, இரண்டு, மூன்று இப்படிச் சில எலிகளைக் கடித்துச் சாகடித்தது. எலிகளும் மூர்க்கமாகக் கடித்தன. முடிவு...?

பூனையின் வலிமை குறைந்தது, எலிகளின் வலிமை நிறைந்தது. இதைக் கண்ட பூனையும் எடுத்ததே ஓட்டம்! எலிகளுக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை. எல்லா எலிகளும் ஒன்ருக வெற்றிப் பாட்டுப் பாடின.

(முற்றும்)

# தம்பி!

—(அக்கரை உதுமான்)—

தம்பி சின்னத் தம்பி
தலையைச் சீவி ஓடிவா!
கம்பு கையில் இல்லைவா
அண்ணன் வார்த்தை நம்பிவா!

தம்பி உன்னைக் கேட்கிறேன்
நம்பிக் கையாய்ச் செய்துவிடு!
நானிலம் போற்றும்! உன்புகழை
நாடிச் சேரும் நல்லதிரு!

அரிவரி முதலெல்ஸ் ஸெஸ்ஸி
வரை
விரிநிழல் நல்கும் தண்
மொழியை
ஆய்வுரை கண்ட ஆழ்
மொழியை
தேய்பிறை யாகா(து)
காத்திடுவீர்!


அம்மா என்றுநீ அழுதமொழி
அதுவும் இதுவும் சொன்ன
மொழி
இம்மா நிலத்தில் நிலைபெறவே
எம்மா தவமும் செய்திடுவீர்!

கம்பன் வள்ளுவன் ஈன்ற
மொழி
காளி தாசனைக் கண்டமொழி
அம்புவி மீது அரசோச்ச
ஆன்ற கடமை செய்திடுவீர்!

அகில மனைத்தும் கிலுகிலுக்க
அதற்கே உரிய நம்தமிழை
ககிக்க வேண்டும் தம்பிநீ!
எதற்கு மஞ்சா(து) முன்னேறு!

# உங்கள் சிந்தனைக்கு

உனக்கு இருக்கும் கஷ்டத்தையோ குறைகளையோ மற்றவர்களுக்குச் சொல்ல முனையாதே. காரணம் உன் கஷ்டமும் குறைகளும் உனக்குத்தான் பெரிதாகத் தோன்றும். மற்றவர்கள் கஷ்டங்களை திரும்பக் கேட்க விரும்ப மாட்டார்கள்.



# புதுமைகள் பாரீர் பாரினிலே-(8)

—அன்ரனி பெர்ணுண்டோ, கிரிலப்பனை—

## பூனை எலி பிடிக்கும்

"பூனை எலி பிடிக்கும். அது ஒரு வீட்டு மிருகம்." என்று பாலர் வகுப்பிலேயே நாம் பூனையைப் பற்றி படிக்க ஆரம்பித்துவிடுகிறேும். எப்பொழுதும் தன்னைச் சுத்தமாக வைத்துக்கொண்டு, தான் வாழும் இடத்தையும் அசுத்தப்படுத்தாத பல நல்ல குணங்களைத் தன்னகத்தே கொண்ட பிராணி இந்தப் பூனை.

பூனை வளர்ப்பதென்ருல் பலருக்கு அலாதியான ஆவல். எலி பிடிக்கிறதே என்பதால் அல்ல, அதன் அழகுடன் அதனிடம் காணப்படும் உயர்ந்த குணங்களையும பார்த்தே பலர் அதை விரும்பி வளர்க்கின்றனர். தன் செல்வக் குழந்தையை அள்ளி அணைத்து முத்த மழை பொழியும் அன்னையரைப் போன்று பூனையின் மீதும் அன்பு மழை சொரிந்து அதை மார்போடணைத்து வளர்ப்போர் ஏராளம்! ஏராளம்! எவ்வளவு பாக்கியம் பெற்ற பிறவியாக இருக்கிறது பார்த்தீர்களா, பூனை?

பலர் பூனையை அதிர்ஷ்டத்தின் சின்னமென்று கருதித் தம் கார்களிலே அதன் படத்தைத் தொங்க விடுகின்றனர். மற்றும் பலர் அழகிய பூனைகளின் படங்களைச் சுவர்களில் தொங்கவிட்டு மனையலங்காரம் செய்கின்றனர். இப்படியாக உலகின் பல பாகங்களிலும் பெரும்பாலான மனிதர்களைப் பெரிதும் கவர்ந்துள்ள பூனையின் அதிர்ஷ்டம் மத்திய ஐரோப்பாவில் தலைகீழாக இருக்கிறது. அங்குள்ளோர் பூனை பேய்ப் பார்வை உள்ளதெனக் கருதி அதைக் கண்ட இடத்தில் அருவருப்புடன் அடித்துக் கொன்றுவிடுகின்றனர். பாவம்!

அண்டவெளியை எட்டிப்பிடிப்பதை விடச் சிரமமான ஒரு செயல்தான் எலியைத் துரத்திப் பிடிப்பது. பூனை மெள்ளப் பதுங்கிப் பாய்ந்து 'லபக்' கென்று பிடித்துவிடுகிறது எலியை. அதன் திறமையே திறமை!

பூனையின் திறமை எலி பிடிப்பதோடு நின்று விடவில்லை. விஞ்ஞான ஆராய்ச்சித் துறையிலே முன்னணியில் நிற்கும் நாடான அமெரிக்காவிலேயே மாபெரும் அணைக்கட்டு வேலையொன்றில் வல்லுனர்கட்குப் பூனை உதவியதென்ருல், பாருங்களேன், அதன் பெருமையையும் திறமையையும்!

அணைக்கட்டு வேலையில் நெளிவுசுளிவுகள் நிறைந்த ஓர் இரும்புக் குழாயினூடே ஒரு கம்பியைச் செலுத்தி, மறுபக்கத்தால் வெளியே எடுக்க வேண்டியிருந்தது. அதையெப்படிச் செய்வதென்று பொறியியல் வல்லுனர்கள் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டு நீண்ட நேரம் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தனர். அப்போதுதான், பூனை இதை மிக எளிதாய்ச் சாதித்துவிடும் என்ற ஞானேதயம் அவர்களுக்கு உண்டாயிற்று. உடனே ஒரு பூனையை வரவழைத்து அதன் கழுத்திலே கம்பியின் ஒரு முனையைக் கட்டி குழாயினுள் விட்டனர்- பூனை குழாயினூடே நடந்துசென்று மறுபக்கத்தால் வெளியே வந்து அந்தச் சிக்கலான பிரச்சினையை எளிதில் தீர்த்துவிட்டது!

ஆபிரிக்காவில் கெய்ரோ நகருக்குக் கப்பலில் அனுப்பப்பட்ட சாமான் பொதிகள் சிலவற்றினிடையே தவறுதலாகப் புகுந்துவிட்ட ஒரு பூனை 21 நாட்கள் ஆகாரமின்றி உயிரோடு இருந்தது. அது ஒரு கர்ப்பிணிப் பூனை. 41 நாட்களின் பின் கப்பல் கெய்ரோவை நெருங்கியபோது அப் பூனை நான்கு குட்டிகளை ஈன்றெடுத்திருந்தது. மற்ற நாட்களில் அப் பூனை இயந்திரத்தின் பாகங்களுக்குப் பூசப்படும் 'கிறீஸ்' (Grease) என்ற எண்ணெய்க் கொழுப்பைத் தின்றிருந்தது. புதுமையான பிராணியன்ருே இந்தப் பூனை!

# என் முன் கடவுள் வந்தால்...

செல்வி தி. மதுரம், வெள்ளவத்தை.

சென்ற வாரம் ஒரு சகோதரி தனக்கு முன் கடவுள் வந்தால் தான் கேட்பதை எழுதியதைக் கண்ட நான் எனக்கு முன் கடவுள் வந்தால்......நான் எதைக் கேட்பது என்று சிந்தித்தேன். எவ்வளவோ தேவை!

ஆனுல் கடவுள் சொல்வார்—ஒரு வரம் தான் கேட்கலாம் என்று. அப்போது, நான் என்ன வரத்தைக் கேட்பது? ஆகா கிடைத்து விட்டது!

'இறைவா!'

'தமிழ்க் குழந்தைகளாகிய நாமும் எமது வருங்கால சந்ததியினர் அனைவரும் தீந்தமிழைத் தடையின்றிக் கற்று எமது புகழை எட்டுத் திக்கும் பரவச்செய்து நாட்டில் சுதந்திரப் பறவைகள் போன்று வாழ வரம் தர வேண்டும்' என்று கேட்டு இரு கரங் கூப்புவேன்.

அப்போது இறைவன் புன்னகை செய்து 'மகளே! உனது வரத்தைப் பெற்றுக்கொள்' என்பார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## பண்டாரவளையில் மீலாத் விழா

சாஹிரா பழைய மாணவர் ஏற்பாடு

ஞாயிற்றுக் கிழமை (14-6-64) சாஹிரா பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் பண்டாரவளை சாஹிரா மகா வித்தியாலய மண்டபத்தில் கூடிய பொழுது கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

சாஹிரா மகாவித்தியாலயத்தின் தலைமையாசிரியர் ஜனுப் எச். எச் எம். யாசீன் அவர்கள் அதே வித்தியாலய அதிபராகப் பதவி உயர்வு பெற்றதற்காக அவருக்கு ஒரு பாராட்டு விழா நடாத்துவது:

எதிர்வரும் 25—7—64 சனிக்கிழமையன்று பழைய மாணவர் சங்க சார்பில் ஒரு பெரும் மீலாத் விழா (நபி (ஸல்) அவதார விழா) சாஹிராப் பாடசாலையில் நடாத்துவது. பாராட்டு விழாவினையும் இவ் விழாவுடன் இணைத்தே நடாத்துவது:

மேற்படி விழாவிற்காகப் பண்டாரவளைக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே பேச்சு, கட்டுரை, இசைப் போட்டிகளை நடாத்துவது.

போட்டி பற்றிய விபரங்கள் வேண்டுபவர்கள் கீழ் வரும் முகவரிக்கு எழுதவும்'

செல்வி நயீமா ஏ. பசீர்,
(விழாச் செயலாளர்)
50/4, புகையிரத நிலைய வழி,
அப்புத்தளை.

## ஈழத் திராவிடர் முன்னணி

### புதிய உத்தியோகத்தர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை (7-6-64) ஈழத் திராவிடர் முன்னணியின் ஆட்சிம் பொதுக் குழுக் கூட்டப் பணிமனையில் திரு. எம். ஏ. மணிமாறன் தலைமையில் நடைபெற்றது. தலைவரின் தலைமையுரைக்குப் பின்னர் நடப்பு ஆண்டிற்கான அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இவ்வாண்டின் பொதுச் செயலாளராக மீண்டும் திரு. எம். ஏ. மணிமாறன் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். மேலும் தலைமை நிலையச் செயலாளராகத் திரு. கம்பனைதாசனும், பொருளாளராக ஜனுப் நிசாரும், ஐந்து ஆட்சிக் குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டத்தில், இவ்வாண்டு இறுதியில் அறிவுலக மேதை இங்கர்சாலின் நினைவு விழாவினை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்குவதில் நீதியுடனும் நேர்மையான எண்ணத்துடனும் நடந்து கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுவதென்றும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதியில் திரு. கம்பனைதாசவின் நன்றியுரையுடன் கூட்டம் முடிந்தது.

## சிறுவர் கலைக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம்

கடந்த சனிக்கிழமை (13-6-64) அன்று அப்புத்தளையில் ஓர் சிறுவர் கலைக் கழகம் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது. நடப்பு வருட உத்தியோகத்தினர் விபரம்:

தலைவர்: செல்வன் கா. காசிம், உப-தலைவி: செல்வி அ. சம்சாத் பேகம், செயலாளர்: செல்வன் மூ. சுப்பிரமணியம், உப-செயலாளர்: செல்வி ப. ஜெயலட்சுமி, பொருளாளர்: செல்வன் ஜாபீர் ஏ. பசீர், உப-பொருளாளர்: செல்வி எம். மனோ ராணி, பாதுகாவலர்கள்: க. கந்தசாமி, மு. கார்த்திகேயன், செல்வி நயீமா ஏ. பசீர், செயற் குழுவினர்: செல்வர்கள்: எம். ஜேம்சன், அன்வர்கான், ஜே. ஹனிபா, அ. துவான் பாரிஸ், செல்விகள்: ஞானசௌந்தரி, மர்லியான், மகாலட்சுமி.

## கல்முனை இளங்கோ இலக்கிய மன்றம்

கல்முனை வட்டார இளங்கோ இலக்கிய மன்றத்தினரின் முதலாவது பொதுக் கூட்டம் தலைவர்: கா. அழகரெட்ணம் அவர்களின் தலைமையின் கீழ் கடந்த 21-6-64ல் கல்முனை கடற்கரையில் நடைபெற்றது. அப்பொழுது தலைவர் அவர்கள் மன்றத்தின் கடமைகளைக் கவனிக்கும்பொருட்டு இரு செயலாளர்களைத் தெரிவுசெய்யுமாறு சபையை வேண்டிக்கொண்டார். அதற்கிணங்க அங்கத்தவர்கள் செல்வன். இ. கோபால் அவர்களையும், நீ. செல்வராசா அவர்களையும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்தனர். பின்னர் மன்றத்தின் நிதிநிலைமைகளைக் கவனிக்கும் பொருட்டு திரு. த. அருள் அவர்களைச் சபையோர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்தனர்.

அங்கத்தவர் பட்டியல்:

திருவாளர்கள்: செ. பேபி கிருஷ்ணன், பா. நடராசா, அ. முருகுப்பிள்ளை, செ. பாலகிருஷ்ணன், பூ. ஜெகநாதன், சா. கோணநாயகம், க. முத்துரெட்ணம், செ. பேரின்பராசா, வெ. விநயகமூர்த்தி, ச. சந்திரப்பிள்ளை.

## சுகாதார வார விழா

தாராக்குண்டு முஸ்லிம் மகாவித்தியாலயப் பழைய மாணவர் கழகத்தின் ஆதரவில் சென்ற 11-6-54ல் சுகாதார வார விழா கொண்டாடப்பட்டது. விழா நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் பாடசாலை மாணவருக்கான சைக்கிளோட்டப் போட்டி நடைபெற்றது. அடுத்து சிரமதான தொண்டர்களால் வீடுகள்தோறும் சிறுபிள்ளை மலகூடங்கள் அமைக்கப்பட்டன. இறுதி நிகழ்ச்சியாக வித்தியாலய மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

## இரத்தினபுரியில் வள்ளுவர் விழா

இரத்தினபுரி நகரசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில் மன்றத் தலைவர்: திரு. ஆனந்த பிலிப் தலைமை வகித்தார். கவிதை அரங்கில் கவிஞர்கள் மு. பொன்னம்பலம், க. சிவரத்தினம், 'பாண்டியூரன்'. ஆ. லோகேஸ்வரன், வி. இராமச்சந்தர், மு. சடாட்சரன் போன்றோர் பங்குபற்றினர். இரத்தினபுரி புனித லூக்ஸ் கல்லூரி ஆசிரியர் திரு. சி திருநாவுக்கரசு சிறப்புரை வழங்கினார்.

'எனக்குப் பிடித்த அறம்' என்ற தலைப்பில் திருவாளர்கள்: ப. ஜீவரத்தினம், க. மகாலிங்கம், கே. இராசரத்தினம், க. தம்பு, வே. சுப்பிரமணியம் போன்றோர் உரையாற்றினார்கள்.

திருவாளர்கள்: ந. பாலசுப்பிரமணியம், ஆ. [illegible] சிகாமணி, மதுரை [illegible] வேல் போன்றவர்களும் மாணவர்கள்: செல்வன். பிரகலாதன் இரத்தினதுரை, எம். முனியாண்டி, ஐ. ரா. தேவராயன், கோ. நம்பியார், கெ. செல்வராசு. மாணவிகள்: க. இராசலெட்சுமி, பெ. கணதேவி, ந. பத்மாவதி ஆகியோரும் கலந்து தமது இசை, நடன நிகழ்ச்சிகள்மூலம் விழாவைச் சிறப்பித்தனர்.

மன்றச் செயலாளர் திரு. தா. இராமலிங்கம் பீ. ஏ. நன்றி நவின்றார்.

## இயற்கை எய்தியவருக்கு இறுதி பிரார்த்தனை

கடந்த 7-6-64 அன்று காலை எட்டுமணியளவில் ஆசியாவின் ஜோதி, இந்த அகிலத்தையே வழிநடத்திய மாபெரும் தலைவர், மக்கள் குல மாணிக்கம், மங்காத ஒளிச்சுடர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக வட்டவளை நகர மைதானத்தில் அனுதாப பிரார்த்தனை நடைபெற்றது.

கூட்டத்திற்கு, மஸ்கெலியா பாராளுமன்ற உறுப்பினர் திரு. எட்மன்ட் விஜயசூரியா தலைமை வகித்தார் கூட்ட ஆரம்பத்தில் சிங்கக்கொடியும், காங்கிரஸ் கொடியும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

மனிதகுல மாணிக்கத்திற்கு அனுதாபம்தெரிவிக்கு முகமாக, இரண்டு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டித்தனர்.

கூட்டத்தில் பேசியவர்கள்: எட்மன்ட் விஜயசூரியா, மௌலவி மீராமொஹிதீன், டாக்டர். ஈ வி. பஸ்டியன் பிள்ளை, தர்மரட்ன, ஆர். சிவலிங்கம் எம். ஏ., வி. கே. வெள்ளையன், கே. டி. சண்முகம் பீ ஏ., பீ. கே. செல்லத்துரை. காமாட்சிசுந்தரத்தின் நன்றி உரையுடன் கூட்டம் முடிவுற்றது.

## நிர்வாகசபைக் கூட்டம்

உனுப்பிட்டி அரசினர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றோர் ஆசிரிய சங்க நிர்வாக சபைக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. பொ. நடராசா அவர்கள் தலைமையில் 14-ந் திகதி நடைபெற்றது.

மூவர் கொண்ட ஒரு குழுவும்தெரிவுசெய்யப்பட்டது.

## முப் பெரியார் விழா

உனுப்பிட்டி அரசினர் இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில், தலைமையாசிரியர் திரு. பொ. நடராசா தலைமையில் திருவள்ளுவர், பாரதிதாசன், நேரு ஆகிய முப் பெரியார் விழா கொண்டாடப்பட்டது.

# நினைத்ததும் நடந்ததும்

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

'எங்கே உங்களிடம் கிடைத்துவிடாதோ என்று பயந்துவிட்டேன்' என்றவள் நிலத்தை நோக்கினாள்.

'விஜயா' காதலில் குழைந்து எழுந்தது அவன் குரல்.

'உம்' கனவில் இருந்து விழித்தவளாய் அணுகினாள்.

ஆசிரியை வருவதைக் கண்டதும் 'டீச்சர் வருகிறார்கள் பிறகு சந்திப்போம்' துள்ளியோடும் புள்ளி மானாய் ஓடினாள். கிருஷ்ணன் எல்லையில்லா மகிழ்வோடு இடம் பெயர்ந்தாள்.

இவற்றையெல்லாம் யாரும் அறியாவண்ணம் நோட்டம் விட்டுக் கொண்டிருந்த மூன்று உருவங்கள் பெருமூச்சுவிட்டன. அவ்வுருவங்கள் வேறு யாருமல்ல சுந்தர், இராசு, பாரதி ஆகியோர்தான். இராசுவும், பாரதியும் ஏளனத்தோடு சுந்தரை நோக்கினர். சுந்தர்:

'கொஞ்சம் பொறுங்க இதோ வருகிறேன்' வீட்டை நோக்கி ஓட்ட மெடுத்தான். சிறிது நேரத்தின் பின் இளைக்க, இளைக்க ஓடி வந்த சுந்தர் 'தங்கச்சியின் புத்தகங்கள்எல்லாம்தேடி கடைசியில் லாச்சியில் வைத்திருந்த அவள் தையல் பெட்டியில் கிடைத்தது இது' என விஜயா உண்மையில் கிருஷ்ணனுக்கு எழுதிய கடிதத்தைக் கொடுத்தான். வாசித்துப்பார்த்து வாயைப் பிளந்தனர்.

'நாம் நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று'' என்று நகத்தைக் கடித்தான் பாரதி.

'ஆரம்பரமில்லாத அடக்கமான காதல் வாழ்க!' இது இராசுவின் வாழ்த்தொலி.

'ஏன்டா முகத்தைச் சுளிக்கிறே, உனக்குக் கிட்டல்லையே என்ற பொறாமையா?" என்று பேதலித்துப் போன சுந்தரிடம், பாரதி கேட்டான். 'போடா நீயொருவன்' பெருமூச்சுடன் சுந்தர் அலுத்துக் கொண்டான்.

(யாவும் கற்பனை)

# 'தமிழரசுக் கட்சி முஸ்லிம்களைக் கைவிடாது'

—டாக்டர் நாகநாதன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டம், கிண்ணியா கிராமக் கோட்டைமைதானத்தில், கிராம சங்கத் தலைவர் ஜனுப் ற. லெ. அப்துல் சமது தலைமையில் நடைபெற்றபோது, இலங்கைத் தமிழரசுக் கட்சிக் காரியதரிசியான டாக்டர் நாகநாதன் எம். பி. பேசுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

"தமிழரசுக் கட்சி ஒரு விடுதலை இயக்கம். அக் கட்சி தமிழ், முஸ்லிம் மக்களைப் பாகுபாடு இல்லாமல் நடத்தி வருகிறது. மூதூர் இரண்டாவது பிரதிநிதி ஜனுப் மஜீது போன்றவர்கள் இக் கட்சிக்கு எதிராகவும், கட்சி நியமன சம்பந்தமாகவும் பகிரங்கமாகப் பேசி வருவதாக நானறிந்தேன். தமிழரசுக் கட்சியைப் பற்றியும், நியமனங்களைப்பற்றியும் பேசுவதற்கு அவர்கள் யார்? அவர்களைப் பற்றி எனக்கும், அமைச்சர்களுக்கும், ஊர் மக்களுக்கும் நன்கு தெரியும். அவர்களின் பித்தலாட்டங்கள் மக்களின் முன் அம்பலமாகும் நாள் வெகு தூரத்திலில்லை. தமிழரசுக் கட்சி ஒருபோதும் முஸ்லிம் மக்களைக் கைவிடாது. ஜனுப் முஹம்மதலி போன்றவர்கள் இக் கட்சிக்கு என்றும் தேவை''

திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. பேசுகையில், அத்தொகுதி மக்களின் செல்வாக்கு ஜனுப் முஹம்மதலிக்கே உண்டு என்றும், அடுத்த தேர்தலிலும் அவரே தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடுவார் எனத்தான் நம்புவதாகவும், ஜனுப் மஜீதின் அரசியல் அஸ்தமனம் அண்மிவிட்டது என்றும் கூறி அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு இழைத்துவரும் அநீதிகளைப் பற்றியும் எடுத்துக் கூறினார்.

தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திருகோணமலை பா. உ. சு. மாணிக்கராசா, மூதூர் முதல் பா. உ. ஜனுப் எம். ஈ. எச். முஹம்மதலி, திரு. வின்சென்ட் ஆசிரியர், திரு. கைலாயப்பிள்ளை, அட்வகேட் கதிரவேற்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

நீர்கொழும்பு மாநகரசபையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட சுகாதார வாரத்தின் ஒரு அங்கமாக சிரமதான இயக்கமும நடைபெற்றது. சிரமதானத் தொண்டர்களாக வாலிப முற்போக்குச் சங்கத்தினர் புறப்படுவதையும், நகரபிதாவின் பாரியாரும் மிருந்து முதற் பரிசை சங்க உபதலைவர் திரு பொன வெஞ்சர் லீமா பெறுவதையும் படங்களில் காணலாம்.




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெள்ளி 10ம் திகதி முதல்!

எல்பின்ஸ்டன் ரொக்ஸி

மற்றும் திரைகளிலும்!

யாழ்ப்பாணம் வின்ஸர் திரையில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!



எம். ஜி ராமச்சந்திரன்
தேவிகா, அசோகன்,
ராதா, மனோரமா, வீரப்பா,
ராமதாஸ், கமலஹாசன்
நடித்த

# ஆனந்த ஜோதி

பாடல்கள்: கண்ணதாசன் இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி
பின்னணி: சௌந்தரராஜன்—சுசீலா—ஈஸ்வரி

எதிர்பாருங்கள்!

சிவாஜி கணேசன்—ஜெமினி கணேசன்—சாவித்திரி
சந்திரகாந்தா—சந்திரபாபு—எம். வி. ராஜம்மா—ரங்கராவ்
தோன்றும்!

# பந்தபாசம்

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெயிட்டி

ஜெமினி கணேசன்—சாவித்திரி—விஜயகுமாரி—அசோகன்
சந்திரபாபு—எம். வி. ராஜம்மா
தோன்றும்

# பாத காணிக்கை

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால்

அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க!


சிவாஜி கணேசன்—வைஜயந்திமாலா
சரோஜாதேவி—தங்கவேலு—ரங்கராவ்—சுப்பையா
தோன்றும்

ஜெமினியின்

# இரும்புத் திரை

(புத்தம் புதிய கொப்பி)

வெற்றிகரமான 2வது வாரம்!



கெப்பிட்டல் [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
நவா [கொம்பனி வீதி]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு]
ஸ்ரீ கிருஷ்ணா [திருகோணமலை]
மொடேர்ன் [பதுளை]
விஜிதா [அட்டன்]

எஸ். எஸ். ஆர், விஜயகுமாரி, மணிமாலா நடித்த

# தெய்வத்தின் தெய்வம்

டைரக்‌ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன் இசை: ஜி. ராமநாதன்

7வது வாரம்

# நானும் ஒரு பெண்

கிங்ஸ்லி (கொழும்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பண்டாரவளை)



டைரக்‌ஷன்: A.C. திருலோகசந்தர் M.A.
வசனம்: ஆரூர்தாஸ் இசை: R. சுதர்சனம்



MB





# கொலை......!

## பயங்கரப் படுகொலை....!

யார் கொலையாளி........?

வழக்கை விசாரித்த நீதிபதியே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகிறார்!

குற்றஞ் சாட்டுபவர் நீதிபதியின் மருமகன்!

சிக்கல் நிறைந்த மர்மச் சித்திரம்!

பி. ஆர். சோப்ரா அளிக்கும்





# கானூன் (இந்தி)

அசோக்குமார், ராஜேந்திரகுமார், மஹ்மூத், நந்தா, சஷிகலா
முதலியோர் நடித்தது.

(மருதானை) சென்ட்ரல் திரையில் 2வது வாரமாகக் காண்பிக்கப்படுகிறது!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் யூலை மாதம் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.